# உழைப்பாளி தொழிலாளி பாட்டாளி



அறிஞர் அண்ணா

# வெல்க தமிழ்!

# மணிவாசகர் பதிப்பகம் வழங்கும் நூற்கொடை

2-2-2002

பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம்
படிப்பகம், நூலகம், ஆய்வு நிறுவனங்கள்
முதலிய அமைப்புக்களுக்கு, ஆண்டுதோறும்
அன்பளிப்பாக நூல்வழங்கும் திட்டத்தில்

சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்

---

நடத்தும்

---

மறைமலை அடிகள் நூலகத்திற்கு

---

*வழங்கிய நூல் எண்ணிக்கை* **500**

MIT

**மணிவாசகர் பதிப்பகம்**

**மெய்யப்பன் தமிழாய்வகம்**

53, புதுத்தெரு, சிதம்பரம் - 608 001.

XA - 276

# உழைப்பாளி
# தொழிலாளி
# பாட்டாளி

51427

பேரறிஞர்

அண்ணா

LIBRARY
சென்னை-1

மணிவாசகர் பதிப்பகம்
8/7 சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : 24, சூலை, 1999
திருவள்ளுவர் ஆண்டு : 2030
**விலை ரூ. 20.00**
மணிவாசகர் வெளியீட்டு எண் : 694

## பதிப்பாசிரியர்
### *டாக்டர் ச. மெய்யப்பன்*

டாக்டர் ச. மெய்யப்பன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றியவர்; திருக்குறள் இயக்கம், திருமுறை இயக்கம், தமிழிசை இயக்கம், தமிழ்வழிக்கல்வி இயக்கம் முதலிய தமிழியக்கங்களில் முழுமூச்சுடன் ஈடுபட்டு உழைப்பவர்; தமிழகப் புலவர் குழுவின் துணைத் தலைவர்; பல்கலைக் கழகங்களின் பதிப்புக்குழு உறுப்பினராகச் சிறப்பாகச் செயலாற்றி வருபவர். இவர், தமிழ் நாட்டில் பல பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்; பதினாறு நூல்களின் ஆசிரியர். இவர் எழுதிய 'தாகூர்' நூல் தமிழக அரசின் முதற் பரிசு பெற்றது. தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் சாதனைகள் பல புரிந்த செம்மலாகிய இவர், துறைதோறும் தமிழுக்கு ஆக்கம் தரும் நல்ல நூல்களைச் செம்பதிப்பாக வெளியிடுவதைத் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். இவருடைய தமிழ்ப் பணியைப் பாராட்டிக் குன்றக்குடி அடிகளார், 'தமிழவேள்' என்னும் விருதினை வழங்கியுள்ளார். குளித்தலை கா.சு. பிள்ளை இலக்கியக்குழு, 'தமிழ் நெறிக் காவலர்' என்னும் விருதினை அளித்து இவரைச் சிறப்பித்துள்ளது. பதிப்புச் செம்மல் என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம் :
**மணிவாசகர் நூலகம்**
12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608 001.
8/7, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.
28-A, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625 001.
15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641 001.
28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620 002.

தொலைபேசி :
**சிதம்பரம் : 30069** **சென்னை : 5361039**
**மதுரை : 622853** **கோயமுத்தூர் : 397155**
**திருச்சி : 706450**

ஒளி அச்சு : லட்சுமி லேசர், சென்னை - 600 108.
அச்சிட்டோர் : ஸ்டெட்பாஸ்ட் பிரஸ், சென்னை - 600 013.

# அறிஞர் அண்ணாவின் வாழ்க்கைக் குறிப்புகள்

## சி.என். அண்ணாதுரை

| | | |
|---|---|---|
| தோற்றம் | - | 15 - 9 - 1909 |
| தந்தை | - | நடராசன் |
| தாய் | - | பங்காரு அம்மாள் |
| பிறந்த ஊர் | - | சின்ன காஞ்சிபுரம் |
| வாழ்க்கைத் துணை | - | இராணி அம்மையார் |
| புனைபெயர் | - | சௌமியன், சமதர்மன், சம்மட்டி, ஒற்றன், ஆணி, பரதன் |
| 1929 - 1934 | - | சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. ஆனர்சு பொருளியல் பட்டப்படிப்பு |
| 11-2-1934 | - | முதல் சிறுகதை 'கொக்கரகோ' ஆனந்த விகடனில் வெளிவந்தது |
| 1-2-1936 | - | சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் 'பார்ப்பனர் அல்லாதார் இயக்கமும் காங்கிசும்' பற்றிச் சொற்பொழிவு. |
| 1936 | - | சென்னை மாநகராட்சித் தேர்தலில் நீதிக்கட்சி உறுப்பினராக நிற்றல். |
| 11-4-1937 | - | நீதிக்கட்சிச் செயற்குழு உறுப்பினராதல் |
| 1937 | - | விடுதலை, குடிஅரசு இதழ்களில் துணை ஆசிரியர் பணி |
| 9-12-37 | - | முதற்கவிதை, 'காங்கிரஸ் ஊழல்' விடுதலையில் |
| 26-9-38 | - | இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மக்களைத் தூண்டிவிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு நான்கு மாத வெறுங்காவல் |

13-1-39 - தமிழுக்காக உயிர்நீத்த நடராசன் இறுதி ஊர்வல நாள் இரங்கற் கூட்டத்தில் உரை

18-1-39 - தமிழர் திருநாள் உரை நிகழ்த்துதல்.

10-2-39 - சென்னை கிறித்துவக் கல்லூரியில் இந்தி எதிர்ப்புச் சொற்போர்

6-1-40 - பம்பாயில் பெரியார் - அம்பேத்கார் உரையாடல்: மொழிபெயர்ப்பு

2-6-40 - காஞ்சியில் திராவிட நாடு பிரிவினை மாநாடு

7-3-42 - 'திராவிடநாடு' கிழமை இதழ் தொடக்கம்

14-3-43 - சேலத்தில் நாவலர் பாரதியாருடன் கம்பராமாயணச் சொற்போர்.

5-6-43 - 'சந்திரோதயம்' நாடகம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் நடத்தல்.

19-8-44 - சேலத்தில் நீதிக்கட்சி மாநாடு - அண்ணாதுரை தீர்மானம் - நீதிக்கட்சி, திராவிடர் கழகம் எனப்பெயர் மாற்றம் பெற்று மக்கள் இயக்கமாக மலர்தல்.

15-12-45 - 'சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்' நாடக அரங்கேற்றம் - அண்ணா நடித்தல்.

மே 1946 - கருஞ்சட்டைப்படை மாநாடு - தந்தை பெரியாருடன் கருத்து வேறுபாடு

29-7-46 - நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் பாவேந்தருக்குப் பொற்கிழி வழங்கல்

25-4-47 - 'வேலைக்காரி' நாடகம்.

1-6-47 - 'நீதிதேவன் மயக்கம்' நாடகம்.

15-8-47 - ஆகஸ்டு பதினைந்து 'விழா நாளே' என விளக்கம் தருதல்.

| | | |
|---|---|---|
| 28-9-47 | - | தந்தை பெரியார் 69 வது பிறந்தநாள் சிறப்புக் கட்டுரை 'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்.' |
| 14-1-48 | - | 'நல்ல தம்பி' திரையிடல் |
| 18-6-49 | - | தந்தை பெரியார் - மணியம்மை திருமணம். அண்ணா பிரிந்து நிற்றல். |
| 10-8-49 | - | 'மாலைமணி' - நாளிதழ் ஆசிரியர். |
| 17-9-49 | - | தி.மு.க. தோற்றம் |
| 18-9-49 | - | 'திராவிட நாடு' இதழில் 4, 18-4-48இல் வரைந்த கட்டுரைக்காக வழக்கு. நான்கு மாதச் சிறைத் தண்டனை ஏற்றல்; அரசுக்கு எதிர்ப்பு; பத்தாம் நாள் விடுதலை. |
| 12-1-50 | - | நாடெங்கும் பொங்கல் விழா - உழவர் விழா எடுக்க அறிக்கை விடல். |
| 1950 | - | திருச்சிச் சிறையில் 'இலட்சிய வரலாறு' எழுதுதல். |
| 1951 | - | 'ஆரியமாயை' நூலுக்குத் தடை |
| 17-9-51 | - | திராவிட நாடு பிரிவினை நாள் அறிவித்தல். |
| 16-12-51 | - | தி.மு.க. முதல் மாநில மாநாடு. |
| 1-8-52 | - | சென்னையில் இந்தி எதிர்ப்பு அறப்போர் |
| 15-6-53 | - | 'நம்நாடு' நாளிதழ் தொடக்கம். |
| 13-7-53 | - | மும்முனைப் போராட்டம் - மூன்று மாதம் சிறை |
| 2-2-56 | - | தேவிகுளம், பீர்மேடு இணைப்புக்காகப் பொதுவேலை நிறுத்தம். |
| 29-4-57 | - | தமிழ்நாடு சட்டமன்றத் தி.மு.கழகத் தலைமை ஏற்று, எதிர்க்கட்சித் தலைவர் ஆதல். |

| | | |
|---|---|---|
| 9-6-57 | - | 'ஓம் லேண்டு' ஆங்கிலக் கிழமை இதழ் தொடங்குதல் |
| 2-3-58 | - | தி.மு.கழகத்தினை மாநிலக் கட்சியாக இந்திய அரசு ஏற்புதல் அளித்தல். |
| 24-4-59 | - | அண்ணாவின் தம்பியர் சென்னை மாநகராட்சி மன்ற ஆட்சியில் அமர்தல். |
| 1-8-60 | - | இந்தி எதிர்ப்பு மாநாடு செங்கையில் அண்ணா தலைமை உரை |
| 1962 | - | சம்பத் விலகல் குறித்து அண்ணா அறிக்கை |
| 26-2-62 | - | சட்டமன்றத்திற்குத் தம்பியர் ஐம்பதின்மர் செல்ல, அண்ணா, நாடாளுமன்ற மேலவை உறுப்பினராதல். |
| 2-8-62 | - | விலைவாசி உயர்வுப்போர் - வேலூர் சிறையில் பத்து வாரம். |
| 17-11-63 | - | கட்டாய இந்தி - 17வது மொழிப் பிரிவு சட்டம் எரித்தல்; 16-11-63 அன்றே கைதாகி, ஆறுமாதம் சிறைத்தண்டனை ஏற்றல். |
| 1-3-67 | - | தமிழ்நாட்டுச் சட்ட மன்றத்தில் 138 பேர் தம்பியருடன் அண்ணா தமிழக முதல்வர் ஆதல். |
| 14-4-67 | - | 'தமிழ்நாடு' பெயரிட்டுப் பெருமை பெறல் |
| 10-1-68 | - | இரண்டாவது உலகத்தமிழ் மாநாடு எடுத்தல் |
| 8-9-68 | - | அண்ணாமலைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்குதல் |
| 4-1-69 | - | கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் சிலை திறப்பு விழாவில் கடைசிச் சொற்பொழிவு. |
| 2-2-69 | - | புகழ் உடம்பெய்தல். |

# அணிந்துரை

சோழன் குலோத்துங்கனுக்குக் 'கலிங்கத்துப் பரணி' பாடினார் ஜெயங்கொண்டார். அவரது திருப்பெயரைக் கொண்ட ஜெயங்கொண்டத்தில் அண்ணாவுக்குத் தம் இளம் வயதிலேயே பரணி பாடி அண்ணாவால் எழுத்து வேந்தனாக வருவார் என வாழ்த்துப் பெற்ற தோழர் கோ. குலோத்துங்கன் எழுத்துலகில் மட்டுமல்ல; தொழிற்சங்கத் துறையிலும் தனி முத்திரை பதித்து சிம்சன் தொழிற்சங்கப் பொதுச்செயலாளராகப் பணியாற்றியவர். அதனாலேயே முதலாளித்துவ கழுகின் கூறிய நகங்களாலும், கொத்தும் அலகாலும் தாக்கப்பட்டவர். இடையறாத போராட்டத்தில் துவளாமல் நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் பத்தாண்டுகளுக்கு மேல் ஏறி வெற்றிக் கனியைப் பெற்றவர். இப்படி எழுத்திலே மட்டுமின்றி இயல்பிலும் வாழ்விலும் போராளியாக உலா வரும் குலோத்துங்கன் அறிஞர் அண்ணாவின் எழுத்துக்களில் இருந்தும், பேச்சுக்களிலிருந்தும் பாட்டாளிகள் பற்றிய வரிகளைத் தொகுத்து 'பாட்டாளிகள்பற்றி அண்ணா' என்ற உன்னத நூலைக் கொணர்ந்துள்ளார்.

1987-இல் முதற்பதிப்பாக வந்த இந்நூல் இப்பொழுது இரண்டாம் பதிப்பாக வெளிவருவது மகிழ்ச்சிக் குரியதாகும். பாட்டாளிகள் பற்றிய எண்ணற்ற செய்திகளையும், அண்ணாவின் சிந்தனைகளையும் அழகுறத் தொகுத்து வழங்கியுள்ள முறை ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலத்திற்குத் தக்க சான்றாகும்.

ஆசிரியரின் அரும்பணிக்குத் தமிழகப் பாட்டாளிகள் தந்துள்ள அங்கீகாரத்திற்கு அடையாளமாக மேலும் பல பதிப்புகள் இந்நூல் வெளிவரவும் மேலும் இதுபோன்ற எண்ணற்ற தொகுப்புகளைத் தோழர் குலோத்துங்கன் கொணர்ந்து எழுத்துலகில் தனிச் சிறப்பு பெறவும் என் இதய வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி யடைகின்றேன்.

**'தாயகம்'**
20-07-1999.

**வைகோ,**
பொதுச்செயலாளர்,
ம.தி.மு.க.

# வாழ்த்துரை

**எல். கணேசன், பி.ஏ., பி.எல்.,**
அவைத் தலைவர்,
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்.

*கடந்தகாலமின்றி நிகழ்காலம் இல்லை. நிகழ்காலமின்றி எதிர்காலம் இல்லை. எதிர்காலத்திற்குத் திட்டமிடுகிற யாரும், எந்தக் கட்சியும், எந்த நாடும், எந்த இனமும் நிகழ்காலத்தில் கால் ஊன்றி, கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்து, எதிர்காலத்தை ஊடுருவி நோக்கித் திட்டமிட வேண்டும்.*

*தமிழ்நாட்டிற்கு, தமிழ் இனத்திற்கு எதிர்கால முன்னேற்றத்திற்குத் திட்டமிடும் யாரும் இந்தவழி முறையைக் கடைப்பிடித்தே ஆக வேண்டும். தமிழ்நாட்டின் கடந்த காலத்தை ஆய்வு செய்கிற நூல்கள் திராவிட இயக்கத்தில் தமிழர்களின் எழுச்சிக்கும் ஏற்றத்திற்கும் அரும்பாடுபட்ட அறிவுலக மேதை அண்ணாவை ஆய்வு செய்வது தவிர்க்க முடியாதது.*

*திராவிட இயக்கத்தில் பலதுறைகளில், முனைகளில், சாதனைகள் புரிந்தவர் அண்ணா. 1937 தேர்தலில் தோற்று நிர்மூலமாகிப்போன அவ்வியக்கத்தை 30 ஆண்டுகள் இடைவிடாது போராடி 1967ல் அரியணையில் அமரச் செய்தார் அண்ணா. அறிஞர் அண்ணா பல்துறை அறிஞர்* (Versatile), *மேதை* (Genius) *என்பதை எனது ஆருயிர்ச் சகோதரர் தீர்மானக்குழுச் செயலாளர் குலோத்துங்கன் அவர்கள் நமக்கு இந்நூலில் விளக்குகிறார்.*

*நூலாசிரியர் குலோத்துங்கன் அவர்கள் திராவிடப் பேரியக்கத்தில் நீங்கா இடம் பெற்றவர். அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் அளப்பரிய அன்பு கொண்டவர். தொழிலாளர் இயக்கத்தில் நீங்கா ஈடுபாடு கொண்டவர். தொடர்ந்து பணியாற்றி வருபவர். எனவே அண்ணா*

அவர்களின் தொழிலாளர் இயக்க ஈடுபாட்டையும், தொடர்பையும் அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சில், எழுத்தில் இருந்து தொகுத்து இந்நூலில் அளித்துள்ளார். இந்த முயற்சி திராவிட இயக்கத்திற்குச் செய்யும் பெரும்பணியாகும்.

தெளிவற்று குழப்பமுற்று தடுமாறிக் கொண்டிருக்கும் இன்றைய இளைய தலைமுறைக்கு இந்நூல் சிறந்த வழிகாட்டும் கைவிளக்கு, கலங்கரை விளக்கம்.

ஆசிரியர் குலோத்துங்கன் அவர்களுடைய முயற்சிகள் மென்மேலும் வளரவும் வெற்றி பெறவும் இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.

---

# வாழ்த்துகிறேன்

**மு. கண்ணப்பன்**

பொருளாளர்,

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீர்மானக் குழுச் செயலாளராகவும் 'கண்ணியம்' திங்களிதழின் ஆசிரியருமான அன்புச் சகோதரர் ஆ.கோ. குலோத்துங்கன் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் கருத்துக்களைத் தொகுத்து, உழைப்பாளி, தொழிலாளி, பாட்டாளி, எனும் தலைப்பில் நூல் வெளியிட்டிருப்பதை அறிந்து மகிழ்கிறேன். இந்நூல் அண்ணாவின் கருத்துக்கள் மேலும் பரவிட வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

# வாழ்த்துரை

## செஞ்சி ந. இராமச்சந்திரன், பி.ஏ.,பி.எல்.,

துணைப் பொதுச் செயலாளர்,
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்.

*மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக தீர்மானக்குழுச் செயலாளர், மறுமலர்ச்சி தொழிலாளர் முன்னணியின் இணைப் பொதுச் செயலாளர், தொழிற்சங்கத் தலைவர் 'கண்ணியம்' ஆசிரியர் திரு. குலோத்துங்கன் அவர்கள் மிகச் சிறந்த எழுத்தாளர், கொள்கைவாதி, நேர்மையானவர், கடின உழைப்பாளி. அவர் மிகச் சிறப்பாக, தொழிலாளர்களின் உரிமைகள் குறித்துத் திறம்பட வாதாடி, செயல்பட்டு, தொழிற்சங்கப் போராட்டங்களில் ஈடுபட்டு வெற்றி பெற்றவர்.*

*நீண்ட கால திராவிட இயக்க உணர்வோடு செயல்பட்டு வந்த காரணத்தால் அண்ணாவின் தொழிற்சங்க நடவடிக்கைகளை அவர் பேச்சில் கூர்ந்து கவனித்து, அண்ணா அவர்கள் தொழிற்சங்கத் தொழிலாளர்க்கும், பொதுமக்களுக்கும் என்னென்ன விதத்தில் தன்னுடைய சொற்பொழிவுகளின் மூலமாகக் கருத்துக்களை வழங்கினார் என்பதை ஒரு புத்தகமாக வெளியிட்டு அதைத் தொழிலார்க்கு ஒரு கருவூலமாக வழங்கி வந்திருக்கிறார்.*

*அண்ணா ஒரு சமுதாய சீர்திருத்தவாதியாக, திராவிட இன எழுச்சிப் போராளியாக, மூடநம்பிக்கையை எதிர்க்கின்ற சமுதாய சீர்திருத்தவாதியாக, ஒட்டுமொத்த மக்களுக்கும் தொண்டாற்றுகின்ற மிகச் சிறந்த சமூக நலத் தொண்டராக, தொழிற்சங்கவாதியாகத் தன்னை*

ஈடுபடுத்திக்கொண்டார். இன்னும் சொல்லப்போனால் ஆரம்பகால இளம்வயதில் தொழிற்சங்கத்தில் ஈடுபட்டு, அரசியலுக்கு வந்தவர். அண்ணா ஒரு சகாப்தம். உழைக்கும் மக்களுக்கு உரிமை வேண்டும்; உழைப்புக்கு ஏற்ற ஊதியம் வேண்டும்; தேவைக்கேற்ப பங்கீடு வேண்டும்; ஏழை பணக்காரன், உயர்ந்தவன் தாழ்ந்தவன், ஆண்டான் அடிமை, என்றில்லாமல் அனைவருக்கும் கல்வி வேலைவாய்ப்பில் சமவாய்ப்புத் தர வேண்டும் என்ற உரிமைகள் அண்ணாவின் இதயத்தில் இருந்து ஏற்பட்டவை. இவற்றைத் தம் பேச்சின் வாயிலாக உணர்த்தியிருக்கின்றார்.

பெரியார் சொன்னார், சமுதாய இழிவைப்போக்க சாதி, மதங்களற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று. பொதுவுடைமைத் தத்துவத்தைக் கண்ட காரல் மார்க்ஸ் வர்க்க பேதம் அற்ற சமுதாயத்தை உருவாக்க விரும்பினார். ஆனால் அண்ணா, ஏழை பணக்காரன் என்ற பேதம் நீங்கினால் போதாது, சமுதாய ஏற்றத் தாழ்வுகளும் ஒழிய வேண்டும் என்றார். ஆகவே அண்ணா சொன்ன தத்துவம் சாதியற்ற, வர்க்க பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதாகும். ஆகவே அண்ணா ஒரு சமூகப் புரட்சியாளர். அவருடைய தொழிற்சங்கத் தொண்டுகளை இந்நூலின் வாயிலாக இக்கால இளைஞர்கள் படிப்பதற்கு ஏற்ற வகையில் வழங்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. நண்பர் குலோத்துங்கனின் முயற்சி மிகச் சிறப்பாக வெற்றியடைய வாழ்த்துகிறேன்.

இந்நூலைச் சிறப்பாக வெளியிட்ட மணிவாசகர் பதிப்பகத்தின் உரிமையாளர் பதிப்புசெம்மல் பேராசிரியர் முனைவர் ச. மெய்யப்பன் அவர்களைப் பாராட்டுகிறேன்.

# வாழ்த்துரை

**தத்துவக் கவிஞர் குடியரசு**
துணைப் பொதுச் செயலாளர்,
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்.

ஏழைக்கு எத்தனையோ
பெயர்கள் உண்டு:
இழிஅடிமை, தொழிலாளி,
கூலிக்காரன்,
தாழ்குலத்தோன், தீண்டாதோன்,
ஒதுக்கப் பட்டோன்,
சேரிமக்கள், என்றழைக்கப்
படுவோர் ஏழை!
கோழைக்குப் பிறந்தவர்போல்
தென்பட் டார்கள்;
குப்பத்தில் குப்பையாகக்
கிடக்கும் கூட்டம்;
வாழவழி அற்றவரை
வாழ வைக்க,
வரலாற்றைப் புதுப்பித்தார்
அறிஞர் அண்ணா!
பொதுவாழ்வைத் தொழிலாளர்
வாழ்வுக் காக,

புதுப்பார்வை வீசத்தான்
பழக்கி னார்கள்.
பொதுவுடைமை சித்தாந்த
வெப்பம் வீச,
புயல்வீச, அறிஞரண்ணா
தூண்டி னார்கள்.
எதுவாழ்வு என்பதற்கு -
எழுத்தைப், பேச்சை
இயக்கி னார்கள்: இளவட்டத்
திற்குள் தீயை,
மெதுவாகக் குடியேறக்
கொளுத்தி னார்கள்.
மேல்தட்டைக் கீழ்த்தட்டாய்
ஆக்கி னார்கள்.
இத்தொகுப்பு அண்ணாவின்
உரைவீச் சாகும்;
இனவெழுச்சி ஏழைவீசும்
வான்வீச் சாகும்;
கத்துகடல் முழக்க மாகும்,
எரிம லைக்குள்
கனன்றிருக்கும் எதிர்புரட்சி
விதிர்ப்பே யாகும்;
மொத்தமாகச் சொல்வதானால்
இந்நூற் றாண்டின்,

முதல்முழக்கத் தொகுப்பாகும்;
தொழிலா ளர்கள்
சொத்தையல்ல சோடையல்ல
என்று சொல்லும்,
சூடான சூரியனின்
கதிர்க ளாகும்;
தொழிற்சங்கச் செயலாளர்,
புரட்சி செம்மல்,
தோன்றல்நம் குலோத்துங்கன்,
தோழர், தொண்டன்
கழிகரும்பு தித்திப்புத்
தொகுப்பைத் தந்தார் -
கண்களுக்கும் கருத்துக்கும்
விருந்தாய் வைத்தார் -
தொழிலாளர் இருக்கின்ற
வரையில், இந்தத்
தொகுப்புக்கும் தொடர்புண்டு.
குலோத்துங் கர்க்கு
வழிவழியாய்த் தொடர்கின்ற
வணக்கம், நன்றி.
வாழ்வாங்கு அவர்வாழ
வாழ்த்து கின்றேன்!

# நல்வாழ்த்துக்கள்

**வழக்கறிஞர் கே.எஸ். இராதாகிருஷ்ணன்**

செய்தித் தொடர்பாளர், மறுமலர்ச்சி தி.மு.க.
உறுப்பினர், திரைப்படத் தணிக்கைக் குழு.

*உழைப்பாளி, தொழிலாளி, பாட்டாளி' என்னும் நூலினை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக தீர்மானக்குழுச் செயலாளராக கழகப் பணியாற்றிவரும் திரு. ஆ.கோ. குலோத்துங்கன் அவர்கள் வெளியிடுவதை அறிந்து பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.*

*நீண்ட நெடுங்காலமாக திராவிட இயக்கத்தோடு தொடர்புகொண்டு தொழிலாளர்களின் நலனுக்காகப் போராடி வருகின்ற அவருடைய முயற்சிக்கு எனது உளமார்ந்த பாராட்டுக்கள்.*

*உழைக்கும் பாட்டாளி வர்க்கத்தின் உரிமைக்காகக் குரல் கொடுத்த பேரறிஞர் அண்ணாவின் கருத்துக்களைத் தொகுத்து வெளிவரும் இந்நூல் தமிழ்கூறும் நல்லுலகுக்கு ஒரு சிறந்த வரவாகும்.*

# வாழ்த்துச் செய்தி

**பேராசிரியர் க.ந. இராமச்சந்திரன், எம்.ஏ,**

தலைமைக் கழகச் செயலாளர்
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம்

*பேரன்புசால் நண்பர் திரு.ஆ.கோ. குலோத்துங்கன் உழைப்பாளி, தொழிலாளி, பாட்டாளி, என்ற நூலின் தொகுப்பு ஆசிரியர். அவரே கடுமையாக உழைக்கும் உழைப்பாளி; பாட்டாளியின் பாதுகாவலராக விளங்கிய தொழிற்சங்கத் தலைவர்.*

*நேர்மைக்குப் பெருமைகூட்டும் புகழாளி! அவருக்கு எழுத்தாற்றல் என்பது என்றும் கைவந்த கலை. ஆற்றொழுக்காக நிரல்பட நிகழ்ச்சிகளைப் கோர்த்துச் சொல்லுவதில் வல்லவர். தொழிலாளர்களுக்காகத் தன்னை மெழுகுவத்தியாக அழித்துக் கொண்டவர்.*

*நெஞ்சுரத்தில் அவருக்கு நிகராகப் பிறிதொருவரை எடுத்துக்காட்டமுடியாத உறுதி மிக்கவர். மற்றவர்க் குழைப்பதில் மலரினும் மெல்லிய இதயம் பெற்றவர். அவரின் ஆற்றல் மிகு எழுத்தால் இன்னும் பலநூல்கள் வெளிவர விரும்பி வாழ்த்துகிறேன்.*

# நல்வாழ்த்துக்கள்

**சு. துரைசாமி**

பொதுச்செயலாளர், மறுமலர்ச்சி தொழிலாளர் முன்னணி.

*நண்பர் டாக்டர் குலோத்துங்கன் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் பல்வேறு நேரங்களில் ஆற்றிய சொற்பொழிவுகளைத் தொகுத்து, இந்த நூலை வெளியிட்டுள்ளார்.*

*பேரறிஞர் அண்ணா அவர்கள், தொழிலாளர்கள் மீது கொண்டிருந்த நாட்டத்தை இவை தெளிவாக நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.*

*அண்ணா அவர்கள் குறுகிய காலமே ஆட்சிப் பொறுப்பிலிருந்தாலும் செயற்கரிய பல்வேறு காரியங்களைச் செய்து, நாட்டின் வரலாற்றில் என்றைக்கும் நிலைத்து நிற்கின்றார்.*

*மூடப்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு அரசு நிதியிலிருந்து, இந்தியாவிலேயே முதன் முறையாக நிவாரணம் வழங்கிய பெருமையும் அவரைச் சாரும்.*

*பேரறிஞர் அண்ணா அவர்கள் தொழிலாளர்கள் மீது கொண்டிருந்த அன்புக்கு இவையெல்லாம் எடுத்துக் காட்டுக்களாகும்.*

*டாக்டர் குலோத்துங்கன் அவர்களின் முயற்சி வெற்றிபெற வாழ்த்துகிறேன்.*

௨. ௨.

# என்னுரை

பேனா எனது போர்வாள்!

புத்தகம் எனது கேடயம்!

பாடுபட்டவன் உடம்பிலே சேறு இருக்கிறது!

பாடுபடாதவன் உடலிலே சந்தனம் இருக்கிறது!

இது நியாயமா?

என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் உழைப்பாளர்களுக்காகச் சிந்தனையைத் தூண்டும் வினா எழுப்பினார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பேச்சு - எழுத்து - மூச்சு - வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஆகிய அனைத்தும் தமிழ்ச் சமுதாயத்திற்கு என்றென்றும் பயன்தரத்தக்கவை.

அண்ணா அவர்களின் நாவசைவுக்கு இந்த நாடே அசைந்தது! அவருடைய பேனாமுனையினால் இந்த நாட்டின் தலையெழுத்தே மாறியது. வரலாற்றில் ஒரு திருப்பு முறையை ஏற்படுத்தியது.

உழைப்பாளி - தொழிலாளி - பாட்டாளி மக்களுக்காக அண்ணா அவர்கள் வழங்கிய கருத்துரைகளையும், கட்டுரைகளையும் இன்றைய இளம்தலைமுறையினர் அறிந்துகொள்ள வேண்டிய அவசியம் கருதி, இலட்சிய நோக்கோடு உழைப்பாளர்களுக்கு உதவும் இந்நூலைத் தொகுத்து வழங்கியுள்ளேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கி, வரலாறு படைத்துள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர், அண்ணாவின் கொள்கைக் குன்று வைகோ அவர்களுக்கு என்றும் நன்றிக்கடப்பாடுடையேன்.

*வாழ்த்துரை வழங்கிய மறுமலர்ச்சி தி.மு.க.வின் அவைத் தலைவர் அண்ணன் எல்.ஜி. அவர்களுக்கும், கொங்குநாட்டுத் தங்கம் பொருளாளர் அண்ணன் மு. கண்ணப்பன் அவர்களுக்கும், துணைப் பொதுச் செயலாளர்கள் தரைப்படைத் தளபதி அண்ணா செஞ்சியார் அவர்களுக்கும், தத்துவக் கவிஞர் அண்ணன் குடியரசு அவர்களுக்கும், செய்தித் தொடர்பாளர் சகோதரர் கே.எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், தலைமைக்கழகச் செயலாளர் பேராசிரியர் அண்ணன் - கே.என்.ஆர் அவர்களுக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.*

*இந்நூலை வெளியிடவேண்டும் என்றதுமே பாசத்தோடு, 'குலோத்துங்கனுக்காக உடனே செய்ய வேண்டியது தானே!' என்று, நிறுவன மேலாளர் குருமூர்த்தி அவர்களிடம் மகிழ்ச்சியுடன் கூறிய, செட்டிநாடு தந்த தமிழ்முத்து, மொழி ஞாயிறு, பதிப்பகச் செம்மல் பேராசிரியர் மெய்யப்பன் அவர்களுக்கும் மணிவாசகர் பதிப்பகத்திற்கும் என் நன்றி என்றும் உரியது.*

**சென்னை,** **அன்பன்,**

**20-7-1999.** **ஆ.கோ. குலோத்துங்கன்.**

# குலோத்துங்கன் வாழ்க்கைப் பாதை

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | குலோத்துங்கன் |
| புனைப்பெயர் | : | களம் கொண்டான்<br>செயராமன்<br>புரட்சிக் கனல்<br>சிறுகதை வேந்தன்<br>சோழன் |
| பெற்றோர் | : | கோவிந்தசாமி - விருத்தாம்பாள் |
| பிறந்த ஊர் | : | ஆயுதக்களம் |
| பிறந்த தேதி | : | 23-7-1943 |
| முகவரி | : | ஆயுதக்களம் (அஞ்சல்)<br>கங்கை கொண்ட சோழபுரம் வழி,<br>அரியலூர் மாவட்டம், 612901. |
| சென்னை முகவரி | : | பி. 25 - கந்தசாமி சாலை,<br>பெரியார் நகர்,<br>சென்னை - 600 082. |
| மனைவி | : | அருள்மணி |
| இலக்கியப்பணி | : | • 1963ஆம் ஆண்டு 'கேள்வி பதில்' என்ற இதழில் "நடைபாதையிலே ஒருநாள்" சிறுகதை வெளிவந்தது.<br>• 1965 ஆம் ஆண்டு 'மித்திரன்' நாளிதழில் மாணவர் மலரில் கங்கை கொண்ட சோழபுரம், என்ற கட்டுரையை வடித்து இராஜாஜி எழுதிய நூல்கள் (ரூ. 100) பரிசாகப் பெற்றுள்ளார். |

- 1965 -ல் சுதேசமித்திரன் மாணவர் மலரில் இலட்சியமும் வாழ்க்கையும் என்ற கட்டுரையை இவர் படத்துடன் வெளியிட்டுச் சிறப்பித்துள்ளது.
- பள்ளியில் படிக்கும்போதே பேச்சுப் போட்டி, எழுத்துப் போட்டிகளில் வெற்றி பெற்றுப் பல பரிசுகளும் பெற்றுள்ளார்.
- நம்நாடு, முரசொலி, தனிஅரசு, மாலைமணி, இனமுழக்கம், கழகக்குரல், உழைப்பாளி, சங்கொலி போன்ற பல ஏடுகளில் கதை, கட்டுரை எழுதியுள்ளார்.

கண்ணியம் :

- 'கண்ணியம்' என்ற இலக்கிய இதழைப் பத்து ஆண்டுகளாக ஆசிரியராக இருந்து நடத்தி வருகிறார்.
- மறைந்த தொழிற்சங்கத் தலைவர் திரு. காட்டூர் கோபால் நடத்திய 'உழைப்பாளி' இதழில் எண்ணங்களை வெளியிட்டார்.

**விருதுகள்**

பாவேந்தர் பட்டயம் : காஞ்சியில் பாவேந்தர் மகன் மன்னர்மன்னன் சார்பாக வழங்கப்பட்டது.

எழுத்தாளர் திலகம் : பேராசிரியர் முனைவர் அய்க்கண் "எழுத்தாளர் திலகம்" என்ற பட்டத்தை வழங்கினார்.

| | | |
|---|---|---|
| கொள்கை மணி | : | மறைந்த தொழிற்சங்கத் தலைவர் காட்டூர் கோபால் 'கொள்கைமணி' என்ற பட்டத்தை வழங்கினார். |
| எழுதிய நூல்கள் | : | பாட்டாளிகள் பற்றி அண்ணா<br>உழைப்போம் உயர்வோம்<br>கட்டுரைக் களஞ்சியம்<br>பரிசுச்சீட்டு. |
| அரசியல் | : | 1960-ல் மாணவர் தி.மு.க<br><br>1965-ல்இந்தி எதிர்ப்புப் போரில் வன்முறைக் குள்ளாகி முதல் சிறை.<br><br>கடைசிச் சிறை - இட ஒதுக்கீடு போராட்டம் வேலூரில் கழகப் பொதுச் செயலாளர் வைகோ வுடன் சிறை. |
| பதவி | : | 1999 - மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை தீர்மானக்குழுச் செயலாளர். |
| தொழிற்சங்கப் பணி | : | 1970 முதல் சிம்சன் கலவரத்தில் பாதிப்பு<br><br>1987 - ல் சிம்சன் தொழிற் சங்கப் பொதுச்செயலாளர்.<br><br>1999 - மறுமலர்ச்சி தொழிலாளர் முன்னனி இணைப் பொதுச் செயலாளர். மற்றும் தமிழ்நாடு, மின்சார வாரியம், பல்லவன், எம்.ஜி.ஆர் போக்குவரத்து கழகம் மறுமலர்ச்சி தொழிற்சங்க தலைவர். |

# அண்ணா ஒரு சகாப்தம்

## தமிழவேள் ச. மெய்யப்பன்

அறிஞர் அண்ணா தமிழகத்தின் முதன்மைப் பேச்சாளராகத் திகழ்ந்தார். பேச்சிலும், எழுத்திலும் புதுமை பல செய்து மறுமலர்ச்சிக்கு வித்திட்டார். அவர் எழுத்தும் பேச்சும் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தின. கலைகளில் சிறந்த காஞ்சியில் தோன்றி, தமிழ்ப்பாசறையாம் பச்சையப்பனில், பட்டம் பெற்றுப் பெரியார் பகுத்தறிவுப் பாசறையில் பயின்ற மாமனிதர். பேச்சாற்றலாலும் எழுத்தாற்றலாலும் புதிய தமிழகம் உருவாகக் கனவு கண்டவர். ஆற்றல் வாய்ந்த அவரது எழுத்தும் பேச்சும் தமிழ் உரைநடையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தின. அண்ணாவின் பாணி (மரபு) பலரால் பின்பற்றப்பட்டு வருகிறது. மொழி முறுக்கேறியது; புதியதோர் விசையைப்பெற்றது. அண்ணா வழியினரின் எழுத்தும் பேச்சும் தமிழ் உரைநடை வரலாற்றில் ஒரு திருப்புமுனையாய் அமைந்தன.

பண்டிதர் மொழி மக்கள் மொழியாயிற்று. நாவாலும் பேனாவாலும் அண்ணா ஆற்றிய பணி அளவிடற்கரியது. பல ஆய்வேடுகள் வந்திருந்தாலும் அண்ணாவின் பங்களிப்பு முழுவதையும் மதிப்பீடு செய்யவில்லை சிறுகதை, நாவல், கட்டுரை, நாடகம் ஆகிய அனைத்து இலக்கியவடிவங்களிலும் ஈடுபட்டு உழைத்துப் புதிய பாணியை அவர் உருவாக்கியுள்ளார். அடுக்குத் தொடர்களும் எதுகை மோனைகளும் காவிரியைப்போல் கங்கையைப் போல் அவரது பேச்சில் ஊற்றெடுத்தன. அவரது பேச்சில் தமிழகமே கட்டுண்டு கிடந்தது. கருத்தாலும் நடையாலும் சொல்லும் வகையாலும் அண்ணாவுக்கெனத் தனிவழி அமைந்திருந்தது. அவர் நடத்திய இதழ்களில் அவர் எழுதிய கட்டுரைகளும், கடிதங்களும், இலக்கியத் தரத்துடன் அமைந்து வளர் தமிழுக்குச் செழுமை சேர்த்தன. நாவன்மை மிக்க

நாடுபோற்றும் நாவலராகத் திகழ்ந்த அண்ணா வளமானநடையினால் புகழ்பெற்ற எழுத்தாளராகவும் விளங்கினார். சொற்பொழிவுகளில் புதிய பாணியை உருவாக்கி மேடைத்தமிழுக்கு வளம் சேர்த்தார். மேடைத்தமிழை உருவாக்கியவர்களில் அவர் முதல் வரிசையர். அவர் சொற்பொழிவுத் தலைப்புகளும் படைப்புகளுக்குச் சூட்டிய பெயர்களுமே புதுமையாய் அமைந்து விட்டன. கவிதைப் பண்பு அமைந்த உரைநடை அவருக்கு உரைநடை வரலாற்றில் நிலைபேறு அளித்து விட்டது. அண்ணா அழகாகவும் சுவையாகவும் எழுதினார். அவர் படைப்பு எந்த இலக்கிய வடிவமாகயிருந்தாலும் சீர்திருத்த ஒளிவீசும். இதழாளராக அமைந்ததால் நிரம்ப எழுத வாய்ப்பும் கிடைத்தது. அவர் கருத்து பரப்பாளராகவும் விளங்கினார். அண்ணாவின் பன்முகச் சாதனைகளைஅங்கீகரித்து, பெருமைசேர்க்கும் வகையில் புகழ்மிக்க அண்ணாமலைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் அளித்துப் பெருமைப்படுத்தியது.

அண்ணா ஒரு அறிவாலயமாகவே திகழ்ந்தவர்.

**சொற்பொழிவாளர்**
**எழுத்தாளர்**
**நூலாசிரியர்**
**நாடகாசிரியர்**
**இதழாளர்**
**சிந்தனையாளர்**
**தலைவர்**

எனப் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுத் திகழ்ந்தார். தமிழகத்தில் அண்ணாவுக்கு அமைந்த நினைவுச்சின்னம் போல் யாருக்கும் அமையவில்லை. அறிஞர் அண்ணா மிகவும் புகழ்பெற்ற ஒப்பற்ற தலைவராகத் திகழ்ந்தார். அண்ணாவின் படைப்புகளை அரசுடைமையாக்கிய தமிழக அரசுக்கு நெஞ்சார்ந்த நன்றி. அரசுடைமையாக்கிய பாவேந்தரின் நூல்களை முதன் முதலில் வெளியிட்டது மணிவாசகர் பதிப்பகம். தற்பொழுது அண்ணாவின் நூல்களையும் வெளியிட்டு மகிழ்ச்சியடைகிறது.

# அண்ணாவின் தொழிற்சங்கப் பணி

தமிழ்நாட்டில் உறங்கிக்கிடந்த தொழிலாளர்களைத் தட்டியெழுப்பி அவர்களுடைய நலன் காக்கும் உற்ற தோழராய் உழைத்தவர்களில் தமிழ்த் தென்றல் திரு.வி.க., திரு. பி.பி. வாடியா, திரு.வி. சக்கரைச் செட்டியார் முதலானோரைத் தலைசிறந்தவர்களாகக் குறிப்பிடலாம். அவர்களுடைய வரிசையில் நீங்காத இடம் பெற்றவர் நீதிக் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. சி. பாசு தேவ் ஆவார்.

திரு. பாசுதேவ் ஆங்கிலத்தில் அழகு நடையில் பேசுவார். ஆனால் தமிழில் பேசத்தெரியாது. அதனால் அவர் தொழிலாளர் கூட்டங்களில் ஆற்றும் ஆங்கிலச் சொற் பொழிவுகளை அழகுத் தமிழில் இனிமை சொட்ட மொழி பெயர்த்துப் பேசும் ஆற்றல் மிக்கவராக பேரறிஞர் அண்ணா இருந்தார்கள். இதனால் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த காலத்திலேயே தொழிலாளர் நெஞ்சங்களில் தனி இடத்தைப் பிடித்துக்கொண்டு விட்டார்கள்.

திரு. பாசுதேவ் ஆங்கிலத்தில் பேசினால் திரு. அண்ணாதுரை தாம் மொழிபெயர்ப்பார் - என்ற அளவில் வெறும் மொட்டாக அரும்பிய அவர்களுடைய தொடர்பு மலர்ந்து மணம் வீசி இணை பிரியா நட்பாக மாறியது.

1934ல் எம்.ஏ. பட்டம்பெற்று வெளிவந்தார் அண்ணா. வீட்டார் அண்ணாவை ஏதேனும் ஓர் அரசாங்க வேலையில் அமர்த்த வேண்டும் என்பதிலே ஆர்வங்காட்ட, அண்ணாவோ அரசியலில் ஆர்வங் காட்டி வந்தார்கள். திரு. பாசுதேவ் அவர்களிடம் ஏற்பட்ட தொடர்பின் காரணமாக அண்ணா அவர்கள் முதன்முதல் தொழிற்சங்க நடவடிக்கை களில் ஈடுபட்டார்கள்.

தொழிலாளர்களின் நிலை உயரவேண்டும்; அவர்களிடையே ஒற்றுமை நிலவவேண்டும்; தொழிற்சங்கம் வலுப்பெற வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டு 1934 - 35 - 36 ஆம் ஆண்டுகளில் அயராது பாடுபட்டார்கள். அப்போது திரு. பாசுதேவ், திரு. ஆல்பர்ட் ஜேசுதாசன் ஆகியவர்களோடு சேர்ந்து தொழிற்சங்கப் பணி புரிந்து வந்தார்கள். தொழிற்சங்க நடவடிக்கைகள் மூலம் அந்த நாட்களில் காங்கிரசில் பணியாற்றிய திரு. என்.வி. நடராசன் அவர்களுக்கும், அண்ணா அவர்களுக்கும் தொடர்பு உண்டு, ஆனால் அரசியலில் இருவரும் எதிர் எதிர்க் கட்சியினர்.

அகில இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் மாநாடு லட்சுமணபுரியில் திரு. ஜம்னாதாஸ் மேத்தா அவர்கள்

தலைமையில் நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு அண்ணா அவர்கள் திரு. ஆல்பர்ட் ஜேசுதாசன் போன்றவர்களோடு, பிரதிநிதியாகச் சென்றிருந்தார்கள். சென்னைத் தலைவர்கள், மாநாட்டில் அண்ணாவுக்குரிய இடம் அளிக்காமல் தங்கள் பின்னால் ஓடிவரக்கூடிய 'ஆட்டுக்குட்டி, நாய்க்குட்டி' போல நடத்தினார்களாம். மாநாட்டுத் தலைவர்களிடம் அண்ணா அவர்களை அறிமுகம் செய்து வைப்பதையும் ஒரு பொருட்டாகக் கருதவில்லையாம்.

மாநாட்டில் அண்ணா அவர்கள் ஒரு தீர்மானத்தின் மீது சிறிது நேரம் பேச வேண்டிய வாய்ப்புக் கிடைத்ததாம். மாநாட்டினர் அண்ணா அவர்களின் பேச்சில் ஒன்றித் திளைத்து, மகிழ்ந்து, தணியாப் பற்றுக் கொண்டு விட்டனராம். பிறகு மாநாடு முடியும்வரையில் தலைவர்கள் அண்ணாவைக் கண்டு பேச விரும்புவதும், தொண்டர்கள் அண்ணாவின் பின் ஓடுவதும் ஆன காட்சிகள், மற்றைய சென்னைத் தலைவர்களை இருந்த இடம் தெரியாமல் மறக்கடித்து விட்டனவாம். மாநாட்டின் ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் அண்ணா அவர்களின் கருத்துக்கு நல்ல மதிப்பும், செல்வாக்கும் இருந்தன. அந்த மாநாட்டில் அண்ணாவின் ஆற்றலை அறிந்து அகில இந்தியத் தொழிற்சங்கக் காங்கிரசின் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தார்கள்.

இப்படிப் படிப்படியாக அண்ணாவின் தொழிற் சங்கப் பணி வளர்ந்து வந்தது. அதனால் தாமாக உழைக்கும் வர்க்கத்திடையே அண்ணா அவர்கள் தனிச்செல்வாக்கைப் பெற்றார்கள். "பாடுபட்டவன் உடம்பிலே சேறு இருக்கிறது. பாடுபடாதவன் உடலிலே சந்தனம் இருக்கிறது. நியாயமா?" என்று வினா விடுத்தார்கள். இது உழைக்கும் வர்க்கத்தினை உணர வைத்துச் சிந்திக்க வைத்தது.

தொழிற்சங்கக் காங்கிரசில் ஈடுபட்டுத் தொழிலாளர்களுக்குப் பணியாற்றிய அறிஞர் அண்ணாவை நேரடி அரசியலில் ஈடுபடும்படி செய்தவர்கள் 'ஜஸ்டிஸ்' ஆங்கில ஏட்டின் பொறுப்பாளர் திரு. டி.ஏ.வி. நாதன் அவர்களும் 'சண்டே அப்சர்வர்' ஆங்கில ஏட்டின் ஆசிரியர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களும் ஆவார்கள். அதன் பின் அண்ணா அவர்கள் நேரடி அரசியலில் ஈடுபட்டார்கள். அதன் பின்னும் கடைசி வரையிலும் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்கு உழைத்து, தொழிலாளியின் தோழனாக மறைந்தார்கள்.

*(மறைந்த திரு காட்டூர் கோபால் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த "உழைப்பாளி" இதழில் கோ. குலோத்துங்கன் 31-7-74இல் எழுதிய கட்டுரை)*

# 1. தமிழகத்தின் தொழிற்சங்க வரலாறு

## உலகிற்கே பாடமாக அமையக் கூடிய தமிழ்நாட்டின் தொழிற்சங்க வரலாறு தொகுப்பு நூலாக வெளிவருவது அவசியம் –

### அண்ணா வலியுறுத்தல்

*தொழிற்சங்க வரலாறு மிகவும் முக்கியமானதாகும்; தமிழகத்தில் - உலகிற்கே பாடமாக அமையக்கூடிய பல அரிய தொழிற்சங்கப் போராட்டங்கள் நடந்துள்ளன; இவற்றையெல்லாம் பற்றி ஒரு தொகுப்பு நூல் வெளியிட வேண்டும்.*

*விரும்பத் தகாதவற்றை விடுத்து — வேண்டியதை மட்டுமே இதில் சேர்க்கவேண்டும். எதிர்காலத்திற்கு இது வழிகாட்டியாக அமையும்.*

**—'இந்து' இதழ் தொழிலாளர்களிடையே ஆற்றிய உரையில்.**

# 2. மே தினம் பூத்தது!

*வளமையினருகே வறுமை, பலத்தினருகே பயம் - இது ஏன்? இந்தக் கேள்வி சாதாரண மக்களையல்ல, கருத்துலகின் காவலர்களாக விளங்கியவர்க ளனைவரையும் கதிகலங்க அடித்தது. கி.மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த பிளேட்டோ என்னும் கிரேக்கத் தத்துவ ஞானியின் காலத்திலிருந்து, கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆரம்பித்த மார்க்ஸ் காலத்தின் முன்வரை, 'மக்களின் நல்வாழ்வுக்கான' ஆராய்ச்சிகளனைத்தும் நம்பிக்கையான முடிவை அளிக்கவில்லை. பெரும் பகுதி வெறும் சொல்லாராய்ச்சியாகவும், வேதாந்த விசாரணையாகவும், சமாதானத்தை அளிக்காத சமரச கீதமாகவும், நாட்டுக் குதவாத ஏட்டுரையாகவும் முடிந்தது.*

இருட்டறையில் இன்னலுற்ற மக்கள் இன்பங் காண விழைந்த ஒவ்வொரு சமயமும் ஒடுக்கப்பட்டனர். ஆண்டை-அடிமை; உயர்ந்தவன்-தாழ்ந்தவன்; மதக்குரு-பக்தன்; மிராசு-உழவன்; பிரபு-பணியாள்; முதலாளி-தொழிலாளி இவர்களிடையே ஏற்பட்ட வர்க்கப் போராட்டங்களே, உலக வரலாறாகும். கலையுலகிலும் கருத்துலகிலும் மற்ற நாடுகளுக்குக் கருவூலமாக விளங்கிய கிரேக்க நாடு இவ்விதமான போராட்டத்திலேயே உருக்குலைந்தது. ரோம் தனியரசு வீழ்ந்ததற்குக் காரணம், இத்தாலி நாட்டில் ஏற்பட்ட உயர்ந்தவன்-தாழ்ந்தவன் என்ற பிறப்புப் பேதம். இத்தகைய போராட்டங்கள் ஒன்றிரண்டல்ல, நூற்றுக்கணக்கில் நடந்துள்ளன. தோற்றவர்கள் உள்ளம் உடைந்தனர் - பின் வாங்கினர். போராட்டத்தின் இறுதியில், புரட்சிப் புயல் வீசியது- அல்லது புகையின் வெம்மையிலே இரு வர்க்கத்திலும் பெரும் பகுதி அழிந்தது. புயல் ஓய்ந்த போதிலும், புயலினால் வீழ்த்தப்பட்ட பழமை மரங்கள் மீண்டும் மண்ணில் நிலை நிறுத்தப்படவில்லை.

இந்தப் போராட்டங்களின் வரலாற்றை நன்றாக அலசிப் பார்த்தவர் மார்க்ஸ். பிரபுக்கள்-முதலாளிகளின் கொடுங்கோன்மைகள் வெகு நாளைக்கு நிலைக்காதென்பதையும், உழைப்பாளிகளின் முயற்சியால்தான் உழைப்பாளர் உலகு மலரும் என்பதையும் அவர் எடுத்துக் காட்டினார். அவருடைய தெளிந்த முடிவு ஒடுக்கப்பட்ட உழைப்பாளர்களை ஒன்று சேர்த்தது-நலிவுற்ற உள்ளத்தை புலியுளமாக்கியது-கசங்கிய கண்கள் கனலைக் கக்கின. மேதினி விழித்தது-மே தினம் பூத்தது! முதல் மே தினம் 1889-ல் பாரிசில் கூடிய உலக சமதர்மக் குழுவினரால், தொழிலாளரின் நன்னாளாகத் தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு மே தினத்திலும், அவ்விழாவைக் கொண்டாடக் கூடியிருக்கும் தொழிலாளர் தொகை தேய்வதாகக் காணோம். எங்கு உரிமை சூறையாடப்படுகிறதோ-உழைப்பு

கொள்ளையடிக்கப்படுகிறதோ-உணர்வு சிதைக்கப்படுகிறதோ-உயர்நிலை வீழ்த்தப்படுகிறதோ அங்கெல்லாம் மே தினம் போராட்டங்களின் ஆரம்ப நாளாகவே கருதப்படுகிறது. சமூக-அரசியல்-பொருளாதாரத் துறைகளில் ஒடுக்கப்பட்டு, இலையுதிர்ந்த மரமாக நிற்கும் தேய்ந்த திராவிடத்தில் மே தினம் கொடுமைகளைக் களைய நாம் எடுக்கும் கொடுவாளாகக் காட்சியளிக்கிறது.

(1–5–54 'மன்றம்')

## 3. மே நாள் விழா!

"மே நாள் விழா உலகெங்கும் கொண்டாடப்படுகின்ற விழாவாகும்! இந்த விழா, ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கோ அல்லது குறிப்பிட்ட ஒரு கட்சிக்கோ, ஒரு மதத்தினருக்கோ உரியதல்ல! உலகெங்கிலும் உள்ள தொழிலாளர்கள் எந்தவிதப் பாகுபாடுமின்றிக் கொண்டாடி வருவதாகும்.

எங்கெங்கே நியாயம் நிலைத்திருக்கிறதோ அங்கெல்லாம்—எங்கெங்கே மாற்றாருக்குப் பரிந்து பேசுபவர்கள் உள்ளனரோ அங்கெல்லாம்—இந்த நன்னாள் கொண்டாடப்படுகிறது!

உலகில், தொழிலாளர் ஆட்சி எங்கே நிலவி இருக்கிறதோ அங்கெல்லாம்—மே நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது!

அத்தகைய ஒரு புனித இலட்சியத்திற்காக-தொழிலாளர் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட நாளாகும் இது.

## 4. மே நாளின் குறிக்கோள்!

"சக்திக்கேற்ற உழைப்பு—தேவைக்கேற்ற வசதி," என்ற முறையை மனித சமுதாய வாழ்க்கைக்கேற்ற நிரந்தரத்

திட்டமாக எடுத்துக்கொள்ளும் முயற்சி எளிதில் முடிவதாக அமைய வேண்டும்.

அந்தக் குறிக்கோளை உறுதிப்படுத்திக் கொள்ளும் ஓர் ஒப்பற்ற நாளாகவே 'மே நாள்' கொண்டாடப்படுகிறது!

"புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்" என்ற பெரு முழக்கம், உலகத் தொழிலாளர்களின் உள்ளங்களிலிருந்து இன்று வெளிக் கிளம்பட்டும்! அதனால் ஏற்படும் மகிழ்ச்சி எங்கும் மலரட்டும்! அந்த மலரினின்றும் வீசும் இன்ப மணம் எங்கும் கமழட்டும்!

## 5. பண்டிகை அல்ல — திருநாள்

அறுவடைத் திருநாளாக—உழைப்பின் பயனை உணர்த்தும் திருநாளாக இருக்கும் பொங்கல் திருநாள், தமிழர்கள் அனைவருக்கும் பொதுவான 'தமிழ்த் திருநாள்' ஆகும்!

'திருநாள்' என்றால் என்ன? பொருள் புரியாமல் பயன்படுத்தப்படும் பல சொற்களில் ஒன்றாகத் 'திருநாள்' இருக்கிறது.

'திரு நாள்' என்பது—மகிழ்ச்சி தருவது; 'அவனுக் கென்ன நாளெல்லாம் திரு நாள்' என்று கஷ்டப்படுகிறவன் சொல்லக் கேட்கிறோம்!

இதிலிருந்து என்ன தெரிகிறது? மகிழ்ச்சிப் பயனைத் தருவதுதான் திருநாள்! மகிழ்ச்சி வேண்டாம் என்று யாரும் சொல்வதில்லை!

திருநாளைக் காரணமாகக் காட்டி, 'என் காலில் விழு; நூறு பேருக்குச் சோறு போடு' என்றெல்லாம் கூறுவது திருநாள் ஆகாது-அது, பண்டிகை!

தீபாவளிப் பண்டிகை—கார்த்திகைப் பண்டிகை — நவராத்திரிப் பண்டிகை — சிவராத்திரிப் பண்டிகை— அப்படிப் பல பண்டிகைகள் இருக்கின்றன!

'இப்படி நடந்தால் இது கிடைக்கும்' என்று கூறுபவை இந்தப் பண்டிகைகள்!

பழந் தமிழர்கள், அறத்தினை வியாபாரம் செய்யவில்லை! 'இங்கே கொடுத்தால்—அங்கே கிடைக்கும்' என்ற முறையில் நடந்து கொள்ளவில்லை!

**"இம்மைக்குச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்**
**அறவிலை வணிகன் ஆய்அலன்"**

என்பது பழந் தமிழர் போக்கைக் காட்டும் பாடலாகும். எங்கோ—எதுவோ கிடைக்கும்' என்பதற்காக இங்கே— இதனைக் கொடுப்போம்' என்ற நிலை அன்றில்லை!

இதைச் செய்தோம்-இது கிடைத்தது' என்று தெரிய வேண்டும்—இது தான் திருநாளாகும்!

பொங்கல் திருநாளையே தமிழர் திருநாளாக நாம் கொண்டாடி வருகிறோம்.

முதலில் பொங்கல் திருநாள் தமிழ் மக்களுக்குப் பொதுவான திருநாள் என்று பச்சையப்பன் கல்லூரியின் பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார் குறிப்பிட்டார்; அவர், மாநிலக் கல்லூரிப் பேராசிரியராக அப்போது இருந்தார்!

கொள்கையிலே மறுமலர்ச்சி கண்ட தி.மு. கழகத் தோழர்கள் இதனை ஒன்றுபடும் திருநாளாகக் கொண்டனர்!

இந்தப் பொங்கல் திருநாள் இப்போது தமிழர் திருநாளாகத் தமிழகத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது— எல்லா மதத்தினரும் இதில் கலந்து கொள்கின்றனர்!

'இது முஸ்லிம் திருநாளல்ல' என்று கூறப்படுகிறது; அவர்கள் மதத்தால்—மார்க்கத்தால் இஸ்லாமியர் என்றாலும் மொழியால் தமிழர்கள்!

இன்னும் சொல்லப் போனால் தமிழகத்திலுள்ள திருநெல்வேலிச் சீமையில் முஸ்லிம்களும் மற்றவர்களும் 'மாமா' — மைத்துனர்' என்று முறையிட்டு அழைத்துக் கொள்வது உண்டு; அந்த அளவுக்கு நெருங்கிய பிணைப்பு!

வட இந்தியாவில் வகுப்புக் கலவரம் ஏற்பட்டபோது கூடத் தமிழ்நாட்டில் முஸ்லிம்களுக்கும்-இந்துக்களுக்கு மிடையிலான நல்லுறவுக்குக் குந்தகம் ஏற்படவில்லை; காரணம் முஸ்லிம்கள் மார்க்கத்தால் இஸ்லாமியர்—மொழியால் தமிழர்—கலாச்சாரத்தால் திராவிடர்! அதுபோலவே கிறித்துவர்களும்!

உதாரணத்திற்கு ஒன்று; கோலாலம்பூர் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராகத் தனிநாயகம் அடிகளார் இருக்கிறார்; இவர் மதத்தால் கிறித்துவர்; தனித் தமிழ்ப் பெயர் கொண்ட இவர் மொழியால் தமிழர்!

இவரிடம் நீங்கள் எந்த இனத்தவர் என்றால் தமிழர் என்பார்; எந்த ஊர் என்றால் யாழ்ப்பாணம் என்பார்; எந்த மதத்தவர் என்றால் 'கிறித்துவர்' என்பார். இப்படி மொழியால் தமிழர்களாக இருக்கின்றனர்!

ஒரு காலத்தில் நாங்கள் தமிழர் அல்லர் என்று கருதிக் கொண்டிருந்த பார்ப்பனர்கள்கூட இப்போது நாங்கள் தமிழர்கள் அல்லவா? என்று கேட்பதைப் பார்க்கிறோம்.

வியாபாரம் செய்வதற்கு எத்தனையோ இருக்கின்றன —தமிழையும் வியாபாரப் பொருளாக்கி விடக் கூடாது!

பொங்கல் திருநாள் என்பது அறுவடைத் திருநாள்!

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது பழமொழி; ஏனெனில் அப்போதுதான் அறுவடை ஆன பொருளை விற்றுப் பணம் கைக்கு வந்திருக்கும்! வீட்டில் பணமும் பொருளும் இருக்கும்.

*கழனி திருத்தி விதை தெளித்து — களை களைந்து நாற்று நட்டு பயிர் வளர்த்து—கதிர் முற்றியதும் அறுத்து—களம் சேர்த்து—மணிகள் குவித்து—புடைத்து—மூட்டை கட்டி விற்றுப் பணமாக்குவான் உழவன்!*

*அந்தப் பணத்தோடு அங்காடிக் கடைக்குச் செல்லும் அவன் மனைவிக்குச் சேலையும்-பழங்களும்-வாசனைப் பொருள்களும் வாங்கிக்கொண்டு வீடு வருகிறான். அதாவது களத்தில் அறுவடை செய்த அந்த உழைப்பாளி கடைகளில் செய்த 'அறுவடை'யுடன் வீடு வருகிறான் — அதுதான் பொங்கல்!*

*உழைப்பின் பயனை உணர்த்துகின்ற இந்தத் திருநாள் பல நாடுகளில்—பல வகைகளில்-பல முறைகளில் கொண்டாடப்பட்டு வருகிறது!*

*நல்ல நிலம் பார்த்து—தக்க காலமறிந்து பதமாக—பக்குவமாக விதை தூவி, பயிர் விளைவிக்கும் முயற்சியிலே ஆணுடன் பெண்ணும் பங்கு கொள்கிறார்கள்! இருவரின் உழைப்பின் பயனும் களஞ்சியம் போய்ச் சேருகிறது! ஆகவே பெண்ணுக்குள்ள பங்கையும் புலப்படுத்துவது இந்தத் திருநாள்!*

*எனவே இத் திருநாள் கிறித்துவர்கட்கோ—முஸ்லிம் களுக்கோ முரணானதல்ல! தமிழர்கள் அனைவருக்குமே உரிய திருநாளாகும்!*

*(1965-ல் சிங்கப்பூர் 'தேசிய அரங்கில்' துறைமுகத் தொழிலாளர்கள் சார்பில் நடந்த பாராட்டுக் கூட்டத்தில் பேசிய பேச்சின் ஒரு பகுதி)*

## 6. "உழுதோம் உயர்ந்தோம்" - இதுவே தமிழர் திருநாள்

*பொங்கல் புதுநாள் புலர்ந்தது—மக்களின் முகமெல்லாம் மலர்ந்தது! மகிழ்ச்சி மிளிர்ந்திடக் காண்கிறோம்.*

நாடெங்கும் விழா நானாவிதமான விழா நடக்கக் கண்டோம்.

காலை மலர்ந்தது—மனிதரெல்லாம் கண் மலர்ந்து நடமாடுகின்றார்; கதிரோன் ஒளி பரப்பினான்; காகங் கரைந்தது—கோழி கூவிற்று; நீர்த் தெளிக்கும் நங்கையரின் வளை ஒலியும் கிளம்பிற்று!

"வாரீர்; நீராடி—புத்தாடை பூண்டு—புது அரிசியைப் புதுக் கலத்திலிட்டு அமுதாக்கி—பச்சைக் காய்கறியைப் பக்குவமாகச் சமைத்து—பாடி ஆடி உண்போம்" என்றுரைத் தீர்—களித்தீர்!

"உமது வாழ்வு இன்பம் பொங்கிட இருத்தல் வேண்டும்" என்று நாம் இங்கு 'நல் வாழ்த்து' நல்கிய வண்ணம் இருக்கிறோம்.

பொங்கல் பருவத்தில் நாம் நமது வாசகர்கட்கு—"இதய"மெனும் கலத்தில் 'நினைப்'பெனும் பால் பெய்து நல் வாழ்த்தெனும் அமுது கலந்து இம் மடலில் இட்டு அளித்திடக் களிக்கிறோம்!

'பொங்கல் புது நாள்—அறுவடையின் ஆனந்தத்தை—அகமகிழ்வைத் தமிழகம் கொண்டாடிய ஓர் வகையே' என்போம்!

"பருவத்தில் பயிர் செய்தோம்—பலன் உண்டோம்" என்பதே அந்நாளின் பண் என்போம்!

கரடு முரடான நிலத்தைக் கூர்மையான கலப்பை கொண்டு குத்திக் கிளறினோம்; அடி மண் மேல் வர—கல் உடைந்தழிய—கரம்பு திருத்தி உழைத்தோம்!

பெய்யும் மழை என்றும் பெய்தவண்ணம் இராது; எனவே, பெருங்குள்ம்—சிறுகுள மெடுத்து—ஆறு அமைத்து வாய்க்கால் வெட்டி—நீர்த் தேக்கினோம்; ஆகவே, அந்நீரை நிலமடந்தைப் பருகத் தந்தோம்; பருவமுற்ற மங்கைக்கு மணாளனைச் சேர்த்தல் போல் நிலப் பண்புக்கேற்ற விதை

தூவினோம்; "களித்த காதலர் காணும் குழவி" எனப் பயிர் தழைக்கக் கண்டோம்!

"இன்று கண்டோம் அதன் பலனை" என்று—உழைப் பின் மேன்மையை உணரும் உத்தம நாள்" என்போம்.

"சுற்றமும் நட்பும் சூழ—களிப்பும் கனிவும் வாழ—தமிழர் வாழ்ந்தனர்" என்பதை விளக்குவது போல் வீடுதோறும் உள்ளூர் உறவினர் வருவதும், உரையாடிக் களிப்பதும், பெரியார் பாதம் வருடலும், பெண்டிர் பெருமை புகழ்தலும் நடக்கக் காண்கிறோம்; எனவே இதுவே தமிழர் திருநாள் என்போம்!

சந்தனமும் சண்பகமும்—தேமாவும் தீம்பலாவும—அரிசியும் அசோகமும் கொங்கும் வேங்கையும் ஒருபுறம் மணம் பரப்ப, பாதிரியும் கொன்றையும், புன்னாகமும் குயிலாசனமாக மலர்புரி புகுந்து மதுமங்கையை மணந்த வண்டரசர் குழாம் பாட — சிந்தனையில் சிறுவீடழிந்துச் சேல் விழியைப் பழித்துச் சோலைக்கு இழுத்துக் காதலைப் பழுக்கவைத்த கண்ணாளனின் நினைவு நடமாட-அழகு படமாட—அணங்குகள் நடந்து செல்லும் காட்சியும், "உழைத்தோம்—உயர்ந்தோம்; உழுதோம்—அறுத்தெடுத் தோம்; போரிட்டோம்—வென்றோம்; பயின்றோம்—பக்குவம் பெற்றோம்; ஒத்த உளமுடையாரைக் கொண்டோம்—வாழ்வின் இன்பம் உண்டோம்" என்று திருப்தி பெற்று படைக்கலனுடனோ—தொழிற்கலனுடனோ நடமாடும் ஆடவரின் காட்சியும், துறைமுகங்களிலே, யவனரா இவர்? சீனரா இவர்? சேல்-விழியாளுக்கு ஏற்ற இவ்வணி எத்தனை நூறு செம்பொன்னோ? யவன மன்னரிடம் பெற்ற பரிசு இதுவோ? எப்போது பெரும் பரிசுகள் வரும்? என்று கேட்டு உலாவும் வணிகக் கூட்டமும் கடலை அடக்கிக் கலத்தைச் செலுத்தும் வீரர்களின் விளையாட்டும், பொருள் ஈட்டிய பூரிப்பால் புது உரு கொண்ட புன்னகையினர் உலாவும் மாட்சியும், 'என்னோடு—இன்பம் நாடு-மணி இழைத்த பொன்னோடு'

என்று பாடும் புலவர்களும், அவர்களின் திறம் வியந்து திரவியம் தரும் மன்னர்கள் வாழ்ந்த மனோகரமும்; செந்நெல்வயலின் வளற்றன்மைக்கும்—சிங்கார சோலைகளின் கனிவுக்கும் ஏற்பட்ட போட்டியிலே 'வெல்வோர்க்கு இதுபரிசு' என்று கூறி—முத்துக் குவியலைத் தருவேன் என்றுரைப்பது போல் ஒலிக்கும் கடலின் காட்சியும் கவிதைகளுக்கு மாட்சி தந்தன!

தமிழகத்தின் தொல் சிறப்பு சொல்லவும் கேட்கவும் தெவிட்டாததாகவே இருந்தது?

தோள் வலியும்—மன வலியும்—சொல்வலியும் அறிவு வன்மையும், பெற்றோரின் ஆலயமாக விளங்கிற்று.

அன்று இருந்ததை இன்றோடு இழந்தோம்; ஆயினும் என்ன? நிலத்திலே நெடுந்தூர ஆழத்தில் தூங்கும் தங்கத்தை எழுப்புகிறோம்—வெளியில் நடமாட வைக்கிறோம்!

சுறாவும், சுழலும் சுற்றிலும் நடனமிட, நீர் மாளிகையில் களித்துக் கிடக்கும் முத்துக்களை மூச்சை அடக்கி உள்ளே சென்று வெளியே கொண்டு வந்து 'நட', 'நட' என்கிறோம்!

உழைத்தால் பலன் காண்கிறோம்!

அதுபோலவே, இழந்த இன்பத்தையும் மீண்டும் பெற முடியும்—பெறல் வேண்டும்!

நெஞ்சிலே வலுவிருப்பின், வெற்றி தஞ்சமென்றுரைத்து வந்து நம்மிடம் கொஞ்சிடுவது உறுதி!

நம் மனதில் உறுதி கொண்டால், தமிழகத்தில் இன்பம் பொங்க — வாழ்வு பொங்க — புரட்சி பொங்கிப் புதுமை பொங்க — வளம் பொங்கச் செய்ய முடியும்; அந்,தப் பொங்கற் புதுநாள் வரத்தான் போகிறது!

**(நம் நாடு — அண்ணா)**

# 7. அரசு ஊழியர்களுக்கு அண்ணா அறிவுரை

## நானும் உங்களில் ஒருவன்

அரசு அலுவலகங்களில் பணியாற்றும் உங்களுக்கு மனக் குமுறல் நிரம்ப உண்டு; ஊதிய அமைப்பில்-வேலை வாய்ப்புகளில்-முன்னேற்றம் பற்றி உங்களுக்கு குறைகள் இருக்கின்றன என்பதை நான் அறிவேன்; முடிந்தவரையில் நானும், என் நண்பர்களும் அவற்றில் நிச்சயம் அக்கறை காட்டி ஆவன செய்ய முயலுவோம்.

உங்கள் குறைகள் ஏற்கெனவே உள்ள மனக்குறைகள்; நாங்களோ புதிதாக வந்தவர்கள்; எனவே 'அய்யோ-பாவம்' என்ற உணர்ச்சியோடு எங்களை அணுக வேண்டு கின்றோம்.

உங்கள் குறைகளுக்குப் பரிகாரம் தேடி எங்களுக்கு உடனடியாகத் தொல்லை கொடுக்காதீர்கள்! ஒரேயடி யாகத் தொல்லை கொடுக்காதீர்கள்!

'மற்ற விஷயமெல்லாம் தெறிகிற இவர்களுக்கு இது தானா தெரியாது!' என்று எண்ணிடாமல் 'அய்யோ—பாவம்! இவர்களுக்கு இதெல்லாம் தெரியாது; சொல்லிக் கொடுப்போம்' என்ற அந்த எண்ணத்தோடு எங்களை அணுகுங்கள்!

உங்கள் குறைகளை நாங்கள் மெல்ல மெல்ல நிதானமாகத் தீர்ப்போம்; ஆனால் நிச்சயமாகத் தீர்ப்போம்!

அரசு அலுவலகங்களில் பணியாற்றுகிறவர்கள் என்று உங்களை நான் அறிந்திருப்பதை விட உங்கள் வீடுகளில் நான் உங்களைப் பார்த்திருக்கிறேன்!

நான் காஞ்சிபுரம் நகர மன்றத்தில் ஓர் எழுத்தாளனாகப் பணியாற்றியிருக்கிறேன்; அதுவே

நீடித்திருந்தால், உங்களைப் போன்றே தொல்லைகளை அனுபவித்துக்கொண்டுதான் இருந்திருப்பேன்!

வெறும் தலைவலி வந்தாலே தாங்க முடிய வில்லையே! இந்த அரசு உங்கள் அரசுதான் என்றாலும், வாழ்வில் குறைகள் இருந்தால் வலி நிச்சயம் இருக்கும்!

என்னுடைய முறை, வலி பறந்து போகிறமாதிரி மெல்லத் தேய்கின்ற முறை.

கூடிய விரைவில் எங்களாலே முடிந்த அளவிற்கு உங்கள் குறைகளைக் கவனிப்போம் என்ற உறுதி தருகிறேன்.

(கோட்டை அரசு ஊழியர்களிடையே அண்ணா ஆற்றிய உரை 6-3-67)

* * *

அரசாங்க அலுவலர்களான நீங்கள் ஆக்கப்பூர்வ மான யோசனைகளைக் கூற வேண்டும். எனக்குப் பதவி வந்து விட்டதாகக் கருதி நீங்கள் ஒதுங்குவீர்களானால் பதவி எனக்கு ஒரு நோயாகவே மாறி விடும். ஆகவே, தாராளமாக யோசனைகளைக் கூறுங்கள்.

நீங்களும் நானும் சேர்ந்து செய்ய வேண்டியது நிரம்ப உண்டு; உணவு நெருக்கடியைத் தீர்க்க அரும்பாடு படுங்கள்; தொழில் வளத்தைப் பெருக்குவதில் உங்கள் அறிவாற்ற லைப் பயன்படுத்துங்கள். பெருகுகின்ற தொழில் வளத்தின் மூலம் கிடைக்கக்கூடிய செல்வத்தைச் சமுதாயத்திற்கு முழுமையாகப் பங்கிட வழிமுறைகளை வகுத்துத் தாருங்கள். வெறும் செல்வத்தைவிட நிலையான கல்விச் செல்வத்தை எல்லா மக்களும் பெற வழி செய்யுங்கள்.

நம் முன்னாலே இருக்கின்ற பணிகள் மலைபோல் இருக்கின்றன. தனி ஒரு மனிதனாலோ, அவருக்கு துணையிருக்கும் ஏழு எட்டு அமைச்சர்களாலோ ஆகக் கூடிய காரியம் அல்ல இது. நீங்கள் அனைவரும் சேர்ந்து செய்ய வேண்டிய காரியம்

## உங்கள் வீட்டு முதல் பிள்ளை

உங்கள் அத்தனை பேருடைய அன்புக்கு அரணாக இருக்கின்ற வரையில் நிச்சயம் நாங்கள் எடுத்த பணியில் வெற்றி பெறுவோம்.

தலைமைச் செயலாளர் அவர்கள் என்னை முதலமைச்சர் என்று கூறினார். உங்கள் அலுவலகத்தைவிட உங்கள் இல்லத்தைப் பற்றியும், உங்கள் இல்லங்களில் உள்ள கஷ்டம் பற்றியும் நான் நன்றாக உணர்ந்திருப்பதால், உங்களின் முதலமைச்சர் என்பதைவிட உங்கள் வீட்டிலுள்ள முதல் பிள்ளை என்று கருதி ஒத்துழைப்புத் தர வேண்டும்.

(கோட்டை ராணுவ அணிவகுப்பு மைதானத்தில் அரசு அதிகாரிகள், அலுவலர்களிடையே அண்ணா பேசியது.)

* * *

## ஆட்சி ஒரு தொடர்கதை—சிறுகதை அல்ல

தொழிலாளர்களுக்காகப் பணி புரிகின்றவர்கள் சமுதாயத்தின் மதிப்பைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும்; அவர்கள் நல்லவர்களாகவும், வல்லவர்களாக வும் இருக்க வேண்டும்.

"முதலில் கடமையைச் செய்யுங்கள், பிறகு உரிமையைக் கேளுங்கள்" என்று முன்பு (ஆட்சியில்) இருந்தவர்கள் சொன்னதாகவும், ஆனால் நாங்கள் (தொழிலாளர்கள்) கடமையைச் செய்தும், உரிமையை அவர்கள் தரவில்லை என்பதாகவும் இங்கு கூறப்பட்டது. இந்த முறையில் பேசுவது சரியல்ல. இந்தத் தப்பான முறையைப் பின்பற்ற வேண்டாம். நான் எனது காலத்தில் முடிந்ததைச் செய்வேன். எனக்குப் பின் வருபவர்கள் இயன்றதைச் செய்வார்கள். இது தொடர்கதையே தவிர தனித்தனிச் சிறுகதை அல்ல.

"எங்கள் கோரிக்கைகளை இதோ எழுதித் தந்திருக்கிறோம்; படித்துப் பாருங்கள்! அதில் நியாயம் இருப்பதாக உங்களுக்குத் தோன்றினால், செய்யுங்கள்; இல்லாவிட்டால் வேண்டாம்" என்று இங்கு கூறப்பட்டது. நியாயம் நிச்சயம் இருப்பதால் தான் இவ்வளவு தைரியமாகப் பேச முடிகிறது. ஆனால் நியாயம்கூட அதிக விலை என்றால் அதை வாங்குவது கடினம். என்னிடம் கொடுக்கப்பட்டுள்ள பெட்டிதான் பெரிது. பணம் சிறிது.

## மந்திரியே தவிர மந்திரக்காரன் அல்ல

மந்திரி என்றால் மந்திரக்காரன் அல்ல. நீங்கள் வந்து பாருங்கள், உங்கள் பணத்தை இப்படி இப்படிப் பங்கிட்டு வைத்திருக்கிறேன் என்று காட்டுகிறேன். அதிலிருந்து கொஞ்சம் எடுத்து இதற்குப் போடலாம். இதிலிருந்து அதற்கு எடுத்துக்கொள்ளலாம் என்று உங்களுக்கு உண்மை, நியாயம் என்று தோன்றினால் செய்யுங்கள்.

நான் உங்கள் கஷ்டத்தை அறியாதவன் அல்ல; உங்கள் மத்தியிலிருந்து வந்தவன்தான்–எங்கிருந்தோ வந்தவன் அல்ல.

உங்கள் குடும்பம் தழைக்க வேண்டும், உங்கள் குடும்பங்களில் நிம்மதி நிலவ வேண்டும் என்பதே என் ஆசை.

ரூபாய்க்கு படி அரிசித் திட்டத்தை நான் கொண்டு வந்தபோது, அதிகாரிகள் என்னைக் கோபத்தோடு அல்ல பரிதாபத்தோடு பார்த்தார்கள். 'விபரம் தெரியாமல் செய்கிறானே' என்ற அனுதாபம் அவர்கள் பார்வையில் இருந்தது.

ஏழை மக்களுக்குக் கட்டுபடியாகக் கூடிய விலையில் உணவு வழங்கப்படவில்லையானால், நாட்டில் எந்த நல்ல காரியமும் சரியாக நடைபெறாது எனக் கருதுபவன் நான். அதனால்தான், யாரும் செய்யக் கூடாத காரியத்தை "செய்யக்கூடாது" என்று மற்றவர்கள் சொல்லும்

காரியத்தை – ரூபாய்க்கு படி அரிசித் திட்டத்தைச் செய்யத் துணிகிறேன்.

## எதிர்காலம் தொழிலாளர்களுக்கே !

எதிர்காலம் தொழிலாளர்களுடையது என்பது அய்யமில்லை. எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய அரசு தொழிலாளர் அரசாகத்தான் அமையும்.

தொழிலாளர்களுடைய கோரிக்கைகளில் உள்ள நியாயத்தை நான் ஏற்கிறேன். அக்கறையோடு கவனிப்பேன். உடனடியாகச் செய்யக் கூடியதை உடனடியாகச் செய்வேன். படிப்படியாகச் செய்யவேண்டியதைப் படிப்படியாகச் செய்வேன்.

## கல்வித் திட்டத்தின் கீழ் பொது அறிவு போதனை

தொழிலாளர்களுக்குக் கல்வி போதிக்கப்படுவதைக் காண மகிழ்ச்சியடைகிறேன். நம் நாட்டில் ஒரு கெட்ட பழக்கம், படிப்பவன் வேலை செய்ய மாட்டான். ஆனால் இந்த நிலை மெல்ல மெல்ல மாறி, தொழிலாளர்கள், தங்கள் வேலை நேரம் போக ஓய்வு நேரத்தில் கல்வியறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற நிலை வந்திருக்கிறது. இவ்வாறு அவர்கள் கல்வி பெறுவது அவர்கள் தொழிலுக்கே பயன்படும். அதோடும் கூட மற்ற பொது அறிவைப் பெறுவதும் நல்லது. உதாரணமாக அரசாங்க நிதி நிலையைப் பற்றி அவர்கள் தெரிந்து கொள்வது நல்லது. அவ்வாறு தெரிந்திருந்தால் அளவு மீறிய கோரிக்கைகளை எழுப்ப மாட்டார்கள். நாம் கேட்டால்கூட, அவர்கள் எங்கிருந்து தருவார்கள்? என்பது தெரிந்து விட்டால் கேட்கவே மாட்டார்கள்.

## ஈர விறகுதான் கிடைத்திருக்கிறது

“மணி என்னாகிறது, இன்னுமா ஆகவில்லை” என்று அடுப்பங்கரைப் பக்கம் திரும்பிப் பார்த்தால் என்ன ஆகும்? “நீங்கள் வாங்கிவந்த ஈர விறகு இலட்சணம் அப்படி;

அவசரப்பட்டால் முடியாது; மணி மூன்றாகும்" என்று பதில் வரும்.

அதைப் போல் எங்களிடம் "ஈர விறகு" தரப்பட்டிருக் கிறது. ஊதி ஊதிப் பார்க்கிறோம். பற்றினால் சரி, வேக வேண்டியது வேகும். அவ்வளவு தான் நான் சொல்லுவேன். மற்றதை நீங்களே புரிந்து கொள்ளுங்கள்.

(சென்னை அரசு அச்சகத் தொழிலாளர் கூட்டத்தில், தொழிலாளர்களுக்கான கல்வித் திட்டத்தில் பங்கு கொண்டு தேர்வு பெற்ற தொழிலாளர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி அண்ணா ஆற்றிய உரை)

# 8. அஞ்சல் ஊழியர் பற்றி அண்ணா

எந்தக் கட்சியின் சார்பில் ஒருவர் உறுப்பினர் ஆகின்றார் என்பது முக்கியமான பிரச்சினை அல்ல; அவர், 'எந்த பிரச்சனைக்காக உறுப்பினராக ஆகியிருக்கிறார்' என்பதுதான் பிரச்சனை!

தபால் தந்தி இலாக்காவைச் சேர்ந்தவர்கள் அவர்களுக்கென ஒரு பிரதிநிதியை-கீழ்ச் சபைக்கு இல்லா விட்டாலும், மேல் சபைக்காவது-கட்டாயம் அனுப்பி வைக்க வேண்டும்; இப்படிப்பட்டவர்கள் அப்படிப்பட்ட இடங்களில் இருக்க வேண்டும்.

இப்போது கலைஞர்களுக்கும்-ஆசிரியர்களுக்கும் பட்டதாரிகளுக்கும்-இன்னும் பிறருக்கும் அரசியல் மன்றங்களில் இடம் கொடுத்திருக்கும்போது, இதுபோன்ற அலுவலகத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்காக ஒரு பிரதிநிதித்துவம் அரசாங்கம் ஏன் கொடுக்கக்கூடாது? கொடுத்தால் என்ன கெட்டுவிடும்?

இந்த அலுவலகங்களில் பல ஆண்டுகளாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் அரசியல் மன்றங்களுக்கு வந்தால், பிரச்சினையை அவர்கள் தெளிவாக விளக்க முடியும்.

அலுவலகங்களில் வேலை செய்கின்றவர்களுக்கு அரசியல் மன்றங்களில் ஒரு பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டும்; குறிப்பாக-இரயில்வே தொழிலாளர்களுக்காகவும், வங்கித் தொழிலாளர்களுக்காக வும், தபால்-தந்தித் தொழிலாளர்களுக்காகவும் அரசியல் மன்றங்களில் இடம் அளிப்பது அவசியம்; ஏனென்றால் அவர்கள் அங்கே வந்து பேசினால், பிரச்சினையில் உயிரோட்டம் இருக்கும்; வெறும் அரசியல்வாதிகள் பேசினால் பிரச்சினையில் உயிரோட்டம் இருக்காது;

எனவே, இதை எப்படி நீங்கள் நிறைவேற்றிக் கொள்வது என்பதையும்-நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்; நீங்கள் கேட்டால், அரசாங்கம் உங்களிடத்தில் சற்று பய பக்தியோடு நடந்துகொள்ளும்; அமைச்சர்களும் தொழிலாளர்களாகிய உங்கள் பிரச்சினைக்காக இணங்கி வருதல் கூடும்; ஏனென்றால் இப்பொழுது இருக்கின்ற உறுப்பினர்கள், சட்டசபையில் எல்லாப் பிரச்சினைகளைப் பற்றியும் பேசுதல் என்பது இயலாது; எனவே எல்லாத் துறைகள் பற்றியும் நாங்கள் பேச முடியுமென்று நீங்கள் நம்புகிறீர்களா? அது முடிகிற காரியமா?

ஆகவே, யாராவது ஒருவர் அஞ்சல் இலாகாவில் இருந்து சட்டமன்றத்திற்கு-மக்கள் சபைக்கு வந்தால், குறிப்பிட்ட நேரத்தில் பிரச்சினையைத் தெளிவாக விளக்க முடியும்; எனவே இப்படிப்பட்ட இடங்களில் நீங்கள் இருக்க வேண்டும் என்பதை நான் உணர்கிறேன்.

**(15–3–60–ல் அஞ்சல் ஊழியர் கூட்டத்தில் அண்ணா)**

## 9. எல்.அய்.சி. ஊழியர் நிலை குறித்து அண்ணா

**மி**ன் விசைக் கணக்குப் பொறிகளை புகுத்துவதால் ஏற்படும் பயங்கரமான விளைவுகள் நமக்குத் தெளிவாகத் தெரிகின்றன–எதிர்க்கின்றோம்.

இது தொழிலாளருக்கு உதவி செய்யும் பொறி அல்ல. உபத்திரவம் தருகிற ஒன்று.

இன்றைய நிலையில், ஊழியர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்து-அவர்கள் வாழ்வில் மலர்ச்சியை உருவாக்கும் கருவி அல்ல இது! அவர்களின் கண்களில் மருட்சியை உருவாக்கும் ஒன்று!

நாள் முழுவதும் ஓர் ஊழியர் வேலை செய்து முடித்து, வேலைப் பளுவால் சோர்ந்து கிடக்கும்போது - தனக்கென்று ஒதுக்கப்பட்ட வேலையைச் செய்ய முடியாமல் திணறிக்கொண்டிருக்கும்போது 'ஊழியர்க்கு உதவி செய்யும் கருவி இது' என்றால் நம்மால் புரிந்து கொள்ள முடியும்!

'இறகுப் பேனாவுக்குப் பதில் ஊற்றுப் பேனா' என்றால், பனை விசிறிக்கு பதில் மின்சார விசிறி' என்றால், 'கட்டை வண்டிக்குப் பதில் தொடர் வண்டி' என்றால்-இவையெல்லாம் வேலைப் பளுவைக் குறைக்கின்ற சாதனங்கள்!

'வேலையில்லாத் திண்டாட்டம்' என்று ஒரு பக்கம் நாடாளுமன்றம் அறிக்கை கொடுத்துக் கொண்டிருக் கின்றது! ஆனால் இங்கேயோ-ஆயிரக்கணக்கில் வேலையில் உள்ளவர்களை வீட்டுக்கு அனுப்பும் திட்டம் மும்முரமாகச் செயல்படுத்தப்படுகிறது! எனவே, ஆட்சியாளரின் நோக்கத்தில் நமக்கு சந்தேகம் ஏற்படுகிறது!

"சென்ற தலைமுறையில் தொழிலாளர் வர்க்கம் அடக்க ஒடுக்கமாக இருந்தது; சொன்ன வேலையைத் தொழிலாளர்கள் செய்தார்கள்! கொடுத்த கூலியை வாங்கிக் கொண்டார்கள்; இன்றையத் தொழிலாளர்களோ, அடக்கமற்றவர்களாக-கிளர்ச்சிக்காரர்களாக-நன்றி மறந்தவர்களாக இருக்கிறார்கள்" இப்படி இந்திய அரசு நினைக்கிறது!

*அதிலும் குறிப்பாக எல்.அய்.சி. போன்ற அமைப்புகளில் பணி புரியும் வெள்ளுடை ஊழியர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை! வெள்ளுடை ஊழியர் அணியைச் சிதைக்க இந்திய அரசு மேற்கொண்ட சதிச் செயல்கள் பலன் தரவில்லை!*

*பார்த்தார்கள் ஆட்சியாளர்கள்—"இவர்களை நம்பிக் கிடப்பதால்தானே இந்தத் தொல்லை? மின் விசைக் கணக்குப் பொறிகளை இறக்குமதி செய்-அவற்றை தொழிலகங்களில் பயன்படுத்து-அவை கிளர்ச்சி செய்ய மாட்டா-ஆணைக்கு அடங்கி அமைதியாக வேலை செய்யும்" என்று முடிவு செய்துவிட்டார்கள். அதன் மூலம், "தொழிலாளர் பிரச்சனையை ஒரு கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம்' என்று எண்ணினார்கள்; அதன் விளைவுதான், மின் விசைப் பொறிகளை இங்கே நுழைத்த செயல் ஆகும்!*

*எனவே, 'இது தொழிலாளர் விரோத நடவடிக்கை; சமூக விரோத நடவடிக்கை' என்று நான் துணிந்து குற்றஞ் சாட்டுகிறேன்!*

*'இங்கே தொழில் செய்ய வல்லவர்கள் நிரம்ப உண்டு' அவர்களிடம் ஆற்றல் இருக்கிறது! ஆனால் வேலைதான் இல்லை!*

*இப்படிப்பட்ட நிலையிலா மின் விசைப் பொறி களைக் கணக்குத் துறையில் நுழைப்பது?*

*(28-5-66-ல் கோவையில் நடைபெற்ற எல்.அய்.சி. ஊழியர் கூட்டத்தில் அண்ணா பேசியது)*

## 10. டாக்ஸி-ஆட்டோ ஓட்டுனர்களுக்கு அண்ணா அறிவுரை

*நாட்டில் ஒரு தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்கள், அதில் நிம்மதி பெறுவது கிடையாது; அடுத்த தொழில்மீது தான் ஆசைப்படுவார்கள்?*

பஸ் ஓட்டுபவர் 'லாரி ஓட்டுவதுதான் இலாபகர மானது' என்று நினைக்கக் கூடும்; லாரி ஓட்டுபவர், 'பஸ் ஓட்டுவது பெருமை தரக்கூடியது' என்று கருதுவார்; டாக்சி ஓட்டுபவர்-சொந்தக் கார் ஓட்டுவதை விரும்புவார்; தனிப்பட்டவர்களிடம் கார் ஓட்டுபவர்களுக்கு டாக்சி ஓட்டுவதில் நாட்டம் ஏற்படலாம்!

இப்படி, அவரவர் நினைப்பில் எதுதான் உண்மை?— எல்லாம் இக்கரைக்கு அக்கரை பச்சை என்பதைப் போலத்தான்!

ஆகவே, ஒரு தொழிலில் இருப்பவர் வேறு தொழிலில் நாட்டம் செலுத்துவது நல்லதல்ல!

'இந்தத் தொழில் நல்லதா-அந்தத் தொழில் நல்லதா' என்று நினைக்காமல்-இந்த டாக்சி ஓட்டும் தொழில் வளரக் கூடியது என்பதை நம்பி-இதிலேயே நீங்கள் இருக்க வேண்டும்; இந்தத் தொழில் நியாயமானது-நிம்மதி தரக்கூடியது என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்க வேண்டும்!

அமெரிக்கப் பணக்காரர்கள் வீட்டில் கார் ஓட்டிகளாக வேலை செய்பவர்கள், தாங்களும் சொந்தத்தில் கார் வைத்திருக்கிறார்கள்; தாங்கள் வீட்டிலிருந்து தங்கள் சொந்தக் காரிலேயே வேலைக்குச் செல்கிறார்கள்; தாங்கள் வேலை செய்யும் வீட்டிற்குச் சென்றவுடன்-சொந்தக் காரை அங்கு நிறுத்தி விட்டு, முதலாளியின் காரை ஓட்டுகிறார்கள்; வேலை முடிந்ததும் சொந்தக் காரை எடுத்துக் கொண்டு வீடு திரும்புகிறார்கள்; அதைப் போன்ற வசதி நமது நாட்டில் இல்லை!

செல்வம் கொழிக்கும் அமெரிக்காவில் ஒருவருக்கு மூன்று-நான்கு என்ற விகிதத்தில் கார் இருப்பதாகச் சொல்லப்படுகிறது; பொருளாதார வளர்ச்சி ஏற்பட ஏற்பட இந்தத் தொழிலில் நிம்மதி ஏற்படும்!

நீங்கள் உண்மையிலேயே பலவிதமான பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றீர்கள். உங்கள் பிரச்சினையை மூன்று முறையில் அணுக வேண்டும். ஒன்று - அதிகாரிகளுக்கும் - உங்களுக்கும் உள்ள உறவு; இரண்டாவது - முதலாளிகட்கும் - உங்களுக்கும் உள்ள உறவு; மூன்றாவது - பொதுமக்களுக்கும் உங்களுக்கும் உள்ள தொடர்பு, இந்த மூன்று தொடர்புகளையும் ஆராய்ந்து பார்த்தால், இருக்கின்ற சிக்கல் தீர வழிபிறக்கும்.

"சமுதாயத்துக்கு எந்தவித ஆபத்தும் இல்லாதபடி பாதுகாப்புடன் ஓட்டக்கூடியவர்கள் டாக்சி டிரைவர்கள்" என்ற எண்ணம் சமுதாயத்தினருக்கு ஏற்படவேண்டும்.

டாக்சி ஓட்டுபவர்கள் தமது பணியை, 'மிகப் பொறுப்பான பணி' என உணர்ந்து பணியாற்றினால், 'சமுதாயத்துக்கு அவர்கள் எவ்வளவு தேவையானவர்கள்' என்பது மக்களுக்குப் புரியும்!

நீங்கள் பொதுமக்களிடம், மரியாதை - பண்பாடுடன் நடந்து கொள்ள வேண்டும்.

பொதுமக்களும், டாக்சியில் ஏறியதும், தங்களை விட டாக்சி ஓட்டுபவர்கள் கீழ்த்தரமானவர்கள், என்ற நிலையில் பேசக்கூடாது!

உங்களை நீங்களே பலப்படுத்திக் கொள்ளுங்கள்; அதற்குச் சரியான வழி, 'சங்கத்தில் அங்கம் வகிக்காத ஆளே இல்லை' என்கிற அளவில் எல்லோரும் உறுப்பினர்களாக ஆகி, சங்கத்தைப் பலப்படுத்திக் கட்டிக் காத்து வருவதுதான்!

*(1961:ல் தமிழ்நாடு டாக்சி, ஆட்டோ, ரிக்ஷா டிரைவர்கள் சங்கத்தின் சிறப்புக் கூட்டத்தில் அண்ணா)*

# 11. மீனவர்கள் பற்றி அண்ணா

நகத்திலே அழுக்குப் படாமல் மற்றவர்கள் உழைப்பினை உறிஞ்சி வாழ்பவர்கள், சமுதாயத்தில் உயர்ந்த சாதிக்காரர்களாகக் கருதப்படுகிறார்கள்; ஆனால் கட்டுமரத்திலே ஏறி — கடலில் வெகுதூரம் சென்று வீடு திரும்பும் இவர்கள் செய்யும் தொழிலின் காரணத்தால், அருவருப்புடன் பார்க்கத் தக்கவகையில் இருக்கிறார்கள் — செம்படவர்கள் என்று கேவலமாக அழைக்கப்படுகிறார்கள்.

இந்தச் சமுதாயத்தில் உள்ள இரண்டொருவர் சுயமரியாதைக் கட்சியிலே சேர்ந்த பின்னர் — தெளிவு பெற்ற பின்னர், 'இந்தச் சமுதாய மக்கள் கேவல மானவர்கள் அல்லர் — செம்படவர்கள் அல்லர்'; 'மீனவர்கள்—மீனவ சமுதாயத்தினர்' என்று அழைக்கப் பட்டனர்!

இந்த நாட்டிலேதான் இந்தத் தொழில் இவ்வளவு கேவலமாகக் கருதப்படுகிறது; இந்தத் தொழிலை நடத்துகின்ற மக்கள் கேவலமாக—இழிவாக நடத்தப் படுகிறார்கள்; ஆனால் மேலை நாடுகளில் இந்தத் தொழில், மிகவும் பெருமை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது!

மனைவி, மக்களைவிட்டுப் பிரிந்து —'திரும்பி வருவது நிச்சயம்' என்று சொல்ல முடியாத நிலையில் — கட்டு மரத்தில் 50 மைல் 60 மைல் தூரம் ஆழ் கடலில் சென்று, மீன் பிடித்துக் கொண்டு வீடு திரும்புகிறார்கள்; பிடித்த மீனை விற்று வாழ்க்கை நடத்துகின்றார்கள்.

நிலத்திலே விதை விதைத்து—தண்ணீர் பாய்ச்சி—களை எடுத்து—உழைப்பின் பயனை அனுபவிக்கிறார்கள்; ஆனால் உங்களுக்கோ, அப்படி இல்லை; கடலிலே ஏராளமான மீன் வளம் இருக்கிறது; விதைக்காது விளையும் கழனிபோல் கடல் இருக்கிறது; இருந்தும், உங்களிலே எல்லாவித வசதியோடும் வாழ்க்கை நடத்துபவர்கள் எத்தனை பேர் இருக்கிறீர்கள்? தலைமுறை தலைமுறையாக இதே நிலையில் நீங்கள் இருக்கிறீர்களே ஏன்?

**(1–4–61'ல் தாழம்பேட்டை கூட்டத்தில் அண்ணா)**

# 12. அண்ணாவும் கைத்தறியும்

விஞ்ஞானம் இன்று பெரும் அளவு வளர்ந்துள்ளது; மாட்டு வண்டியும் குதிரை வண்டியும் இருந்த இடத்தில்—மோட்டார் போன்ற வாகனங்கள் இடம் பெற்றிருக்கின்றன! உரலும் உலக்கையும் இருந்த இடத்தில்—நெல் அரைக்கும் இயந்திரங்கள் இடம் பெற்றிருக்கின்றன! இப்படி—இன்று எத்தனையோ எண்ணற்ற விஞ்ஞானக் கருவிகள், நமது வாழ்வில் இடம் பெற்றுள்ளன!

விஞ்ஞானத்தையும்—முற்போக்கையும் வரவேற்கின்ற நாம், 'மக்கள் மிகக் குறைவாக உழைத்து நிரம்பப் பலன் பெற வேண்டும்' என்று பாடுபட்டு வருகின்ற நாம்—ஆலைகள் தோன்றிவிட்ட பிறகும், 'கைத்தறி இருக்க வேண்டும்' என்கிறோம்; மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் முரண்பாடு போலத் தோன்றும்; ஆனால் முரண்பாடு அல்ல!

குதிரை வண்டியும்—மாட்டு வண்டியும், மோட்டார் போன்ற வாகனங்களுடன் போட்டி போட முடியாது; உரலும் உலக்கையும் இயந்திரங்களுடன் போட்டியிட முடியாது; மாறாக, ஆலைகளுடன் கைத்தறி போட்டி போட முடிகிறது; ஆலைகள் எந்தெந்த ரகங்களில் துணிகளை நெய்கின்றனவோ, அந்த அளவுக்கு ஏறத்தாழ எல்லா ரகத் துணிகளையும் கைத்தறியில் நெய்ய முடிகிறது!

விஞ்ஞான வளர்ச்சியை எதிர்த்து வேறு எதுவும் போட்டியிட முடியாமல் இருக்கும்போது, கைத்தறி மட்டும்—ஆலைகளை எதிர்த்து நின்று இன்றுவரை நிலைத்திருக்கின்றது; எதிர்காலத்திலும் நிலைத்திருக்கக் கூடியது! எனவேதான், 'மக்களின் உழைப்பைக் குறைத்து, வசதிகளை அதிகரிக்க விஞ்ஞான வளர்ச்சி தேவை'' என்கிற நாம் கைத்தறி மட்டும் வாழ வேண்டும் என்று விரும்புகின்றோம்.

கைத்தறியாளர்ப் பிரச்சினையிலேனும் எல்லாக் கட்சியினரும்—கட்சிகளை மறந்து ஒன்று படுகின்ற ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த கைத்தறி நெசவாளர் சங்கத்தவரின் பெருந்தன்மைக்கு நன்றி செலுத்துகிறேன்!

விழாக்கள்—பொதுவாக மகிழ்ச்சியின் அடிப்படையில் அமைக்கப்படும்; இந்த விழாவில் கூடியிருக்கின்ற நாம், மகிழ்ச்சியோடு இருக்கின்றோம்; ஆனால் இந்த விழா யாருக்காக நடைபெறுகின்றதோ அந்த நெசவாளர்கள்—மகிழ்ச்சியுடன் இருப்பதாகக் கூற்முடியாது.

அந்தக் கைத்தறித் தொழிலாளர் நிலை இன்று மகிழ்ச்சி தரத்தக்கதாக இல்லை!

இந்த விழாவில் கலந்து கொண்ட முதன் மந்திரி காமராசர் அவர்கள், இன்று நாட்டில் கைத்தறித் துணிகள்—ஒருகோடி ரூபாய் பெறுமானமுள்ளவை—விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கிறது, என்று கூறியிருக்கிறார். அரசு தரும் புள்ளி விபரம் அது; ஆனால், நாட்டில் இரண்டு அல்லது மூன்று கோடிரூபாய் பெறுமான முள்ள துணிகள் தேங்கிக்கிடக்கக் கூடும்.

இதற்குக் காரணம் என்ன? கைத்தறித் துணிகள்-ஆலைகளிலிருந்து வந்து குவியும் துணிகளுடன் போட்டியிட முடியாதது தானே? "கூட்டாக இருத்தல்" என்ற நிலை அரசியலுக்கு—அதுவும் சர்வதேச அரசியலுக்கு சாதகமானதாக இருக்கலாம்; ஆனால், கைத்தறியும்—ஆலையும் கூட்டாக வாழ்தல் சாத்தியமா என்றால், இல்லையே!

கைத்தறித் துணிகளை விற்பனை செய்ய வேண்டும்; கைத்தறித்துணிகளுக்கு ஏற்படும் கடும் போட்டிகளை சமாளிக்க வேண்டும்—எத்தனை கணைகளைத் தான் நெசவாளி தாங்குவது?

நாட்டில் ஒரு பழமொழி சொல்லுவார்கள்—'இரண்டு பெண்டாட்டிக்காரன்பாடு திண்டாட்டம்' என்று; ஆனால்,

நமது காங்கிரசு அரசு மூன்று மனைவிகளுக்கு அல்லவா கணவனாக இருக்க வேண்டியிருக்கிறது!

கதர்—மூத்த மனைவி'
ஆலைகள்—தேசியப் போராட்டத்தின் போது, 'தேவை' எனத் தேடிப் பெறப்பட்ட அவற்றின் முதலாளிகள்—இரண்டாம் மனைவி.
கைத்தறி—மூன்றாம் மனைவி; அதுவும் கண்ணீரைப் பார்த்த பின்!

இப்படி, 'கதர் உற்பத்தியும் வேண்டும்—ஆலை அரசர்களின் தயவும் வேண்டும்—கைத்தறியும் வாழ வேண்டும்' என்று கருதுகிறது அரசாங்கம்!

சாத்தியமாகுமா?

அன்பர் ஆச்சாரியார், இதனால்தான்—அவர் ஆட்சிப்பீடத்தில் இருந்த போது—இந்தக் கைத்தறிப் பிரச்சினைக்காக—தெளிவாக ஒரு தீர்மானத்தைச் சட்ட சபையில் நிறைவேற்றினார்.

அன்பர் ஆச்சாரியார் கூறுவனவற்றை எப்போதுமே சற்று சந்தேகத்துடன் உற்று நோக்கும் நானே, இந்தப் பிரச்சினையில் அவர் கருத்தை 'முழுமனதுடன் ஆதரித்தேன்; "சேலை வேட்டிகளின் உற்பத்தியைக் கைத்தறிகளுக்கே ஒதுக்க வேண்டும்" என்ற அந்தத் தீர்மானத்திற்கு—இதுவரை எப்போதும் கிடைக்காத வகையில் எல்லாக் கட்சிகளின் ஒருமுகமான ஒப்புதலைப் பெற்று நிறைவேற்றி—டில்லிக்கு அனுப்பி வைத்தார்.

ஆனால் டில்லி மத்திய அரசாங்கத் தொழில் மந்திரியாயிருக்கும் டி.டி. கிருஷ்ணமாச்சாரி கைத்தறியுடன் ஆலைகள் போட்டி போடுவதைத் தடுக்க முடியாது' என்று கூறிவிட்டார்.

போட்டியைத் தவிர்க்க வேண்டும் என்று கூறியவர் ஆச்சாரியார்! அதைக் கூடாது என்று கூறுபவரும் ஒரு டி.டி. கிருஷ்ணமாச்சாரி—அவரும் தென்னாட்டுக்காரர்தான்!

தீர்மானத்தை இந்த நாட்டில் உள்ள எல்லாக் கட்சியினரும் ஆதரித்தனர் தலைவர் பி.டி. இராசன் போன்ற இந்த நாட்டை ஆண்டவர்கள் ஆதரித்தனர்; ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ள காங்கிரசார் ஆதரித்தனர்; 'நாட்டை ஆளவே கூடாது' என்று சபிக்கப் பட்டிருக்கின்ற என்போன்றவர்கள் ஆதரித்தனர்—இப்படி எல்லோரும் ஒருமுகமாக ஏற்றுக் கொண்ட தீர்மானத்தை மத்திய அரசாங்கம் புறக்கணித்து விட்டது!

எனவேதான், இது போன்ற விழாக்களில் என்னைப் போன்றவர்களை அழைப்பதைக் காட்டிலும் 'மத்திய அரசாங்க அமைச்சர்களை அழைத்து வந்து காட்டுங்கள்—இங்கே குவிந்துள்ள கைத்தறித் துணிகளின் உயர்ந்த தரத்தினையும், அவைகளை நெய்யும் கைத்தறியாளர்களின் கைத்திறனையும் அவர்களுக்குப் புலப்படுத்துங்கள்—அப்படியே அந்த அமைச்சர்களைக் கைத்தறியாளர்கள் வாழும் குடிசைகளுக்கு இட்டுச் சென்று, அங்கு அவர்கள் படும் துயரங்களையும் காணச் செய்யுங்கள்— அவர்களது பசி நீங்க அமைச்சர்களிடம் வழிவகை காணுமாறு கூறுங்கள்' என்று கூறுகின்றேன்.

இங்கு பேசிய அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள், 'கைத்தறியாளருக்கு நிரந்தரமான பாதுகாப்புக் கிடைக்க மத்திய அரசாங்கம் தான் வழி செய்ய வேண்டும்; சிலரக துணிகள் நெய்வதைக் கைத்தறிக்கே ஒதுக்க வேண்டும், என்று கூறியிருக்கிறார்.

'காய்ச்சல் விட்டால் கைகால் பிடிப்பு விடும்' என்பது போல, மத்திய அரசாங்கம் மனது வைத்தால்தான் கைத்தறி வாழும் என்கிறார் மந்திரி சுப்பிரமணியம்.

காய்ச்சல் விடுவதற்கு செந்தூரமா—பஸ்பமா—பச்சிலையா இன்ஜெக்ஸனா—யுனானி முறையா சித்த வைத்தியமா—ஓமியோபதியா—நாட்டுமுறையா—ஆங்கில முறையா என்பதை நாம் வேறு அரசியல் மேடைகளில்

பேசிக் கொள்ளலாம். இப்போது 'காய்ச்சல் விட்டால், கை கால் பிடிப்பு விடும், என்பதை மட்டும் கூறிக் கொள்வோம்!

கைத்தறி நெசவாளர்கள் நெய்த அருமையான துணிகள் இங்கே காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கின்றன; அந்த வண்ணத் துணிகள், கண்ணைக் கவரும் வகையில் ஒளிவிளக்குகளுக்கு மத்தியில் இருக்கின்றன!

ஆனால், அவைகளை நெய்த நெசவாளர்கள், இருள் நிறைந்த குடிசைகளில் வாழ்கின்றார்கள்.

அவர்கள் வாழும் குடிசைகள் மட்டுமல்ல இருள் நிறைந்தது—அவர்களின் வாழ்வே இருள் நிறைந்து கிடக்கிறது. இங்கு வைக்கப்பட்டுள்ள துணிகளை நாங்கள் பார்வையிட்டோம்; தலைவர் பி.டி. இராசன் அவர்கள் கூட, 'இவ்வளவு அருமையான துணிகளை நெய்யும் நெசவாளர்கள் இந்தக் காலத்தில் இன்னும் பட்டுப் போகாமல் இருப்பது, ஆச்சரியமாகவே இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

அத்தகைய கைத்திறனும்—நுணுக்கமும் கொண்ட நெசவாளர்கள் பரிதாபத்துக்குரிய அவல நிலையில் இருக்கிறார்கள்.

எங்களுக்கு இந்தத் துணிகளைச் சுற்றிக் காட்டிக் கொண்டுவந்த சங்கத் தலைவர், ஒவ்வொரு ரகக் கைத்தறித் துணியையும் காட்டி—அதற்கு சமமான ஆலைத் துணியின் பெயரையும் விளக்கினார்; காஷ்மீர் சால்வையா?—திருச்செங்கோட்டு நெசவாளர்கள் நெய்த போர்வை இதோ' என்று, ஆலைத் துணிகளில் உள்ள ஒவ்வொரு ரகத் துணியையும் எங்களுக்குக் காண்பித்தார்கள்.

'கைத்தறிக்கு ஏற்பட்டுள்ள அவல நிலை, மிக பயங்கரமானதாக இருக்கிறது' என்று வரவேற்றுப் பேசிய நாச்சிமுத்து அவர்கள் குறிப்பிட்டார்கள்—கழகம் கைத்தறித் துணிகளைத் தோளில் தூக்கி விற்றது குறித்து,

திருச்சியில் நானும்—கழகத் தோழர்களும் துணிவிற்பனையில் ஈடுபட்டிருந்த போது, நண்பர் உடுமலை நாராயண கவி அவர்கள் கைத்தறித் துணி விற்பனைக்காக இயற்றியிருந்த பாடல் ஒன்றை நண்பர் அனீபா பாடிக் கொண்டிருந்தார்; அந்தப் பாடலின் "சின்னாளப்பட்டி" என்ற ஊரில் நெய்யப்படும் துணிபற்றியும் ஒரு பாடல் பாடப்பட்டது. அதைக் கேட்ட ஒருவர் கூட்டத்திலிருந்து ஓடி வந்து கீழே விழுந்து கும்பிட்டு, 'நீங்கள் பாடியிருக்கிறீர்களே, சின்னாளப்பட்டி நெசவு பற்றி—அந்த சின்னாளப்பட்டியைச் சேர்ந்த நெசவாளன்தானய்யா நான்; தலையில் இருப்பது 15 சேலைகள்—நான் நெய்தவை; கடந்த நான்கு நாட்களாக திருச்சியில் அலையாத தெருவில்லை; கூவாத குரலில்லை, ஒரு சேலையும் விற்கவில்லை; குடும்பமே பட்டினி' என்று கதறி அழுதார். அந்தக் காட்சியைக் கண்டவர் எவரும் கண்ணீர் வடிக்காமல் இருக்க முடியாது!

அப்படி நெசவாளர்கள் துன்பப்படுகிற நிலைக்கு மாற்றந் தேடித்தராத எந்த ஓர் அரசாங்கமும், வெட்கத்தால் தலை குனியாமலிருக்க முடியாது!

நெசவாளர்கள் கையேந்தி பிச்சையெடுக்க வெட்கப்பட்டு—அட்டைகளில் தங்களின் அவல நிலையை எழுதி—தெருக்களில் போவோர் வருவோரிடம் காலணா, அரையணா பெற்று வயிறு கழுவினார்களே—அந்தக் காட்சிகளை யாரும் மறக்க முடியாது!

அந்த நிலையை மாற்ற அரசாங்கம் எடுத்துக் கொண்ட முயற்சிகளை நாம் பாராட்டுகிறோம்—நன்றி செலுத்துகிறோம்!

நெசவாளர்கள் அன்றுபோல் இன்று பிச்சை எடுக்காவிடினும், ஓரளவு வாழ வழி ஏற்பட்டிருக்கிறது என்றாலும், இப்பொழுது வரும் செய்திகள் நமக்கு அச்ச மூட்டுகின்றன.

ரூ.2 கோடி பெறுமானமுள்ள கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன என்றால், என்ன பொருள்? நெசவாளர்களின் கண்களில் நீர் தேங்குகிறது என்பதுதானே அதன் அர்த்தம்?

துணிகள் விற்பனையாகாமல் தேங்கினால்— நெசவாளர் உற்பத்தி செய்ய முடியாது; உற்பத்தி செய்யாவிடின் கூலி கிடையாது; கூலி இன்றேல் சோறு இல்லை; வறுமை வாட்டும்; பசி, அவர்களைப் பிய்த்துப் பிடுங்கும்; எனவே அந்த நிலைமை அவர்களுக்கு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்; வாயளவில் அனுதாபம் காட்டுவதுடன் அரசாங்கத்தின் கடமை முடிந்து விடாது—விடக்கூடாது.

கைத்தறியாளர்மீது அனுதாபம் கொண்ட மக்களுக்கு எந்த நேரத்திலும் துணிவாங்கும் சக்தி இல்லை; நாட்டுப் பொருளாதாரம் அப்படி இருக்கிறது; எனவே புதுத்துணி வாங்கப்படும் பொங்கல் நாளையொட்டி, இந்தக் கைத்தறி வார விழாக் கொண்டாடப்பட்டால், ஏராளமான கைத்தறி விற்பனையாகும் மார்க்கம் உண்டு. சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரையாயினும்—அகில இந்தியாவிலும் இல்லா விடினும்—இந்தப் பொங்கல் நாளில் விழாக் கொண்டாடப் பட்டால், கைத்தறி விற்பனையில் கணிசமான முன்னேற்றம் இருக்க முடியும் என்று கருதுகிறேன்.

பொதுமக்கள் மட்டுமே ஆர்வம் கொண்டவர்களாக வும்—ஆதரவு காட்டுபவர்களாகவும் இருந்தால் போதும்— என்று அரசாங்கம் கருதிவிடக் கூடாது.

மத்திய அரசாங்கம் இராணுவத்திற்கென்று மட்டும் ஆண்டுதோறும் 200 கோடி ரூபாய் செலவிடுகிறது. அந்த இராணுவத்தினருக்குத் தரப்படும் ஆடைகளைக் கைத்தறி ஆடைகளாகவே மத்திய அராசாங்கம் வாங்க வேண்டும்; அப்படிச் செய்தால், ஒரு ரூபாய் பெறுமானமுள்ள துணிகூடத் தேங்காது விற்பனையாகும். ஆலைத்

துணிகளைப் போன்றே நல்ல தரமும்—உழைப்பும் கொண்டவைதானே கைத்தறித் துணிகளும்!

அதைப் போலவே மாநில அரசாங்கமும்—போலிசு இலாக்காவுக்கு துணிகளைக் கைத்தறியாகவே வாங்க வேண்டும்; அவர்களுக்குத் தேவையான முறுக்கும், மினுக்கும் கைத்தறியில் தான் நெய்யப்படுகின்றன; இந்த எனது யோசனைகளைக் கைத்தறி வார விழாவில் கூறுவது பொருத்தமென்றே கருதுகின்றேன்.

இப்படி உருப்படியான துணி விற்பனைக்கு வழியும் —தொழிலுக்கு நிரந்தரமான பாதுகாப்பும் தர அரசாங்கம் முன்வர வேண்டும்.

அதை விடுத்து, 'கைத்தறியும் வாழ வேண்டும்—ஆலைத் துணியும் போட்டியிடும்' என்றால் எப்படி? புலி போல் இருக்கும் ஆலையும், பசுபோல் இருக்கும் கைத்தறியும் எப்படி ஒன்றாக வாழ முடியும்?

சர்க்கஸ் கம்பெனியில் வேண்டுமானால், புலியையும், பசுவையும் ஒன்றாகச் சிறிது நேரம் வாழச் செய்ய முடியும்; அது போலவே சர்க்காரும், சர்க்கஸ்காரரைப் போல ஆலையையும் கைத்தறியையும் வாழவிட நினைக்கிறார்கள்.

சில நேரங்களில் வரும் செய்தி, புலி, சர்க்கஸ்காரன் கையிலிருக்கும் சாட்டையையும்—சர்க்கஸ்காரரையுமே கூட மீறி பசுவின்மீது பாய்ந்து விடுவதாகக் கூறுகின்றன!

சில நேரங்களில், சர்க்கஸ்காரனுக்குக் கூட புலியால் ஆபத்து என்பதைப் போல, இந்த அரசாங்கமும், இந்தக் கைத்தறிப் பிரச்சினையில் செய்துவரும் சர்க்கஸ் வேலையில் ஆபத்துக்கு ஆளாகக் கூடாது என்று ஆசைப்படுகின்றேன்.

**(23–3–55ல் சென்னையில் நடைபெற்ற கைத்திறி வார விழாவில் அண்ணா)**

# 13. கைத்தறி நெசவாளர்கள் பற்றி அண்ணா

ஒரு காலத்தில் உலகம் பார்த்து வியப்படையக் கூடிய வகையிலே உயர்ந்த முறையில் நெசவு செய்து புகழ் பெற்ற நம் நாட்டு நெசவாளர்களுக்கு ஏன் இன்று இந்த நிலை? அவர்கள் பல நெருக்கடிகளுடனேயே வாழ வேண்டியிருக்கிறது; நெசவாளியும் நெருக்கடியும் ஒன்றாக பிறந்தது போல் என்றைக்கும் ஏதாவது ஒரு நெருக்கடி அவர்களைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது.

ஒரு காலத்தில் நெய்வதற்கு நூல் கிடைக்காது; நூல் கிடைத்தால் மற்ற சாதனங்கள் கிடைக்காது; எல்லாம் கிடைத்து நெய்தால், துணி விலை போகாது; தக்க ஊதியம் கிடைக்காது; இந்த நிலையைத்தான் கடந்த பல ஆண்டுகளாக நாம் கண்டு வந்திருக்கிறோம்; இதற்கு ஒரு பரிகாரம் கண்டாகவேண்டும்.

"நோயுற்றிருக்கும் ஓர் ஆள், 'இனிப் பிழைக்கவே முடியாது' என்றால், அவனை அழைத்துச் செல்ல வேண்டிய இடம் — வைத்தியன் வேறு; பிழைப்பான் என்றால் அழைத்துச் செல்ல வேண்டிய இடமும் — வைத்தியனும் வேறு; பிழைக்கவே கூடாது என்றால் அதற்கான இடம் வேறு; அதைப் போல் கைத்தறிப் பிரச்சினையிலும் ஒரு முடிவை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்."

ஆண்டுக்குப் பத்துக் கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை இந்தியாவுக்குத் தேடிக் கொடுத்துக் கொண்டு — இந்த விஞ்ஞான யுகத்தையும் சமாளித்துக் கொண்டு ஆலைகளுடன் போட்டியிடக் கூடிய ஒரு தொழிலாக இருக்கிறது இது!

நான் ஏதோ கனவு காண்பதாக நினைக்க வேண்டாம்; உண்மையிலேயே இந்த நாட்டை —

தென்னகத்தை நாமே ஆளும் நிலை வருமானால், அமெரிக்காவுக்கு மேஜை விரிப்புத் துணி மட்டும் இங்கிருந்து கைத்தறித் துணியாக அனுப்பி — அதன் மூலம் ரூபாய் 50 கோடி அந்நியச் செலாவணியை நாம் பெற முடியும், உலகம் பார்த்து மெச்சக் கூடிய—பாராட்டக்கூடிய நிலையில் முன்பிருந்த நிலையை நாம் மீண்டும் பெற முடியும்.

இந்தக் கைத்தறித் தொழிலுடன் எனக்குள்ள தொடர்பும் அக்கறையும், நான் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள இந்த நேரத்தில் மட்டுமன்று—அதற்கு முன்பிருந்தே இருந்து வருகிறது; இதற்குக் காரணம், நான் பிறந்து—வளர்ந்து—வாழ்ந்து வருகின்ற காஞ்சிபுரம், நெசவாளர்கள் நிறைந்துள்ள பகுதியாகும்.

காஞ்சிபுரம் என்பது—நெசவாளர்கள் நிரம்பிய பேட்டைகளும், பாளையங்களும், வீதிகளும் நிறைந்துள்ள தாகும். நெசவுத் தொழிலை நம்பியுள்ள மக்கள் நிறைந்த பகுதியில் வாழ்கின்ற காரணத்தால், பல ஆண்டுகளாக அவர்களது சிரமங்களை நேரடியாக உணர்ந்துள்ள நான், இந்தத் தொழிலின் மீது அக்கறை காட்டுவது இயற்கையே!

நெசவாளர்களின் துன்பம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கின்றது; அதற்குரிய பரிகாரங்கள் கிடைக்க வில்லை என்று கூறப்பட்டது.

நூல் எப்போதும் சிக்கலுக்கு ஆளாவதுதான்; நூலுடன் தொடர்பு கொண்டுள்ள நெசவாளர்களின் வாழ்க்கையும் சிக்கல் கொண்டதாகத்தான் இருக்கும்; பக்குவமாக அந்தச் சிக்கலை நீக்குவது தான், இப்போது நாம் செய்ய வேண்டிய வேலை!

இந்தச் சங்கத்தை நடத்துபவர்கள், எந்த அளவு முயற்சி எடுத்துக் கொண்டு இந்தச் சிக்கலைப் பக்குவமாக நீக்க வேண்டுமோ—அந்த அளவு முயற்சி எடுத்துக் கொண்டு செயல்பட வேண்டியவர்களாக இருக் கின்றார்கள்!

*மற்ற ஆலைத் தொழிலுக்குக் கிடைக்கும் வாய்ப்பும்—வசதியும்—விஞ்ஞானக் கருவிகளின் துணையும்—பொறிகளின் உதவியும் கிடைக்காத நிலையிலும், நேர்த்தியாக—நீடித்து உழைக்கக்கூடிய—நல்ல தரமுள்ள—மெச்சத்தக்க—வியக்கத்தக்க வகையில் நமது கைத்தறியாளர்கள் துணிகளைத் தயாரிக்கின்றனர்!*

*ஆலைகளில் பொறிகளின் துணைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் சரக்கைவிடக் கண்ணைக் கவரத்தக்க வகையில் புதுப்புது ரகங்களை கைத்தறியில் உற்பத்தி செய்கின்றனர்!*

*ஆலைகளில்தான் இப்படிப்பட்ட துணிகளை உற்பத்தி செய்ய முடியும்' என்ற நம்பிக்கை இருந்து வந்த காலம் ஒன்றிருந்தது; ஆனால், இன்று ஆலைகளையும் மிஞ்சத் தக்க வகையில்—விதவிதமான வேலைப்பாடுகளுடன் வேகமாகவும் தயாரிக்க முடியும் என்பதை, நமது நெசவாளர்கள் மெய்ப்பித்து வருகின்றனர்!*

*இருந்தும், அவர்களது வாழ்வில் முன்னேற்றமில்லை; எதிர்காலத்தில் நம்பிக்கை ஏற்படக் கூடியதாக இல்லை! என்றாலும் பல்லாண்டுகளாக இருந்து வரும் கலைத் திறனை—உலக மக்கள் பாராட்டி வரவேற்கும் அளவுக்கு வளர்ந்துள்ள வெளிநாட்டுச் சந்தையிலிருந்து, ஏராளமான, பணத்தை ஈட்டித் தரும் ஒரு நேர்த்தியான கலைத் திறனை—அப்படியே அடியோடு அழிந்து போகும்படி விடுவது விரும்பத் தக்கதன்று!*

*வெள்ளை வேட்டியாகட்டும்—வண்ணச் சேலையாகட்டும்—எதைப்பார்த்தாலும் கண்ணைக் கவரக் கூடியதாக—கருத்தை ஈர்க்கக்கூடியதாக இருக்குமே அல்லாது, 'நம்முடைய அனுதாபத்திற்குப் பாத்திரமாக வேண்டும்' என்ற பரிதாபத்திற்குரிய நிலையில் எதுவும் இருக்காது!*

*எந்தச் சரக்கைப் பார்த்தாலும், 'அதை வாங்கலாமா' என்று தோன்றுமே தவிர, அந்தச் சரக்கின் நேர்த்தியைப்*

பற்றி—நீடித்து உழைக்கும் தரத்தைப் பற்றி அய்யப்பாடோ, 'நெசவாளியின் நேர்மை—நாணயம் பற்றி ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும்' என்றோ யாருக்கும் தோன்றாது.

அப்படிப்பட்ட நெசவாளர் குடும்பங்கள் பல இன்று ஏழ்மையிலே உழலுகின்றது! அவர்களிடம் உள்ள தொழில் திறனை வேறு எதிலும் காண முடியாது! இருந்தும் இலட்சக்கணக்கான கெசமுள்ள கைத்தறித் துணி தேங்கிக் கிடக்கிறது நாட்டில்!

கைத்தறியாளர்கள்—புதுப்புது 'மோஸ்தர்'களைக் கண்டு பிடிக்கிறார்கள்! ஆலைக்காரர்கள் கூட அப்படிக் கண்டு பிடிக்க முடியாது.!

நெச்வாளி—தான் மட்டுமா வேலை செய்கிறான்? அவனுடைய மனைவியும், மகனும் கூட அல்லவா வேலை செய்கிறார்கள்? இருந்தும் வாழ்க்கைக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கவில்லை! மாலை 6 மணிக்கே எங்கள் ஊர்ப் பிள்ளையார்ப் பாளையத்தில் விளக்கை அணைத்துத் தூங்கி விடுகிறார்கள்— 'இரவு பத்து மணி வரை விழித்தால் விளக்கு எண்ணெய் செலவாகுமே என்று! அப்படிப்பட்ட கேவலமான நிலையில் வாழ்க்கை நடத்துகிறார்கள்! அவர்களுடைய வாழ்க்கையில் நிம்மதி இல்லை! அவர்கள் வாழ்வு வளம் பெற வழிவகைகள் செய்யப்பட வேண்டும் என்பதே நம் குறிக்கோள்!

**(1967—ல் அண்ணா அவர்களின் உரை)**

## 14. கைத்தறி

"கைத்தறித் தொழிலுக்கு உதவும் வகையில் — கூட்டங்களில், 'மாலைகளுக்குப் பதிலாகக் கைத்தறி ஆடைகளை அணிவியுங்கள்' என்று திராவிட முன்னேற்றக் கழகம் சொன்னபொழுது பலர் கேலி பேசினர்; ஆனால், இன்றையத்தினம், எல்லா அரசியல் கட்சிகளைச்

சேர்ந்தவர்களும், கைத்தறித் துண்டை, மாலைகளுக்குப் பதிலாக அணிவிக்கிறார்கள்.

“இப்படிக் கூட்டங்களில் மாலைகளுக்குப் பதிலாகக் கைத்தறித் துண்டுகளை அணிவிப்பதால், கைத்தறி நெசவாளர் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்துவிடும் என்பது அல்ல — கைத்தறித் துணிகள் அணியப்படுவதைப் பார்க்கும்போதெல்லாம், “கைத்தறித் துணிகளுக்கு நாமும் ஆதரவு காட்டிட வேண்டும் என்ற உணர்வை மக்களிடம் பரப்பும்” என்பதால்தான்!

“டெல்லியில் ஒரு பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டேன்; அக்கூட்டத்தில் எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன; எனக்கு மட்டும் கைத்தறித் துணி அணிவிக்கப்பட்டது; ‘ஏன் அவருக்குக் கைத்தறித் துணி அணிவித்தீர்கள்’ என்று சிலர் கேட்டபோது, ‘அண்ணாதுரைக்குக் கைத்தறித் துண்டுதான் பிடிக்கும்’ என்று பதில் சொன்னார்கள்.

“இதிலிருந்து, ‘தி. மு. கழகம் எதற்கு ஆதரவு காட்டுகிறது’ என்று உங்களுக்குத் தெரியும்!”

**—சென்னை கைத்தறிப் பொருட்காட்சியில் அறிஞர் அண்ணா.**

## 15. தொழிலாளிக்கு ஒரு சொல்!

எனது ஆசை எப்போது நிறைவேறுமென்றால் உழுபவன் உண்மையான வாழ்வு வாழ்கிறான்; நெசவாளி நேர்த்தியாக வாழ்கிறான்; பாட்டாளி பட்டினியின்றி வேலை செய்கிறான் என்ற நிலை எப்பொழுது ஏற்படுகிறதோ அப்பொழுதுதான்.

தொழிலாளிகளின் உரிமைகளையும், நலன்களையும் எவ்வளவுக் கெவ்வளவு பாதுகாக்கின்றோமோ அந்த அளவிற்குத் தொழில்வளம் பெருகும்.

தொழிலாளி மிச்சப்படுத்தும் பணத்திலிருந்து புதிய தொழிலுக்கு முதலீடு கிடைக்கும் நிலை ஏற்பட வேண்டும்.

தொழிலாளர்கள் ஸ்தாபனம் சில அடிப்படைக் கொள்கைகளின் மீது கட்டப்பட்டிருக்கிறது என்றால் தொழிலாளிகளின் சில குறைபாடுகளை நீக்கிக் கொள்வதற்குத்தான்.

தொழில் வளர்ந்தால்தான் பொதுச் செல்வம் ஏற்படும்; அதன் வாயிலாகத் தனிப்பட்ட மனிதன் வாழ்விலும் வளமுண்டாகும்.

தொழிலாளர் வாழ்வு பாழ் நிலமாக அல்லாமல் பசுமையோடு பூங்காற்று வீசும் தோட்டமாக இருக்க வேண்டும்.

இராணுவத் துறையிலும், அரசியல் துறையிலும் வளர்ந்துள்ள இதர நாடுகளின் வரிசையில் நாம் இல்லாதிருக்கலாம்; ஆனால், தொழில்களுக்குத் தேவையான அறிவிலோ, ஆற்றலிலோ நாம் யாருக்கும் சளைத்தவர்கள் அல்லர்.

தனது உழைப்பினை மனமுவந்து ஈந்திட பலப்பல ஆயிரவர் முன் வந்திடின், சமூகம் பெற்றிடக்கூடிய பயன் பெருமை பெறத் தக்கதாக அமையும். 'எனக்காகவும், என் குடும்பத்துக்காகவும் செலவிட்டது போக, மிஞ்சியதில் ஒருமணி நேரமாகிலும் நாட்டின் பொது நன்மைக்காகச் செலவிடுவேன்' என்ற உறுதி கொண்ட சில ஆயிரவர் தமது உழைப்புச் செல்வத்தைத் தந்திடின், சமூக மேம்பாடு வளருவது உறுதி!

தொழிற்சாலைகளில் உழைக்கும் தொழிலாளர்கள் மன நிம்மதியுடன் வாழ்ந்தால் தான் தொழிலதிபர்கள் வாழ முடியும்—தொழிலிலும் லாபம் வரும்.

தொழிற்சாலையிலுள்ள ஓர் இயந்திரத்தின் சிறிய பல் சக்கரத்தையும் எவ்வளவு முக்கியமாகக் கருதுகிறீர்களோ அதைவிட எந்தத் தொழிலாளியும் முக்கியத்துவம் குறைந்தவரல்லர்.

*தொழிலாளர்கள் நல்ல பலம் பெற்றால், தாங்கள் ஈடுபட்டுள்ள பணிகளில் மேலும் அவர்கள் தெம்புடன் உழைப்பார்கள்; மனமும், உடலும் மகிழ்ச்சியாக இருந்தால் தான், உற்பத்தியின் அளவு அதிகரிக்கும், செல்வம் வளரும்.*

*தொழிலாளர் நலனுக்காக எவ்வளவு செலவிட்டா லும், அது சமூகத்துக்கு ஒன்றுக்கு ஒன்பதாகத் திரும்பி வரும்! அவர்களுக்குச் செலவிடப்படும் தொகை ஒரு நாளும் நட்டக் கணக்கில் வருவதில்லை.*

*திராவிட முன்னேற்றக் கழகம், கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு என்ற மூன்று கோட்பாடுகளை வைத்திருப்பது போலவே தொழிலாளர்களுக்கும் அது தேவை என்று சொல்கின்றார்கள்; உண்மையாகவே, 'தொழிலாளர்களுக் கும் அது தேவை' என்று உணர்ந்திருப்பதை நான் பெரிதும் வரவேற்கிறேன்.*

### கடமை

*பாட்டாளிகளுடைய கடமை—ச்முதாயத்திற்கு நன்மை செய்வதிலேதான் இருக்கிறது!*

### கண்ணியம்

*அவர்களுடைய கண்ணியம்—தங்களுடைய சக்தியைப் பாழ்படுத்திக் கொள்ளாததிலே தான் இருக்கிறது!*

### கட்டுப்பாடு

*அவர்களுடைய கட்டுப்பாடு—தங்களுடைய ஒற்றுமையை உடைப்பதற்கு யார் எந்த மாதிரி முயற்சி எடுத்துக் கொண்டாலும் ஒரு துளியும் இடம் கொடுக்காத தன்மையிலே இருக்கிறது!*

**(அறிஞர் அண்ணா – கட்டுரை ஒன்றில்)**

# 16. விவசாயி

உழைப்பவர்களுக்கு முழு உரிமை கொடுத்தால்தான் உழைப்பெல்லாம் செல்வக்குவியலாக மாறும். உழைத்தவர்கள் தாம் நாம்; மேலும் உழைக்க ஆரம்பித்தால் எந்த நாடும் நமக்கு ஈடாகாது.

உழவனின் உள்ளத்திலே புயல் இருக்குமானால் வயலிலே வளம் காணமுடியாது.

விவசாயிக்குத் திருப்தி ஏற்பட்டாலொழிய, அவர்கள் வாழ்வில் நிம்மதி ஏற்பட்டாலொழிய, அவர்களின் உழைப்பு வயிற்றுப் பாட்டுக்கு வழி செய்தாலொழிய முன்னேற்றம் அடைந்ததாகக் கூறிவிட முடியாது.

உழைப்புக்கு மதிப்பளித்து வந்தால்தான் உற்பத்திப் பெருகும்.

அடுத்த பத்தாண்டு காலத்திற்குள் நில உடைமைக் காரர்களுக்கும்—நிலத்தை உழுபவர்களுக்கு மிடையேயுள்ள வேற்றுமை மறைந்துவிடும். வயல்களில் பட்டதாரி விவசாயிகள், டிராக்டர்களை ஓட்டுவதைக் காணப் போகிறோம்.

விளைச்சல் நிலங்களைத் தரிசாகப் போடுவது சமூகக் குற்றம்.

பாடுபடுகிற உழவர்களுக்கு நிலம் சொந்தமானால் அவர்கள் நிமிர்ந்து நடப்பார்கள். அவர்களுடைய நெஞ்சத்தில் மகிழ்ச்சி ஏற்படும். எனவே பண்படுத்திய பின் ஒப்படைக்கும் இத்திட்டத்தை வகுத்து செயலாற்றவிருக்கிறோம்.

படித்தவன் உழவேண்டும்—உழுபவன் படிக்க வேண்டும். படிப்பவன் அறிவுப் பசியைத் தீர்க்க—உழுபவன் உற்பத்தியைப் பெருக்க—என்ற நிலை ஏற்பட வேண்டும்.

புதிய முறைகளையும், கருவிகளையும் கொண்டு இயற்கை வளத்தைப் பயன்படுத்துவதிலே மற்ற

நாடுகளைவிட நாம் மிகப் பின்னணியில் இருப்பதால் இங்கு சுவையற்ற, கவைக்குதவாத வாழ்க்கையை நடத்துவதற்கே மிகப் பெரும்பாலான மக்கள் மாடுடன் உழைக்கிறார்கள். மனித உழைப்பு மிக மிக அதிகமான அளவிலேயே செலவிடப்படுகிறது. மனிதன் பிணமாகா திருக்க, நல்வாழ்வுபெற அல்ல—சாகாமலிருக்க!

விளை நிலத்தைத் தரிசாகப் போட்டால் நிலத்தைவிட்டு வெளியேற்றப்பட்ட தொழிலாளர்களுக்கு உதவி தந்து அதிக விளைச்சலை உண்டாக்குவோம்.

## 17. தொழிலாளி–கரை காணாதவன்

காடு நிலமானதும், வனம் தோட்டமானதும், மேடு மாளிகையானதும், கரம்பு ஊற்றானதும், பள்ளம் பாதையானதும், பாட்டாளியின் உழைப்பினால்; ஆனால் அவன்-அந்த உழைப்பிற்குப் பிறகு-அதனாலான உல்லாசங்களை அனுபவிக்கின்றானா என்றால் இல்லை!

தோட்டத் தொழிலாளியின் வியர்வை வாடை அவனது உழைப்பால் மலர்ந்த மலரில் இராது! அவனது வாழ்க்கையோ-கசப்பு! அவன் பயிரிட்டுப் பிறருக்குத் தரும் கனியோ-சுவையுள்ளது!

பூமிக்கு அடியில் இருந்து அவன் செல்வத்தைச் செதுக்கி எடுத்துத் தருகின்றான்; பிறகோ, அதன்மீது பணம் படைத்த பிரதாபன் உலவுவதைக் காண அண்ணாந்து பார்த்துவிட்டு தனது குடிசையில் கூரையின் ஒழுகலைக்கண்டு மனம் கசிகிறான்!

கடலில் குளித்து, சுறாவும்-பிறவுக்கும், இரையாகாது தப்பி முத்து எடுக்கிறான். பின்னர் அது, யாருடைய கழுத்திலோ மாலையாகிறது-கைவளையாகிறது, காதுகளில் நடனமாடுகிறது! ஆனால் அந்த முத்தை எடுத்த தொழிலாளியோ-வறுமைக் கடலில் நீந்தி நீந்தி கரை

காணாது கலங்குகிறான். உழைப்பின் உறுபயனை அனுபவிக்க முடியாமல் அல்லற்படுகிறான்.

## ஆளவந்தாரே—தயக்கமேன்!

புதிதாக பீடம் ஏறியுள்ளவர்களுக்கு, தங்கள் நாட்களிலே, "மக்களுக்குப் புதிய வாழ்வு பிறக்க வேண்டும்-பஞ்சமற்ற பிணியற்ற, அதிருப்தியற்ற வாழ்வு இருக்க வேண்டும்" என்ற எண்ணம் இருக்கிறதாம்-நெடு நாட்களாக ஆயிரமாயிரம் மேடைகளிலே பேசியிருக்கிறார்கள்-வாக்களித்திருக்கிறார்கள்-சூளுரைத்திருக்கிறார்கள்! ஆனால் மக்களோ, என்றுமில்லாத அளவுக்கு-எங்குமில்லாத அளவுக்குச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்! எவ்வளவு பெரிய கதர் சால்வைகொண்டு மூடினாலும் நிலைமை மறையவில்லை. எங்கும் 'இல்லை, இல்லை' என்ற பேச்சுத்தான்-என்ன செய்ய!

மக்கள் கேட்கிறார்கள்-"ஏன் மனச் சோர்வு கொள்கிறீர்கள்? எம்மை ஈடேற்றும் வழி தெரியாது ஏன் திகைக்கிறீர்கள்? நீங்களே கூறி யிருக்கிறீர்களே-'தொழில்களை லாப வேட்டைக்காடு ஆக்கியதனால்தான், நாட்டிலே மிருக உள்ளம் படைத்த மனிதர்கள் தோன்றி விட்டனர்; இனி மக்களுக்குத்தான் தொழில்கள்-இலாபத்துக்காக அல்ல-மக்களின் நன்மைக்காக' என்றெல்லாம் கூறினீர்களே! திட்டம் தீட்டிக் காட்டினீர்களே! பொது மக்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தொழில்களை எல்லாம் சர்க்காரே ஏற்று நடத்தும் என்று சூளுரைத்தீர்களே! நன்றாக கவனமிருக்கிறதே-வெண்கல நாதத்தில், 'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்' என்று நீங்கள் பாடிய பாரதி கீதம்! ஆற்றல் மிக்கோரே-எமது அன்புக்குரியவர்களே-எம்மை ஆளவந்தாரே-ஏன் தயக்கம், தடுமாற்றம்? திட்டத்தை நிறைவேற்றுங்கள்-தொழில்களை பொதுவாக்குங்கள்-சர்க்கார் உடைமையாக்குங்கள்-ஜாரைக்

கருவிலேயே அழியுங்கள்" என்று கூறுகின்றனர், மக்களின் குரலில் வேதனையும் ஆத்திரமும் சம எடையில் இருக்கிறது.

மகாஜனங்களே! கொஞ்சம் பொறுமை காட்டுங்கள்; தொழில்களைத் தேசிய மயமாக்கும் திட்டத்தை நாங்கள் விட்டுவிடப் போவதில்லை; இடையிலே உற்பத்தியைப் பெருக்குங்கள்; ஓய்ந்துவிடாதீர்கள்; காய்ந்து கிடக்கும் வயல்களையும் பசுமையுறச் செய்யுங்கள்; தூங்கிக் கிடக்கும் புதை பொருட்களை எழுப்பி வெளியே கொண்டு வாருங்கள்; கட்டுக்கடங்கா ஆறுகளை, ஆற்றல் தரும் வழிகளாக்குங்கள்; உற்பத்தியைப் 'பெருக்குங்கள்' பெருக்குங்கள்' என்று சர்க்கார் கூறுகிறது!

பாட்டாளி சிரித்துக் கொண்டே அழுகிறான், சொல்லாமல் சொல்லிக் கொள்கிறான்—

"நான் வ்யிறார உண்ண உணவில்லை-என்று கூறி எனக்கு வாழ்வு அளிக்கச் சொல்லுகிறேன். நீயாகவே, முன்பு வாக்களித்தாயே என்பதால்; நீ, இப்போது என்னை, 'காய்ந்த வயிற்றைப் பிறகு பார்த்துக் கொள்; உற்பத்தியைப் பெருக்கு என்று கூறுகிறாயே, அப்பனே! ஆளவந்தானே! உற்பத்தி என்றால் என்ன உத்தியோக உத்தரவு போலவா, எழுதிவிட? உயிரைப் பணயம் வைத்து-உழைத்து-உருக் குலைந்து அல்லவா உற்பத்தியைப் பெருக்க வேண்டும்? அணுவணுவாக எங்களை உழைப்புச் சிதைக்கிறது? மாடி மாடியாக முதலாளி கோட்டை உயருகிறது! நீ மேலும் உழைக்கச் சொல்லுகிறாய்! செய்யலாம் என்றால் சக்தி இல்லையே! உழைத்து அலுத்துக் கிடக்கும் எங்களிடம் அதிகரித்த உழைப்பை எதிர்பார்க்கிறாயே! குமுறும் நெஞ்சினராகிவிட்ட எங்களை, 'குப்புற விழாதே குப்பா... எழுந்திரு-வேலை செய்' என்று கட்டளை இடுகிறாயே- எப்படி எங்களால் முடியும்? சக்தி

*வேண்டுமே உழைக்க! சாந்தி வேண்டுமே மனதில்!*
*அதற்கு என்ன வழி"*

*என்று பாட்டாளிகள் கேட்கின்றனர்-இவ்வளவு தெளிவாக அல்ல-கண்ணீராலும், பெருமூச்சாலும்!*

**"கண்ணீர் விடுகிறான்.........**
**கருணை காட்டாதே"**

*என்று சர்க்காருக்குக் கூறுகிறது முதலாளித்துவம்! அதற்கு அஞ்சியே டெல்லி ஆட்சியினர் தேசிய மயமாக்கியுள்ள இரண்டொரு தொழில் நிலையங்களை மீண்டும் முதலாளித்துவத்தின் கூட்டு முகாமில் ஒப்படைக்க விரைந்தோடுகிறது; நம் சென்னை அரசியலாரும் அதனைத் தொடர்ந்து திருப்பல்லவியைப் பாடுகின்றனர். தமிழ் நாட்டின் சில மாவட்டங்களிலுள்ள பஸ்களை சர்க்காரே நடத்தும் திட்டம் கைவிடப்பட்டதாம்! தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிக்கு மாறாக இன்று நம்பிக்கைத் துரோகம் செய்யப்படுகின்றது.*

*நாடாளுவோரின் இந்தப் போக்கு இந்தப் புத்தாண்டிலாவது மாறுமா?*

**("திராவிடன்" பொங்கல் மலரில்; 1967–க்கு முன் எழுதியது)**

# 18. முதலாளித்துவத்தின் முதுகெலும்பு முறிய...

*முதலாளிக்குக் கிடைக்கும் இலாபம் அவர்கள் மேனி மினுக்குக்குப் பயன்படுத்தும் அளவுக்கு இருக்கக் கூடாது!*

*காப்பாற்றுவதற்குப் போதுமானதைத் தவிர, மீதிப் பணத்தை வரிபோட்டு அரசாங்கம் வாங்கிக் கொள்ள வேண்டும்!*

*அப்படிச் செய்தால், முதலாளிகள் பெருகமாட்டார்கள்- அவர்களிடம் பொருளும் குவியாது; வரிபோட்டு அவர்களிடம் இருந்து வாங்கும் பணத்தில் மக்களுக்கு*

நல்லது செய்யலாம்; இதனால் முதலாளித்துவம் ஒழிந்து விடும்-ஓங்கி வளராது!

முதலாளித்துவத்தைக் குழி தோண்டிப் புதைக்க இன்னொன்றும் செய்யலாம்; தனிப்பட்ட எவரும் எந்தத் தொழிற்சாலையையும் நடத்த அனுமதிக்கக் கூடாது; முதலாளிகளிடம் இருக்கும் எல்லா ஆலைகளையும் அரசாங்கம் கைப்பற்றிக் கொள்ள வேண்டும்; எல்லாத் தொழிற்சாலைகளையும் சர்க்கார் ஏற்று நடத்த வேண்டும் அவ்விதம் செய்தால், அதில் கிடைக்கும் இலாபம் அரசாங்கத்தைச் சாரும் - எந்தத் தனிப்பட்ட முதலாளிகளையும் சாராது; அதனால் முதலாளித்துவம் வளராது-பூண்டே இல்லாமல் ஒழிந்து விடும்! அப்படித்தான் இன்றைய உலகில் பலர் செய்து வருகிறார்கள்!

முதலாளித்துவத்தின் முதுகெலும்பை முறிக்க அவ்வப்போது அதைத் தடுக்க வேண்டும். அளவுக்கு மீறி வளர இடம் தராமல் தலைமேல் தட்டிச் சரிபடுத்திக் கொண்டே வர வேண்டும்!

## 19. தொழிலதிபர்கள் பற்றி அண்ணா

திருவொற்றியூர் இம்பீரியல் டுபாக்கோ கம்பெனி தொழிலாளர்களின் குடியிருப்புகளை, 14-4-67 அன்று, அண்ணா அவர்கள் திறந்து வைத்து ஆற்றிய உரையின் ஒரு பகுதி.

"......... இங்கு 50க்கும் மேலான அழகான இல்லங்களைத் தொழிலாளர்கட்குத் திறந்து வைக்கும் வாய்ப்பினை எனக்கு நல்கியமைக்காக நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிலாளர் நலன் கருதியே இதுபோன்ற காலனிகளை அமைத்துத் தருகின்றார்கள்-தொழிலதிபர்கள்!

தருகின்ற உள்ளங்கள்தான் மீண்டும் மீண்டும் தந்து கொண்டே இருக்கும்; அதனால்தான் இப்படிப்பட்ட வசதி களைச் செய்துள்ள இந்த நிறுவனத்தின் நிர்வாக உரிமை யாளரையே மீண்டும் மீண்டும்-தொழிலாளர்களது வேண்டு கோளான திருமண மண்டபத்திற்கான செலவையும் ஏற்று-அதனை முடித்துத் தரும்படிக் கேட்டுக் கொண்டுள்ளனர். தொழிலாளர் நலனில் இத்துணை அக்கறை காட்டுபவர் நிச்சயம் அதையும் முடித்துத் தருவார் என்று நம்புகிறேன்.

இந்தக் காலனிக்கு அரசின் உதவி எந்த அளவுக்குக் கிட்டும் என்பதை, அதிகாரிகளைக் கலந்து கூறுகிறேன்.

"அரசு உதவும்" என்று சொன்னேன்; மத்திய அரசு எந்த அளவிற்கு நம் மாநில அரசுக்கு உதவ முன்வருகிறது என்பதைப் பொருத்துத்தான் சொல்ல முடியும்.

எனவே இந்தத் தொழிற்சாலை அதிபர் மித்ரா அவர் களுடனும், தொழிற்சங்கத் தலைவர் டி.எஸ். இராமானுசம் அவர்களுடனும் கலந்து, 'யார் யாரிடம் எவ்வளவு பெறமுடியும்' என்பதைத் தெரிந்து வைத்துக் கொண்டு-கட்டடக்கலை நிபுணரை அழைத்துக் கலந்து பேசி, எவ்வளவு மலிவாக, இந்தக் கட்டடங்களை நேர்த்தி யாகவும், உறுதியாகவும் கட்டித்தர முடியும் என்பதையும் தெரிந்துகொண்டு-பிறகு தமிழக அரசின் உதவியை நாடினால், நிச்சயம் இன்றைய தமிழக அரசு தொழிலாளர் களின் குடியிருப்புக்கு நிதியுதவிட- ஒத்துழைத்திட பின்வாங்காது என்று உறுதி கூறுகின்றேன்.

இப்படிப்பட்ட குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதால், தொழிலாளர்களுக்குச் சுறுசுறுப்பும்- உற் சாகமும்-ஊக்கமும் தொழிலின்பால் உண்டாகிறது; அதனால் ஏற்படும் உற்பத்திப் பெருக்கத்தினால், முதலாளி உள்பட தொழிலாளர்களும் மேலும் நன்மைபெற வழி ஏற்படுகிறது.

ஒரு முதலாளி ரூ. 2 லட்சம் கொடுத்து வாங்கிய இயந்திரம் திடீரென்று கெட்டுவிட்டதாகக் கூறினாலும்,

அல்லது உள்ளபடியே பல்சக்கரத்தில் உள்ள ஒருபல் உடைபட்டு ஒரு விதமான சத்தம் வருவதைக் கண்டாலும், எப்படிப் பதை பதைத்துப்போய்-நடுநடுங்கிப்போய், அந்த இயந்திரத்தை உடனே சரிசெய்வாரோ-அதே போன்று தொழிலாளர்களில் யாராவது ஒருவர் எப்போதாவது சோர்வுற்றிருந்தாலோ-கவலை கொண்டிருந்தாலோ-நோய்வாய்ப் பட்டிருந்தாலோ-வாழ்க்கைத்தரம் குறைந்து கொடுமைக்கு ஆளாகியிருந்தாலோ-முதலாளிகளாக இருப்பவர்கள், உடனே அத்தொழிலாளியின் குறையைப் போக்கிட முன் வருதல் வேண்டும்-துயர் களைதல் வேண்டும்.

அதே போன்று, தொழிலாளர்களும் நன்கு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

இந்த நேச மனப்பான்மை இருவரிடையேயும் வளர வேண்டும்; அப்போதுதான் நாடு நலம் பெறும்; நாட்டு மக்களும் நலம் பெறுவார்கள்.

ஒவ்வொரு நிறுவனத்தின் முதலாளியும், தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றப் பாடுபட வேண்டும்!

இம்பீரியல் டுபாக்கோ கம்பெனியில் திறமைசாலிகளைத் தொழிலாளர்களாக வைத்துக் கொண்டுள்ளனர்; அவர்களது உழைப்பை மதிக்கின்ற வகையில் வீடுகட்டித் தந்துள்ளார்கள்; இது போன்ற குடியிருப்பு அமைத்துத் தந்து ஒவ்வொரு முதலாளியும் வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

## 20. சுதந்திரத்தின் காவலர்கள் யார், யார்?

கொடி ஏற்றுபவர்-கோலாகல விழா நடத்துபவர்-விடுதலை வீரர்களைக் கொண்டாடுபவர்-இவர்கள் மட்டும் போதுமா அந்த இலட்சியம் நிறைவேற?

உச்சிப் பொது வந்தது கண்டும், சளைக்காமல் உழுது கொண்டிருக்கும் உழவன்-அவனும்......

பல தொழில்களிலே ஈடுபட்டுப் பொருள்களை உற்பத்தி செய்கின்றானே. பாட்டாளி-அவனும்.....

சிறார்க்கும் சிறுமியர்க்கும் அறிவுக் கண்களைத் திறந்து வைத்திடும் ஆசிரியர்கள் உள்ளனரே அவர்களும்....

நலிவு நீங்கிடத் தொண்டாற்றுகின்றனரே மருத்துவத் துறையினர்-அவர்களும்

காட்டு வெள்ளத்தை அடக்கி, நீர் வளம் கொண்டு, நிலவளம் பெருக்கி, ஊர் அமைத்துத் தருகின்றனரே, பொறியியல் துறையினர்-அவர்களும்....

நாட்டு நிர்வாகத்திற்கான பல்வேறு துறைகளிலே பணியாற்றுகின்றனரே அலுவலர்கள்-அவர்களும்.... இவர்களின் திறமையிலும், செயலார்வத்திலும், வெற்றியிலும் தான் இருக்கிறது-சுதந்திரத்தின் சோபிதம்-விடுதலையின் விளைவு.

இவர்கள்தான் சுதந்திரத்தின் காவலர்கள்! அவர்களுக்கு என் வணக்கம்!

**(சுதந்திர தினவிழா வானொலிச் சிறப்புரையில்)**

# 21. பணிகள் ஆற்றவே பதவி

தொழில்கள் எப்படி வளம் பெறும் என்பது, நாட்டிலே அமுலாக இருக்கும் அய்ந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தது; ஆனால் அய்ந்தாண்டுத் திட்டம் எப்படி அமையுமென்பது மத்திய அரசிடம் இருக்கின்றது.

மத்திய அரசிடம் போராடி-வாதாடித்தான் திட்டங்களைப் பெற வேண்டுமானால், நாங்கள் அதற்குத் தயாராய் இருக்கிறோம்!

புதியவர்கள் என்பதற்காக மட்டுமல்ல-பிரச்சினைகளும் பழையது! பழைய பிரச்சினைகளுக்குப் புதியவர்கள் தீர்வு காண்பதென்பது சாதாரணமானதல்ல!

என்னால் முடியாவிட்டால் 'முடியவில்லை' என்று சொல்லிவிட்டு ஒதுங்கிக் கொள்வதற்கு நான் தயங்க மாட்டேன்! காரியம் ஆற்றுவதற்காகத்தான் பதவியே தவிர, பதவிக்காகக் காரியம் என்பது கிடையாது!

பதவிப் பொறுப்புகளில் இருப்பதைவிட, உங்கள் இதயங்களில் இருப்பதைத்தான் . பெருமையாக நினைப்பவன் நான் என்பதனை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்!

நீந்தத் தெரியாதவர்கள் கயிற்றின் உதவியுடன் நீரில் இறங்குவதைப் பார்த்திருப்பீர்கள்; புதியவர்களாகிய நாங்கள் நீரில் இறங்கியுள்ளோம்; எங்களுக்கு உதவியாகப் "பதவி" என்கிற கயிறு உங்கள் கரங்களில்தான் இருக்கிறது, நீங்களாகப் பார்த்துத்தான், எங்களை நீரில் இறக்கியிருக்கிறீர்கள்; நாங்கள் நீந்தக் கற்றுக் கொள்ளும் வரையில், கயிறு உங்கள் கைகளில்தான் இருக்கும்; எனவே அதைப் பாதுகாப்பாகப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பும் உங்களுடையதுதான்!

"நீந்தக் கற்றுக் கொண்டு விட்டீர்கள்" என்று நீங்களாகப் பார்த்துக் கயிற்றை அவிழ்த்து விடுகின்ற வரையில், அது உங்கள் பாதுகாப்பில்தான் இருக்க வேண்டும்!

நீங்களெல்லாம் ஒருவகை அமைப்புகளின் கீழ்க் கொண்டு வரப்பட்டிருக்கும் தொழிலாளர்கள்; ஆனால் உங்களை விட மிகப் பெரும்பான்மையானவர்கள் முறையான அமைப்பின் கீழ்க் கொண்டு வரப்படாமல்-உரிமை உணர்வுகள் அற்றுப்போய்-அரசியல் சூதாட்டத்துக்கு ஆளாகி, வாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதனை நாம் மறந்துவிடக் கூடாது!

தொழிலாளர்கள் வாழ்ந்தால்தான், நாட்டில் செல்வம் வளர்ந்தால்தான், நீங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்குச் சந்தை கிடைக்கும்!

நீங்கள் ஒரு டைப்ரைட்டரைச் செய்கிறீர்கள் என்றால், அதை வாங்கும் நிலையில் மக்கள் இருக்க வேண்டும்; அடி மட்டத்தில் இருப்பவர்கள் மிச்சப்படுத்தும் நிலையில் இல்லையென்றால், உங்கள் உற்பத்திக்கு வழி இல்லாமல் போய்விடும்!

உரிமைகளுக்காக-வசதிகளுக்காக நீங்கள் எடுத்து உரைக்கிற கோரிக்கைகளுக்கு நாங்கள் துணை நிற்போம்!

**(14–3–67ல் சிம்சன்குரூப் தொழிலாளர்களுக்கிடையே அண்ணா)**

## 22. அவன் கேட்பது வாழ்வு

அவன், படைப்புத் தொழிலில் வல்லவன்!

அவன், பிறர் நலம் நாடிடும் நல்லவன்!

அவன், பரிவும் கனிவும் ததும்பும் உள்ளம் உள்ளவன்!

அவன் பகட்டும் பசப்பும் அறியாதவன்!

அவன், சூதும் சூழ்ச்சியும் தெரியாதவன்!

அவன், தான் செய்யும் பணியின் கணக்குப் பார்க்காதவன்!

அவன், இல்லையேல், அரசு இல்லை! வெற்றி முரசு இல்லை! அணி பணி இல்லை! அமைதி இல்லை! இல்லம், இன்பம், இல்லை! ஏற்றம் என்பதே இல்லை!

அவன், அவனிக்கே ஓர் அச்சாணி!

அவன், கரம் பட்டதாலேயே செழுமை காண்கின்றோம்!

அவன், வியர்வை கொட்டியதாலேயே மண், மணம் பெறுகிறது!

அவன், அழித்த காடுகள் பலப் பல!

*அவன், அமைத்த பாதைகள் பலப் பல!*

*அவன், வெட்டிய திருக்குளம் பலப் பல!*

*அவன் கட்டிய கோட்டைகள் பலப் பல!*

*அவன், ஆக்கித் தந்ததே அனைத்துப் பொருள்களும்!*

*அவன், படைப்புத் தொழிலில் வல்லவன்!*

*அவன் பழிபாவத்துக்கு அஞ்சாதாரிடம் பகடையானான்!*

*அவன், உழைக்கிறான்; உருக்குலைந்து போகிறான்!*

*அவன், உழுகிறான்; மற்றவர் உல்லாச புரியில் உலவுகிறார்கள்!*

*அவன், அறுத்துக் குவிக்கிறான்; மற்றவர் அள்ளிச் செல்கிறார்கள்!*

*அவன், ஏழ்மையில் உழல்கிறான்; எல்லாச் செல்வத்தையும் ஆக்கி அளித்து விட்டு!*

*அவன் ஆடை அணி தேடிடவில்லை; ஆடம்பரம் நாடிடவில்லை!*

*அவன், மேனி அழகு கூடிட, புனைவனவும் பூசுவனவும் தேடிடவில்லை!*

*அவன், உழைக்கிறான், உழைக்கிறான், உழைக்கத் தானே பிறந்தோம் என்ற உணர்வுடன்.*

*அவன், தன்னைச் சுற்றி சீமானும் பூமானும் உலவிடக் காண்கிறான்; இவர்கள் இந்நிலை பெற்றது எதனால் என்று கேட்டிட முனைகின்றான் இல்லை!*

*அவன், கண் எதிரே மணி மாடங்கள் தெரிகின்றன; நமக்கு மண் குடிசைதானா? என்று கேட்டிடத் தோன்றவில்லை!*

*அவன், உழைப்பால் உலகை வாழ வைத்திடும் உத்தமன்!*

*அவன், உழவன்! அவன், பாட்டாளி! அவன், ஏழை!*

அந்த ஏழைக்கு ஒரு விழா எடுக்கிறார்கள்! உழவனுக்கு என்று ஒரு திருநாள் நடத்துகிறார்கள்! உழவர் திருநாள்! பொங்கற் புதுநாள்!-என்றெல்லாம் பெயரிடுகிறார்கள்! போற்றுகிறார்கள்,நாட்டைப் பொன் கொழிக்கும், பொலிவு பூத்த இடமாக ஆக்கி அளித்ததற்காகப் பெருமைப்படுத்து கிறார்கள். அவன், புகழ் பாடுகின்றனர் கவிஞர்கள்! அவன், இயல்புகளைப் போற்றுகின்றனர் நல்லோர்! அவனை, அரசு கூட வாழ்த்திட முன் வருகிறது! அவன், விழிகளை அகலத் திறந்து பார்க்கிறான், வியப்புடன்! புறக்கணிக்கப் பட்டுக் கிடந்தவனை நோக்கி, புகழ் மாலையுடன் பலர் ஓடோடி வந்திடக்கண்டு, ஈதென்ன புதுமை? இதற்கு என்ன காரணம்? என்னவோ இதன் விளைவு? என்றெல்லாம் அவன் தன்னைத்தானே கேட்டுக் கொள்கிறான்.

அவன் ஏழை-ஆனால் இன்று அவனைப் புறக் கணிக்க அஞ்சுகிறார்கள்! அவன் சிந்திக்கத் தொடங்கி விட்டானே, சிறுமைப்படுத்தப்படுகிறோம் என்ற உணர்வு கொண்டிடின் சீற்றம் பொங்கிடுமே, அஃது தடுத்திட முடியாத அழிவையன்றோ மூட்டிடும். போகபுரியைத் தகர்த்திடுமே என்று அஞ்சத் தொடங்கிவிட்ட கனதனவான்கள், அவனை மயக்கிட, இனிப்புப் பேச்சு தந்திட முனைகின்றனர். அவன் ஏழை; வெள்ளை உள்ளம் கொண்டவன்; எனவே எளிதிலே அவனை மயக்கி விடலாம் என்று எண்ணுகின்றனர்!

எல்லாம் உன்னால்தானே!- என்று புகழ்ந்தால், அவன் உச்சி குளிர்ந்துவிடும் என்று எண்ணுகின்றனர்!

உன்னாலன்றோ உலகு என்று உரைத்ததும் அவன் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளும்; அவன் தனக்கு இழைக்கப் பட்டு வரும் கொடுமைகளை மறந்திடுவான்; புதிய உற்சாகத்துடன் உழைத்திடுவான்; புதுப்புது செல்வத்தை ஆக்கித் தந்திடுவான் என்று எண்ணுகின்றனர். அவன் ஏழை! எத்தர்கள் அவனை ஏமாளி என்றே தீர்மானித்து விட்டுள்ளனர்!

கந்தனா! கிடாமாடும் அவனும் ஒன்றுதானே!- என்று கேலி பேசி வந்த கனவான், "உழைப்பின் பெருமை" பற்றி அவனிடம் பேசுகிறான்! உலகம் உய்வதே உழைப்போனால்தான் என்று பாராட்டுகிறான். ஏழை, திகைக்கிறான்; இதென்ன என்றும் கேளாத பேச்சாக இருக்கிறதே என்று!

தமிழக அரசு, பொங்கற் புதுநாளை, உழவர் திருநாளாகக் கொண்டாட ஏற்பாடு செய்வது பொதுவாக ஏற்பட்டுள்ள புதிய போக்கின் ஒரு பகுதியேயாகும். உழைப்போரின் உள்ளம் எரிமலையாகி வெடித்திடாதபடி தடுத்திட, தடவிக் கொடுத்திடும் ஓர் முயற்சி! பாட்டாளி கள் உள்ளத்திலே பகை உணர்ச்சி மூண்டெழுகிறது என்று கண்டு கொண்டவர்கள், பாகு மொழி பேசி மயக்கிட எடுத்துக் கொள்ளும் முயற்சி! அவன் ஏழை! ஆனால் அவன் எங்கும் இருக்கிறான்! ஆகவே அவனைப் பகைத்தொழிக்க முடியாது; மயக்கிட முடியும் என்று எண்ணுகின்றனர், அவன் உழைப்பை உண்டு பெருத்திட்ட உல்லாசபுரியினர்.

அவனை மிதித்துத் துவைத்துவந்த நாள் போய், மதித்து மகிழச் செய்திட முயற்சி மேற்கொள்ளப்படும் நாள் வந்திருப்பது, வரவேற்கத்தக்க ஒரு கட்டம்; அஃது போலிகள் நடாத்திடும் நாடகமாக இருந்திடும் நிலையிலேயும், ஏழையைப் புறக்கணித்தபடி இனி இருந்திட முடியாது என்ற எண்ணம் இடம் பெற்றுவிட்டதனை இந்தக் கட்டம் தெளிவாக்கிக் காட்டுகிறது.

இந்தக் கட்டம், இறுதிக் கட்டமல்ல! ஆனால் இந்தக் கட்டம் காணவே, நீண்ட பயணம் நடாத்த வேண்டி இருந்தது; இன்னல் பல ஏற்கவேண்டி வந்தது.

அவன் ஏழை! ஆமாம்! வேறே எப்படி இருக்க முடியும்! என்ன தெரியும் அவனுக்கு! உழைக்கத் தெரியும் மாடுபோல! சுமக்கத் தெரியும்; கல்லைப் பிளக்கத் தெரியும்; கட்டை வெட்டத் தெரியும்; குப்பை கூட்டத் தெரியும்;

வேறென்ன தெரியும்! அறிவின் துணைகொண்டு செய்திட வேண்டிய பல செயல்கள் உள்ளன; அவன் என்ன கண்டான் அவைபற்றி! அவனுக்கு ஏது அதற்கான தெளிவு – பயிற்சி! அவன் பாவம், ஏழை, என்று பரிதாபம் கலந்த ஏளனப் பேச்சு நடத்திவந்தனர் சீமான்கள்! நளினிகள் அந்தப் பேச்சு கேட்டு 'கலகல'வெனச் சிரித்தனர்!

அவன் ஏழை! உழைக்கிறான்; அவனும் பிழைத்திருக்க வேண்டாமா! அவன் ஏழை, ஆனாலும் நமது உடைமை அல்லவா? அவன் உயிருடன், உடல் வலிவுடன் இருந்தால்தானே, உழைக்க முடியும்! அதனால் அவன் வாழ வழி செய்து தரவேண்டியது நமது கடமை'! அவன் உடல் நலம் கெடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டியதும் நமது கடமை! அவன் ஒரு நாலு நாள் படுத்துவிட்டாலோ, அல்லது ஓரே அடியாகக் கண்ணை மூடிவிட்டாலோ, யாருக்கு நட்டம்? நமக்குத்தானே? ஆகவே அவனைக் காப்பாற்ற வேண்டியது நமது கடமை! – இந்த விதமான 'வியாபாரப் போக்கிலே பேசி வந்த கட்டம் பிறகு!

இப்போது வந்துள்ள கட்டம் அவன் உழைக்கிறான். ஆனால் இப்போது உண்மையையும் உணரத் தலைப்பட்டு விட்டான்; நம்மாலன்றோ உலகு என்று பேசுகிறான், மெல்லிய குரலில்! நான் இல்லையேல் இங்கு வேறு எதுவும் இல்லை என்று முணுமுணுக்கிறான். ஆகவே அவனை இனியும் புறக்கணிக்கக் கூடாது; அவன் பகையைத் தேடிக் கொள்ளக் கூடாது, பசப்பிட வேண்டும், மயக்கிட வேண்டும் என்ற திட்டம் போட்டிட வேண்டியதாகி விட்டது.

உழைப்பவனே உத்தமன்! உழைப்பே செல்வம் உழைப்புக்கே எல்லாப் பெருமையும்! உலகம் இயங்குவதே உழைப்பினால்தான்!–என்ற திருப்புகழ் பாடுகின்றனர்.

நமது பெருமை இத்தகையதா? நாம் உழைத்திடுவது கண்டு நம்மை இவ்வளவு உயர்வாகப் பேசுகின்றனரா?

*மேலும் உழைத்திடின், மேலும் போற்றுவர், வாழ்த்துவர்! - என்று பாட்டாளி எண்ணிக்கொள்வான்; மனதிலே எழுப்பிய குமுறலும் அடங்கிப்போகும்; கணக்குப் பார்க்கமாட்டான்; கணக்கு கேட்கவும் மாட்டான்; காலத்தை நமதாக்கிக் கொள்வோம். இரண்டொரு கற்கண்டுத் துண்டுகளை வீசிவிட்டால் போதும் என்று எண்ணி, தன்னலக்காரர் திட்டம் தீட்டியுள்ளனர். அந்தக் கட்டம் இது!*

*கேள்வி ஏதும் கேட்காதிருந்து வந்த ஏழை, இப்போது, எதனால் கேள்வி கேட்கத் தொடங்கினான். ஓயாது உழைத்தும், வாழ முடியாத நிலைபெற்று, கஷ்டப்பட்ட போது, எண்ணம் மனதினைக் கிளறத் தொடங்கிற்று. பசுமையைத் தந்தவன், தன் வாழ்வு வரண்டுபோகக் கண்டபோது, உலகுக்குப் பணம் தேடித் தந்திடும் நம்மாலே நமது வாழ்விலே வரட்சி ஏற்பட ஒட்டாது தடுத்திட முடியாது போய்விட்ட காரணம் என்ன? என்று கேட்கத் தொடங்கினான். அதன் தொடர்பாக, அடுக்கடுக்கான கேள்விகள் கிளம்பின! அதிர்ச்சி தரத்தக்க பதில்கள் கிடைத்தன.*

*கனியின் சுவையை மலரின் மணத்தை, பூங்காற்றின் நேர்த்தியை இசையின் இனிமையை நாம் கண்டு மகிழ்ந்திட முடியவில்லை...ஆனால்...என்று எண்ணிடலானான். அவன் மனம் எங்கெங்கோ சென்றது பெருமூச்சு கிளம்பிற்று! ஓர் கடுமை நிரம்பிய பார்வை கண்களிலிருந்து புறப்படலா யிற்று!*

*உழைப்பே செல்வம்! உழைப்பின் பெருமையே பெருமை!- என்று விழா நடத்திப் பேசிடின் ஏழை 'இது போதும்' என்று இருந்து விடுவானா?*

*உழைப்பே செல்வம்! ஒப்புக் கொள்கிறாய். ஆனால் அந்தச் செல்வம் உழைப்பவனிடம் இல்லையே ஏன்? உழைக்காதவனிடம் போய்க்குவிகிறதே ஏன்? என்று எண்ணிடுவன்! அந்த எண்ணம் ஆபத்தான எண்ணம்*

என்பர் ஆதிக்கக்காரர்கள்! வந்து தீரவேண்டிய எண்ணம் என்பர் வரலாறு அறிந்தவர்!

அந்த எண்ணத்தைத்தான், மெள்ள மெள்ள ஆனால் நிச்சயமாக, ஏழையை மயக்கிடும் நினைப்புடன் விழா நடத்துவோர் ஊட்டிவிடப் போகின்றனர் தம்மையும் அறியாமல்.

**உழைப்பின் பெருமை** பற்றி இத்தனை உருக்கத்துடன் பேசுகின்றனரே, விழா நடத்துவோர்-விவரம் தெரிந்தவர் அல்லரோ அவர்கள்-ஆயின் உழைப்போன் பெற்றுள்ள பெருமை என்ன, இன்று?

பெருமைதரும் இடமா, சமூகத்தில் இருக்கிறது உழைப்போனுக்கு?

பெருமைக்குரிய உழைப்போனுக்கா ஊராளும் மன்றங்களில் இடம் இருக்கிறது?

உழைப்பே பெருமை என்று பேசுபவர், உழைக்கவா முன் வருகின்றனர்? பேசுகின்றனர்!

உழைப்பின் பெருமையை அவர்கள் உணர்ந்து உரைப்பவரெனில், உழைப்பவன் உருக்குலைந்து கிடக்கிறானே, அவனுக்காக என்ன செய்தனர்?

உடைமையும் உல்லாசமும் சீமான்களிடம்! உழைப்பு எம்மிடம்! எமக்கென்று அவர்கள்விட்டு வைத்துள்ள ஒரே உடைமை, உழைப்பின் பெருமை என்று பேசுகிறார்களே அந்தப் 'பெருமை' மட்டுந்தானே! நியாயமா இது!-என்று கேட்கவைக்கவே விழா பயன்படும்; - உடனடியாக இல்லையெனினும் மெள்ள மெள்ள.

உழைப்பின் பெருமையை உணர்ந்துள்ள பெரியவர்களே! உழைத்திட வாரீர்!-அந்தப் பெருமையிலே பங்கேற்க வாரீர் என்று ஒருவன், கேலிக் குரலில் அழைப்பு விடுத்திடுவான்!

உழைப்புதானே, ஐயன்மீர்! பெருமை தருவது! அங்ஙனமிருக்க, உண்டு கொழுத்து உருண்டு கிடக்கின்றீரே, பிறர் உடைமையைக் கவர்ந்திட வழிதேடி அலைகின்றீரே! - ஏன்? வந்து உழைத்திடுவீர்! பெருமை பெறுவீர்' - என்றொருவன் கேட்டுவிட்டு, புன்னகை உதிர்த்திடுவான்.

உழைப்பின் பெருமைபற்றித் தானே ஐயா பேசுகிறீர்! உண்மை ஐயா! உண்மை! பெருமை நீரம்பத்தான் இருக்கிறது. பட்ட கடனைத் தீர்த்திட வக்கற்று' பதுங்கிப் பதுங்கிச் செல்கிறாயே, நீயும் ஒரு மனிதனா? என்று பக்கிரி கேட்டான். பத்துப்பேர் எதிரில், பட்டப்பகலில், நடுத்தெருவில்! அந்தப் 'பெருமை'யை நான் பெற்றேன்! உழைத்துத்தான் பெற்றேன் அந்தப் பெருமையை!

உழைப்பின் பெருமை எத்தகையது என்பது புரிந்ததய்யா எனக்கு; என் மனைவிக்குக் குலைநோய்; மருந்து பெறச் சென்றேன்; சர்க்காரின் மருத்துவ மனையில்; உழைப்பால் கிடைக்கும் பெருமையைத் தேடிப் பெற்றிடத் தெரியாத உடைமையாளன் ஒருவனுடைய மூன்றாந் தாரம், முத்துப் பல்லழகி வந்தாள், முதுகுப்புறம் அரிப்பு என்றாள்; மூன்று டாக்டர்கள் அந்த மருத்துவ மனையில்; மூவரும் சென்றுவிட்டனர் பெண்மையின் கட்டளைக்கு நடுங்கி. கால் கடுக்க நின்றேன்; கண்ணால் சொன்னான் காவலாளி போகச் சொல்லி; மறுத்தேன்; பிடரியைப் பிடித்து வெளியே தள்ளினான். டாக்டரய்யாவைத் தொந்தரவு செய்யாதே என்று. பெருமை ஐயா! பெருமை! உழைப்பால் வந்த பெருமை!-என்றொருவன் உருக்கத்துடன் பேசிடப் புறப்படுவான்.

வைரம்! வைரம்! அருமையான வைரம்! மணங்கு 25 ரூபாய் வாங்கிட முந்துங்கள்! அருமையான வைரம்!- என்று எங்காவது கூறிடுவாரா! இங்கு கூவுகின்றனர்! உழைப்பு! உழைப்பு! பெருமைமிக்கது பெருமைமிக்கது! உழைத்திடுவீர்கள்! நாளெல்லாம் உழைத்திடின் நாலணா கூலி! நல்லோரே! வல்லோரோ! உழைத்திடுவீர், பெருமை

2.6.

உழைப்புதானே, ஐயன்மீர்! பெருமை தருவது! அங்ஙனமிருக்க, உண்டு கொழுத்து உருண்டு கிடக்கின்றீரே, பிறர் உடைமையைக் கவர்ந்திட வழிதேடி அலைகின்றீரே! - ஏன்? வந்து உழைத்திடுவீர்! பெருமை பெறுவீர்' - என்றொருவன் கேட்டுவிட்டு, புன்னகை உதிர்த்திடுவான்.

உழைப்பின் பெருமைபற்றித் தானே ஐயா பேசுகிறீர்! உண்மை ஐயா! உண்மை! பெருமை நீரம்பத்தான் இருக்கிறது. பட்ட கடனைத் தீர்த்திட வக்கற்று' பதுங்கிப் பதுங்கிச் செல்கிறாயே, நீயும் ஒரு மனிதனா? என்று பக்கிரி கேட்டான். பத்துப்பேர் எதிரில், பட்டப்பகலில், நடுத்தெருவில்! அந்தப் 'பெருமை'யை நான் பெற்றேன்! உழைத்துத்தான் பெற்றேன் அந்தப் பெருமையை!

உழைப்பின் பெருமை எத்தகையது என்பது புரிந்ததய்யா எனக்கு; என் மனைவிக்குக் குலைநோய்; மருந்து பெறச் சென்றேன்; சர்க்காரின் மருத்துவ மனையில்; உழைப்பால் கிடைக்கும் பெருமையைத் தேடிப் பெற்றிடத் தெரியாத உடைமையாளன் ஒருவனுடைய மூன்றாந் தாரம், முத்துப் பல்லழகி வந்தாள், முதுகுப்புறம் அரிப்பு என்றாள்; மூன்று டாக்டர்கள் அந்த மருத்துவ மனையில்; மூவரும் சென்றுவிட்டனர் பெண்மையின் கட்டளைக்கு நடுங்கி. கால் கடுக்க நின்றேன்; கண்ணால் சொன்னான் காவலாளி போகச் சொல்லி; மறுத்தேன்; பிடரியைப் பிடித்து வெளியே தள்ளினான். டாக்டரய்யாவைத் தொந்தரவு செய்யாதே என்று. பெருமை ஐயா! பெருமை! உழைப்பால் வந்த பெருமை!-என்றொருவன் உருக்கத்துடன் பேசிடப் புறப்படுவான்.

வைரம்! வைரம்! அருமையான வைரம்! மணங்கு 25 ரூபாய் வாங்கிட முந்துங்கள்! அருமையான வைரம்!- என்று எங்காவது கூறிடுவாரா! இங்கு கூவுகின்றனர்! உழைப்பு! உழைப்பு! பெருமைமிக்கது பெருமைமிக்கது! உழைத்திடுவீர்கள்! நாளெல்லாம் உழைத்திடின் நாலணா கூலி! நல்லோரே! வல்லோரே! உழைத்திடுவீர், பெருமை

*சமூகம் முழுவதும் வறுமையின் பிடியில் சிக்கிக் கொள்கிறது.*

*உழைப்பவனை வஞ்சித்து ஒரு சிலர் செல்வத்தை முடக்கிக் கொள்வது, சமூகத்தையே நாளாவட்டத்தில் பாழாக்கிவிடுகிறது; அதனால்தான், அது சமூக விரோதச் செயலாகிறது.*

*அத்தகைய சமூக விரோதிகளும், அவர்களுக்கு உடந்தையாக இருப்பதற்கான ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளவர்களும், ஒருநாள் கூடி, உழவர் திருநாள் - உழைப்போரின் திருநாள் என்று கொண்டாடுவது, ஏமாந்தவனைச் சேற்றிலே தள்ளிவிட்டு, அவன் மீது சிறிதளவு பன்னீர் தெளிப்பது போன்றதாகும்; புண்ணின் மீது புனுகு பூசுவது போன்றதாகும்; கண்ணைக் குத்திவிட்டு கைக்குக் காப்புப்போடுவது போன்றதாகும். குன்மம் போக்க மருந்து தராமல், அவன் முன் குழல் ஊதி, இனிமையைப் பெறு என்று கூறுவது போன்றதாகும்.*

*உழைப்பவன் இன்று கேட்பது நீதி! உழைப்பின் பெருமைபற்றிய சிந்து அல்ல! உழைப்பவன் இன்று கேட்பது வாழ்வு! பொருளற்ற புகழுரை அல்ல.*

அவன் ஏழை ! அவன் வாழ விரும்புகிறான் !

அவன் ஏழை ! அவன் நீதி கேட்கிறான் !

அவன் ஏழை ! உண்மையை உணர்ந்து கொண்டான் !

அவன் ஏழை ! வாழ்வுக்காகப் போராடுகிறான்.

அவன் ஏழை ! உரிமைக்குரல் எழுப்புகிறான் !

அவன் ஏழை ! ஆனால் அவன் உழைப்பே, செல்வம் என்பதை அறிந்து கொண்டுவிட்டான்.

அவன் ஏழை ! விழித்துக் கொண்டுவிட்டான்;

அவன் கேட்பது வாழ்வு ! ஏமாற்றும் விழா அல்ல !

உரிமைத் திருநாள் காணவிழைகிறான், ஊராள்வோர், உழவர் திருநாள் நடத்தி அவனை மயக்கிட முடியாது.

உண்மையான உழவர் திருநாள்; உழுபவனுக்கு நிலம் கிடைத்திடும் நாளே!

*நேர்மையான உழவர் திருநாள் நெற்றி வியர்வை நிலத்தில் சொட்டச் சொட்டப் பாடுபடும் உழவன் வாழ்வில் நிம்மதி ஏற்படும் நாளேயாகும்!*

*அந்நாளே, திருநாள்; பொன்னாள்; உழைப்போர் உண்மையான பெருமையினைப் பெற்றிடும் நன்னாள்.*

*அந்நாளைக் கண்டிடவே கழகம் விழைகிறது.*

*அதற்காகப் பாடுபடும் ஆற்றலைப் பெற்றிடவே பணியாற்றி வருகிறது.*

*அதற்காவன செய்திடவே மக்களின் ஆணையை எதிர்பார்த்து நிற்கிறது.*

## 23. மார்க்கசீயம் பற்றி அண்ணா

*"கம்யூனிஸ்டுகள், இங்கு, காரல் மார்க்ஸ் - அவர் காலத்திலிருந்த நிலைகளை வைத்துக்கொண்டு கூறிய வர்க்கப் போராட்டத் தத்துவத்தைப் பேசினார்கள் - பேசுகிறார்கள்.*

*நாட்டிலே காட்டுமிராண்டிகளாய் வாழ்ந்த மக்கள், நாட்டு மக்களாக - நாகரிகமான வாழ்வு பெற்றவர்களாக - ஒரு சமுதாயமாக வாழத் தலைப்பட்டுத் தொழில் வளர்ச்சியும் தோன்றிய காலத்தில், சமுதாயம் இரு கூறுகளாகப் பிளவுபட்டது;* முதலாளிச் சமூகம் – பாட்டாளிச் சமூகம் *என்ற கூறுகள் தோன்றின!*

*இந்த நிலையை, தனக்கிருந்த பரந்த அறிவினால் உணர்ந்த காரல் மார்க்ஸ் 'எதிர்காலத்தில் இந்த இரண்டு வர்க்கங்களும் மோதிக்கொள்ளும். முடிவு, தொழிலாளி வர்க்கத்திற்கு வெற்றியே' என்று கூறினார்.*

*அவர் கூறிய காலத்தில், சமுதாயம் ஏறத்தாழ இந்த இரண்டு கூறுகளாகவே இருந்தது; ஆனால், இப்போது அந்த*

*நிலையில் இல்லை; இந்த இரண்டு கூறுகளுக்கிடையில் ஒரு வர்க்கம் - நடுத்தர வகுப்பு தோன்றியுள்ளது.*

*ஆனால் கம்யூனிஸ்டுகள் இன்னும் இந்த இரண்டு சமுதாயங்களைப் பற்றி மட்டுமே எண்ணுகிறவர்களாக இருக்கிறார்கள்.*

**பாட்டாளி வர்க்கத்தைக் கொண்டு மட்டுமே முதலாளி சமூகத்தை ஒழித்துவிடலாம் என்கிறார்கள்; ஆனால் நாம், 'இந்த இரண்டு சமூகங்களுக்கும் இடையில் உள்ள நடுத்தர வகுப்பினர், முதலாளி பக்கம் இழுக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்' என்று கூறுகிறோம்.**

*இந்த நடுத்தர வகுப்பினர், அச்சத்திற்கும் - ஆசைக்கும் இடையில் ஊஞ்சலாடிக் கொண்டிருப்பவர்கள்!*

*'நிலை தாழ்ந்தால், எங்கே பாட்டாளியாகி விடுவோமோ' என்ற அச்சமும், ஒரு 'சான்ஸ்' கிடைத்தால் 'முதலாளி ஆகமாட்டோமா' என்ற ஆசையும் அவர்களைப் பிடித்தாட்டுகிறது!*

*இந்த நடுத்தர வகுப்பினர் இன்று, பல ஐரோப்பிய நாடுகளில் ஆளும் கட்சியை அமைத்திருக்கின்றனர்!*

*அமெரிக்காவில் முதலாளிமார்கள் ஆட்சி நடத்துகிறார்கள்; இரஷ்யாவில் தொழிலாளர்கள் ஆட்சி நடத்துகிறார்கள்; ஆனால் வேறு ஐரோப்பிய நாடுகளில் மத்திய தர வகுப்பார் ஆளும் கட்சியினராக உள்ளனர்!*

*இந்த நாட்டிலும் நடுத்தர வகுப்பார் இருக்கின்றனர்; இழுக்கப்படாமலிருந்தால்தான், தொழிலாளர்கள் விரும்புகிற ஒரு அரசு அமைய முடியும்.*

*'நடுத்தர வகுப்பாரே இல்லை' என்றோ, அல்லது, 'அவர்கள் ஒரு சக்தியே அல்ல' என்றோ கூறப்படுமானால், இந்நேரம் இந்த நாட்டில் புரட்சி மூண்டிருக்க வேண்டும்; முதலாளி சமூகம் சாய்ந்திருக்க வேண்டும்; பாட்டாளி*

அரசு மலர்ந்திருக்க வேண்டும்; இல்லையே-ஏற்பட வில்லையே!

அதனால்தான் நாம் கூறுகிறோம் - 'தொழிலாளர் களுக்கும் நடுத்தர வகுப்பாருக்கும் இடையே ஒரு அன்புச் சங்கிலித் தொடர்பு வேண்டும்' என்று!

தொழிலாளருக்கு நியாயம் கிடைக்க வேண்டு மென்பதை நடுத்தர வகுப்பாருக்குச் சொல்ல, அவர்கள் தொழிலாளருக்கு விரோதமாகப் போய்விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்; அப்படி நடுத்தர வகுப்பார் தயாரிக்கப் பட வேண்டும்.

அப்போதுதான், தம்மையும் அறியாமல் நடுத்தர வகுப்பார் முதலாளி பக்கம் இழுத்துச் செல்லப்படுவதைத் தடுக்க முடியும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், கடையில் சில சாமான்களை வாங்கி - அதை ஒரு கூலிக்காரன் தலையில் வைத்து வீட்டிற்கு வந்து நாம் ஆறணா கூலி கொடுப்பதாயும், அந்தத் தொழிலாளி இன்னும் இரண்டணா கூடக் கேட்பதாயும் வைத்துக் கொள்வோம்; உடனே நமது தாயார் கூறுகிறார்கள் - 'இந்தக் கூலிக்காரர்களே இப்படி'த் தான் என்று!

இதுதான், 'நம்மையும் அறியாமல், நடுத்தர வகுப்பார் முதலாளி பக்கம் இழுத்துச் செல்லப்படுகிறார்கள்' என்பது

இரயில்வேத் தொழிலாளர்கள் ஏழெட்டு ஆண்டு களுக்குமுன் ஒரு வேலை நிறுத்தம் செய்தனர்; அந்த வேலை நிறுத்தத்தைத் திறம்பட நடத்த கம்யூனிஸ்டுகள் இல்லாமற் போகவில்லை; வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு எத்தகு அடக்குமுறைகளையும் தாங்கிக் கொள்ளும் உள்ள உரம் இல்லாமற் போகவில்லை; அதற்கு ஆதரவாக நாம் துணை நிற்காமல் போகவில்லை!

நாம் என்றால்- அன்று திராவிட கழகமாக இருந்தோம். பெரியார் கூட, 'ஆதரவு தரவேண்டாம்'

என்றார்; நான்தான், 'ஆதரவு தந்தாக வேண்டும்' என்று கூறினேன்; அப்போதே கூட, எனக்கும்-பெரியாருக்கும் கருத்து வேறுபாடு!

இப்படி, கம்யூனிஸ்டுகள் முன்னின்று நடத்தினர் - தொழிலாளர்கள் உறுதியுடன் நின்றனர் - நாம் துணை நின்றோம்; என்றாலும் அந்த வேலை நிறுத்தம் முறியடிக்கப் பட்டது எதனால்? எப்படி?

> "நடுத்தர வகுப்பாரின் ஆதரவு அந்தப் போராட்டத்திற்கு அப்போது கிடைக்கவில்லை; அவர்களுக்கு அறிவை அள்ளித் தரும் பத்திரிகைகள், 'இந்த வேலை நிறுத்தம் கூடாது - தேவையற்றது - நியாயமற்றது - மக்களுக்குத் தொல்லை தருவது - பிரயாணிகளுக்கு இடைஞ்சல் செய்வது - தொழிலாளர்களின் வீண் ஆர்ப்பாட்டம்" என்று எழுதின.

இதை நான் அப்போதே நண்பர் ஜீவானந்தத்திடம் கூறினேன்; அவர், 'அண்ணாதுரை - நீ ஒரு அவசரக்காரன்' என்று கூறிவிட்டார்!

அன்று நடுத்தர மக்களையே, 'வேண்டாம்; அவர் களின் ஆதரவே தேவை இல்லை' என்று பேசியவர்கள், இன்று 'பிர்லாவே வருக; கேரளத்தில் தொழிற்சாலைகளை அமைத்துத் தருக' என்று பேசுகிறார்கள்.

அன்று, 'நெடுஞ்செழியனைச் சேர்த்துக் கொள்ளுங்கள்' என்றேன்; 'கூடாது; இவர்களெல்லாம் மத்திய தர வகுப்பினர்; இவர்களைச் சேர்த்துக் கொண்டால், தொழிலாளர் இயக்கத்தின் தூய்மை கெட்டுவிடும்' என்று பேசினார்கள். இன்று பிர்லாவையே அழைக்கிறார்கள்!

காரணம் கேட்டால், 'தொழிற்சாலையை நிர்வகிப்பது எப்படி என்பதைக் கற்றுத் தருவதற்காகவே அழைக் கிறோம் என்கிறார்கள்!

*நாகப் பாம்பை படுக்கை அறைக்குள் விட்டுவிட்டு, ‘இது நாகப் பாம்புதான்; ஆனால் ஒன்றும் செய்யாது; இதன் ஆட்டத்தை எனது மனைவி நாகவல்லி பார்த்துக் கற்றுக் கொள்வதற்காகத்தான் கொண்டு வந்திருக்கிறேன்’ என்பது போல் இருக்கிறது அவர்கள் கூறுவது!*

*பத்து வருடங்களுக்குமுன், நடுத்தர வகுப்பினரையே, ‘வேண்டாம்’ என்றவர்கள், இன்று முதலாளிமார்களையே அழைக்கின்றனர்; ‘நடுத்தர வகுப்பார் ஆதரவும் வேண்டும்’ என்று உணர்ந்து வருகிறார்கள்!*

*ஆயிரம் தவறுகள் செய்வார்கள்; ஆனாலும், எவ்வளவு அவசரமாகத் தவறுகளைச் செய்வார்களோ அவ்வளவு அவசரமாகத் தவறுகளைத் திருத்திக் கொள்ளக் கூடியவர்கள் கம்யூனிஸ்டுகள்! இந்திய அரசியலிலேயே, செய்கிற எண்ணற்ற தவறுகளை மிக மிகத் திருத்திக் கொள்ளக்கூடியவர்கள் கம்யூனிஸ்டுகள்தான்!”* ‘நம்நாடு’

## முதலாளித்துவத்தின் முடிந்த கொள்கை!

*ஒரு சிலரின் ஆசைக்கு மிகப் பலரைப் பலியாக்குவது தான் முதலாளித்துவத்தின் முடிந்த கொள்கை! சக்திக் கேற்ற உழைப்பு-தேவைக்கேற்ற வசதி என்பதுதான் சமதர்மத் திட்டத்தின் அடிப்படை நோக்கம்!*

*மாளிகைக்கு அருகே மண்மேடு இருக்கக் கூடாது! மந்தகாச வாழ்வுக்கருகே மனிதப் புழுக்கள் உலவக் கூடாது! சோம்பேறிச் சீமைகள் ஒரு புறமும், சோர்ந்து விழும் அனாதைகள் மற்றொரு புறமும் இருக்கக்கூடாது! இதற்குப் பெயர்தான் சமதர்மம்!*

*சாதி மத-குல பேதங்கள், நம் மக்களை முன்னேற ஒட்டாதபடி மூச்சுத் திணறும்படி-முதுகெலும்பை முறிக்கும்படி அழுத்துகின்றன! இந்நிலையில், நம் நாட்டில் சமதர்மம் மலருவது எங்கே? சமத்துவம் தோன்றுவது எப்படி? அதன் முழுப் பயனாகிய தோழமையைக் காண்பது எங்ஙனம்?*

*சமத்துவம், சமதர்மம் போன்ற இலட்சியங்களைப் பேசுவது சுலபம்! சாதிப்பது கடினம்!*

### வெளியே நின்று வேதனைப்படும் நிலை ஏன் ?

*"கடற்கரையில் அதுல்யா கோஷும் - காமராசரும் பேசியதாகப் பத்திரிகையில் செய்தி வந்தது; 'உழுபவனுக்கே நிலம்-தொழிலாளிக்குத்தான் ஆலை' என்ற அதுல்யா கோஷ் பேசினாராம்.*

*"உழுபவனுக்கு நிலம் என்றால், பட்டாக்காரரிடம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் எப்படி வந்தது? வலிவலத்தாரிடம் ஏராளமான நிலம் இருக்கக் காரணம் என்ன? குன்னியூர் சாம்பசிவம் எப்படி இவ்வளவு நிலங்களைப் பெற்றார்?*

*"உழுபவனுக்கு நிலம்' என்றால், உழுபவர்களுக்கு அல்லவா நிலம் சொந்தமாகி இருக்க வேண்டும்?*

*"தொழில் செய்யும் தொழிலாளிக்கும் ஆலையில் பங்கு' என்றால், இங்கு ஆலைகள் நெடுங்காலமாக மூடிக் கிடப்பானேன்? உள்ளே இருந்து வேலை செய்ய வேண்டியவர்கள், வெளியே நின்று வேதனைப்படுவானேன்?*

**—அறிஞர் அண்ணா**

*(1966ல், கோவை-நரசிம்மாபுரத்தில் நடைபெற்ற தொழிலாளர் கூட்டத்தில் ஆற்றிய உரையில்)*

## 24. ஏழையின் புரட்சி

*மன்னர்கள் மணிமுடிகளுக்காகவும், சீமான்கள் மது நிகர் வாழ்வுக்காகவும் போரிட்ட பகுதிகளே பெரிதும் வரலாற்றில் இடம் பிடித்துக் கொண்டிருக்கின்றன!*

*ஏழை எளியவருக்கு எங்ஙனம் உலகிலே ஒதுக்கிடம் தரப்படுகிறதோ, அது போன்றே வரலாறும், அவர்களை அதிகம் கவனிப்பதில்லை!*

கீர்த்திமிக்க மன்னர்கள் நடத்திய, வீரப் போராட்டங்கள்—பிடித்த கோட்டைகள்—வெட்டிய அகழிகள்—அழித்த நகரங்கள்—கட்டிப் பிடித்துவந்த கைதிகள்—வெட்டிக் குவித்த எதிரிகள்—அவர்கள் வீசிய வாட்களின் கூர்மை—வாட்கண்ணாரிடம் அவர்கள் பணிந்த காட்சிகள்—அரண்மனைச் சதிகள்—அவைகளின் விளைவுகளான படுகொலைகள்—பட்டமும் பதவியும் பெற்ற சீமான்கள் பாடும் பராக்கு—அவை பெறாதவரிடம் பகைமை—இவைகளையெல்லாம் விரிவாக விளக்கமாக—சுவையும் கலந்ததாக ஆக்கித் தருவதையே வரலாற்று ஆசிரியர்கள் நெடுங்காலம் முறையாகக் கொண்டனர்.

எந்த கோலாகலத்துக்கும் அடிப்படை தரும் மக்களின் எழுச்சி—வீழ்ச்சி பற்றியும் வீரப் போரிட்டு அவர்கள் வெற்றி பெற்றது குறித்தும், இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில காணக் கிடக்கும்; எனினும் அரண்மனையும்—மாளிகையும்—களமும்—கொலு மண்டபமும் வரலாற்றைத் தமக்கு சொந்தமாக்கிக் கொண்டதால், ஏழையின் கண்ணீரும், பெரு மூச்சும் அதில் இடம் பெறவில்லை!

மாடியில் உலவும் முல்லை சூடிய மங்கையின் எழிலைக் காண்போருக்கு, அந்தக் கன்னி வாழும் கட்டிடத்தின் அடிப்படையின் ஆழம்—அமைப்புப் பற்றி எண்ணிட நேரம்தான் கிடைக்குமா?

மேலும், துதி பாடகர்களும் புகழ் பரப்பும் புலவரும் தான் வரலாற்றுச் சுவடிகளைத் தொகுத்து அளிக்கும் பணியினை மேற்கொண்டனர்—துவக்கத்தில்; எனவே அவர்கள் ப்டை அஞ்சப் போரிடும் மன்னரைக் குறித்தும்—அவன் மனம் உருக ஆடிடும் துடியிடை பற்றியுமே தீட்டிக் காட்டினர்!

எனினும் இன்றுபோல் என்றும் மக்கள் இருந்து வந்தனர்—உழைத்த வண்ணம்—உருமாறிய வண்ணம்!

கண்ணீர் பொழிந்தபடி—பெரு மூச்சுடன்—அடிமைகள் இருந்து வந்தனர்--எடுபிடிகளும் இருந்தனர்!

உழவர் உழன்று வந்தனர். தொழில் செய்வோர் பாடுபட்டு வந்தனர்.

எது செய்து வாழ்வது என்று தெரியாது திகைத்து அலைந்து கொண்டிருந்தவர்களும் இருந்து வந்தனர்.

அவர்களின் மனப்போர் மண்டிலம் ஆண்ட மன்னர்கள் நடாத்திய போர்களைவிட அதிகம்—ஆனால்—வெளியே தெரியாது!

வாழ்வுக்காக அவர்கள் நடத்திய போர்களும் பல—ஆனால் வரலாற்றிலே அவர்கட்கு போதிய இடம் தரப்பட வில்லை.

மக்களின் சார்பாகப் பாடுபடும் மாண்பு வளர்ந்துள்ள இதுபோதுதான், வரலாற்றினைப் புதுப்பித்து—மக்களை முன்னால் வைத்து—சம்பவங்களைத் தொகுத்திடும் முறை ஓரளவு வளருகிறது! வளர வேண்டிய அளவு அதிகம் இருக்கிறது!

ஏழையின் மனதிலே நெடுங்காலமாக உருவாகிக் கொண்டுவந்த கோபம், எரிமலை நெருப்பாகக் கக்குவது போல சில வேளைகளில், புரட்சிகளாக மாறின; ஆனால் தெளிவான திட்டம் கிடையாது—கொள்கை வளர வில்லை! 'வேறு வழியில்லை' என்ற போது, 'வெட்டு-குத்து' என்றனர். வெட்டப்பட்டனர்! மாண்டவர் போக மீதமிருந்தோர், மீண்டும் செக்கு மாடுகளாக ஆக்கப் பட்டனர்.

உழைப்பாளிகளின் மனக் குமுறல்கள் வெடித்த சம்பவங்கள் பல நாட்டு வரலாறுகளிலே சிற்சில காணப்படும்; ஆனால் அவைகள் மகா அலெக்சாண்டரின் வெற்றிப் படைகள் கிளப்பிய தூசியால் மறைக்கப்பட்டு விட்டன!

மாவீரர் ஜூலியஸ் சீசரின் வீரவாளின் ஒளி ஏழையின் அழுகுரலை அடக்கிவிட்ட வரலாறு — தன் வழக்கமான பகுதியைக் காட்டி—மக்களின் வரலாற்றை மறைத்துவிடும்.

அடிமைகளாக—பண்ணையாட்களாக—பலவித தொழில் செய்பவர்களாக—மக்களில் பெரும்பகுதியினர் இருந்த வரையில்—அவர்கள் எப்போது கொடுமையை எதிர்க்கக் கிளம்பினும்—கொள்கை, திட்டம், கூடிச் செயலாற்றுதல், தொடர்ந்து செயலாற்றுதல் போன்ற முறையைக் கொள்ளவில்லை!

ஊருக்குள் புகுந்த புலியைக் கொல்ல அனைவரும் கையில் கிடப்பதை எடுத்துக்கொண்டு கிளம்புவது போலவே காரியம் இருந்து வந்தது!

தங்களின் நிலை பற்றி எண்ணிப் பார்த்திட—எம் முறையினால் குறைகளைக் களைந்து கொள்ளலாம்—என்று கூடிக் கலந்து பேசி—அதற்கான திட்டத்தை யார் வகுப்பது—யார் திட்டப்படி செயல் நடத்திச் செல்வது? என்பன போன்றவைகளை ஆராய்ந்து முடிவு கட்டத் திறனும், வாய்ப்பும் அப்போது இல்லை! திறத்தை விட வாய்ப்பு இல்லை என்றே கூற வேண்டும். ஏனெனில் ஏழையின் எழுச்சியில் என்றுமே ஒரு வலிவு இருக்கத்தான் செய்தது!

இந்த முறை ஏழைகளுக்குக் கிடைக்க பல நூற்றாண்டுகள் பிடித்தன. இதற்கிடையில் நாடுகளிலே—பல துறைகளிலும், பல்வேறு மாற்றங்கள் நேரிட்டன; வரலாற்று ஆசிரியர்களின் கண்களுக்கு மக்கள் தெரியலாயினர்!

கொடுங்கோலனை விரட்டுவது—செங்கோல் அமைப்பது—'எவன் எந்த நேரத்தில் கொடுங்கோலனாகி விடுவானோ' என்ற அச்சத்தால் உந்தப்பட்டு அரசாளும் முறையிலேயே மாற்றம் காண்பது—கோனாட்சியை குடிகோனாட்சியாக மாற்றுவது—ஆட்சி செய்வோருக்கும்—

ஆளப்படுவோருக்கும் இடையே தொடர்பு இருக்க வழி வகை காண்பது போன்ற பல மாற்றங்கள் நிகழ்ந்தன. பிறகு மக்களின் பிரச்சினை பற்றிக் கவனிக்கும் சுற்றுச் சார்பும் உருவாயிற்று.

ஆட்சி முறையிலே மட்டுமல்ல—அர்ச்சகர் முறையிலேயும் திடுக்கிடத்தக்க பல மாற்றங்கள் தேவைப்பட்டன; இந்த மாற்றங்கள் இரத்தம் சிந்திப் பெறப்பட்டன.

ஒவ்வொரு மாற்றமும் ஏற்படும்போதும்—கழனியில் உழைப்பவனும்—கல் உடைப்பவனும்—உடலை வாட்டும் வேலை செய்து பிழைப்போனும் 'இனி நமக்கு நல்ல காலம் பிறக்கும்; தொல்லை குறையும்; நலன் கிடைக்கும்' என்று தான் எண்ணிக் கொண்டார்கள். ஆனால் நாட்டுக்கும் நாயகராக யார் வந்தாலும் -அரசாளும் முறையிலே என்னென்ன மாறுபாடுகள் ஏற்படினும்—ஏழையின் வாழ்விலே ஒரு புது மலர்ச்சி ஏற்படவில்லை! — ஏக்கம் அவன் தூக்கத்தைக் கெடுத்துதான் வந்தது; உழைப்பு அவன் உடலையும் உள்ளத்தையும் துளைக்கத்தான் செய்தது. அவன், பாதி மனிதனாகத்தான் இருந்தான்.

இருள் நீங்கவில்லை. சிற்சில சமயங்களில் இருளிலே ஒளிதரும் சம்பவம் தோன்றும். மறையும்; ஒளிதர வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் படைத்தவர் ஓரிருவர் முன்வருவர்; அவர்களால் இருளை அடியோடு விரட்ட முடியவில்லை; ஆனால் இருளிலே ஒளி விழச் செய்தனர்! 'ஒளி நிரம்பிய இடமானால் இன்பம் எத்தனை இருக்கும்" என்று மக்களை எண்ணிடச் செய்தனர்! அவர்களின் பணி மக்கள் வரலாற்றிலே மாண்புள்ள பகுதியாகும்.

## இராபர்ட் ஓவன்

இங்கிலாந்து நாட்டில் இது போல், இருளிலே ஒளி காட்ட முயன்ற இராபர்ட் ஓவன் என்பவரின் சீரிய முயற்சி, மக்கள் வரலாற்றிலே சிறப்பளிக்கும் பகுதியாகும்!

வேறு பல நாடுகளைப் போலவே இங்கிலாந்தும், மன்னர்களின் கோலாகலத்துக்கு உறைவிடமாகத்தான்

இருந்தது; ஆனால் அரசியல் முறைகளை மாற்றி யமைக்கும் உரிமைப் போரைத் திறம்பட நடத்தி வெற்றி கண்டனர்.

'மன்னர் என்றால் மக்களுக்காக ஆட்சி செய்யும் மகத்தான பொறுப்பைத் தாங்க நிற்கும் சின்னம்' என்ற கொள்கை உருவாகியது.

நாடு எக்கேடு கெட்டாலும் கவலைப்படாமல், அரண்மனையில் அட்டகாசம் செய்து வந்த மன்னர்கள்—அண்ணன் தலையை வெட்டி மணிமுடியைப் பறித்துக் கொண்ட முடிதாங்கிகள்—அகப்பட்ட அணங்குகளை அரண்மனைக்கு அழைத்துச் சென்று, அவள் அளிக்கும் இன்பத்தில் சுவை குறைந்ததும்—தலையைச் சீவிவிட்டு—வேறோர் தத்தையை நாடியவர்கள்—பிரபுக்களுடன் கூடிக் கொண்டு கொட்டமடித்தவர்கள்—அவர்களையும் பகைத்துக் கொண்டு உள் நாட்டுப் போர் நடத்தியவர்கள்—'மதத் தலைவர்களின் ஆசியே ஆட்சிக்கு அரண்' என எண்ணியவர்கள்—'எமக்கு அவர்கள் ஈடா' என்று எதிர்த்துக் கேட்டவர்கள்—காரணமற்ற போர் புரிந்தவர்கள்—தலைதெறிக்கத் தோற்றோடி வந்தவர்கள்—நல்லவர்கள்—கெட்டவர்கள்—நயவஞ்சகர்கள்—எனும் எல்லாவகை அரசர்களையும், பல்வேறு அரசமுறைகளையும் நாடு பார்த்தாகி விட்டது.

புயல் கிளம்பி, நச்சு மரங்களைச் சாய்த்தன; புதிய நச்சுச் செடிகள் முளைத்திடா வண்ணம், அரசியல் உழவு முறையில் புதிய மாற்றம் காண முயன்றனர்!

இந்த நிலையில் நாடு இருந்த போது, மக்களின் வாழ் விலே இருந்து வந்த இருளைப் போக்கும் சீரிய முயற்சியை **"இராபர்ட் ஓவன்"** செய்ய முற்பட்டார்!

இராபர்ட் ஓவன் 1771—ம் ஆண்டு பிறந்தார்; 87 ஆண்டு காலம் வாழ்ந்தார்; இருளில் ஒளி காட்டும் சீரிய முயற்சியில் ஈடுபட்டார்—தோற்றார்!

அந்தத் தோல்வி மக்கள் வரலாற்றிலே புதிய மாண்பு அளிக்கும் வலிவைத் தந்தது!

களத்திலே பெற்ற வெற்றிகளும்—மன்றங்களிலே அரசியல் நுட்பமறிந்தோர் பெற்ற வெற்றிகளும் சாதிக்க முடியா மாண்பினை, இராபர்ட் ஓவன் தன் தோல்வி மூலமே சாதித்தார்!

வெற்றி பெற்றிருந்தால் உலகமே புத்துருவம் கொண்டிருக்கும்!

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பாட்டாளி ஒரு கணம் புன்னகை புரிந்தான்! ஓவன் அளித்த ஒளி, அவன் மனதிலே புதுப்புது எண்ணம் தந்தது! அவனை அனைவரும் அடக்கப் பார்த்தனர்—அறிவுரை கூறினர்—பொறுமையின் அருமை பற்றிக் கூறினர்; இராபர்ட் ஓவன், அவர்களுக்கு மகிழ்வூட்டினார்—நம்பிக்கை எழச் செய்தார்.

ஒரு மன்னனின் தலையைச் சீவி—வேறோர் மன்னனை நாட்டை விட்டு விரட்டி—இங்கிலாந்து நாடு புயலைக் கிளப்பி—அரசாளும் முறையிலே இருந்து வந்த எதேச்சாதிகாரத்தை ஒழித்துக்கட்ட முனைந்தது; ஓரளவு வெற்றியும் பெற்றது; 'மக்களின் பிரதிநிதிகள் கூடிடும் மாமன்றம் வகுக்கும் முறைப்படி, மன்னன் அரசாளுவது' என்ற நிலை அமைக்கப்பட்டது! நாடு புதியதோர் பொலிவு பெற்றது! வெளிநாடுகளிலே, இங்கிலாந்தின் வணிகர்கள் பொருள் திரட்டினர்! இங்கிலாந்தின் கொடி தாங்கிய கலன்கள், எல்லாக் கடல்களிலும் பெருமிதமாகச் சென்றன!

உலகத்துக்குப் 'புது நாயகர்' என்ற கீர்த்தியைப் பெறுவதற்கான முயற்சியில், நாடு ஈடுபட்டிருந்தது; செல்வம் திரண்டது; பரம்பரைச் சீமான்கள் கிளம்பினர்—வியாபாரக் கோமான்கள் சூதாடியும், சுக போகத்துக்குச் செலவிட்டும் கடனாளியாகி விட்ட பழைய பிரபுக்களின் பண்ணைகளையும், மாளிகைகளையும் விலை கொடுத்து வாங்கிப் புது மெருகு பெற்றனர்! நாட்டின் தொழில் வளமும் பெருகிற்று! பாட்டாளி மட்டும் பழையபடி பெருமூச்செறிந்தபடிதான் இருந்தான்! புது முறை

அவனுடைய பழைய நோயைப் போக்கவில்லை! போக்காதது மட்டுமல்ல—நோய் வளரலாயிற்று!

தொழில் உலகப் புரட்சி நடைபெற்றது; செல்வம் திரட்டும் சீமான்கள் சிலரும்—அவர்களிடம் உழைத்து அலுக்கும் ஏழைமக்கள் ஏராளமாகவும் இருந்து வாடும் நிலை ஏற்பட்டது!

உள் நாட்டிலும், வெளி நாடுகளிலும் இங்கிலாந்துப் பொருள்கள்—சிறப்பாக பருத்தி ஆடைகள்—ஏற்றுமதி செய்யப்பட்டன; பல்வேறு நாடுகளிலே அமைக்கப் பட்டிருந்த வியாபாரக் கோட்டங்கள் மூலம் பெரும் பொருள் ஈட்டினர்—தொழிலதிபர்கள்; தொழிலாளர்களோ வறுமையில் வாடினர்!

தொழில்களில் இயந்திரக் கருவி பயன்பட்டதால், உற்பத்தியின் அளவு அதிகப்பட்டது; முதலாளிக்கு இலாபம் குவிந்தது. கைத் தொழிலின்போது தேவைப்பட்ட அளவு தொழிலாளர்கள் தேவைப்படவில்லை; கூலியும் மட்டம், வேலை முறையோ—தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிவதாகவே இருந்தது!

நாளெல்லாம் ஒரு தொழிலாளி—கைத் தொழில் மூலம் சில கருவிகளைப் பயன்படுத்தி 4880 ஊசிகள் செய்ய முடிந்தது; இயந்திரத் தொழில் முறையின் மூலம்— ஓர் இயந்திரத்தில் ஒரு நாளில் 1,45,000 ஊசிகள் தயாரிக்கப்பட்டன.

இந்த அளவு உற்பத்திக்காகக் கைத்தொழில் முறை மூலம் உற்பத்தி செய்வதானால், 125 தொழிலாளர்களைப் பயன்படுத்தி இருக்க வேண்டும். 125 தொழிலாளர்களுக்கும் கூலி தந்திருக்க வேண்டும்; ஆனால் ஓர் இயந்திரத்தை— சிலரைக் கொண்டு நடத்தச் செய்து, முதலாளி இலாபமடைகிறான்—செல்வம் வாழுகிறது! பரம்பரைப் பிரபு—இந்தப் பணப் பண்ணைச் சீமானிடம்—பயப்படக் கூடச் செய்கிறான்!

கைத் தொழில்முறை இருந்தபோது கருவிகளைத் திறம்படப் பயன்படுத்தும் ஆற்றல் உள்ளவர்களே தொழில் செய்ய முடிந்தது; பெண்களுக்கும் - குழந்தைகளுக்கும் குறைந்த கூலி கொடுத்தால் போதுமானதாக இருந்தது; எனவே, தொழில் அதிபர்கள், 'இது கொடுமை' என்று எண்ணாமல் குழந்தைகளைக் கடுமையாக வேலை வாங்கினர்; 'பெட்டியில் லாபம் சேர்ந்தால் போதும்' என்பதன்றி, வேறு அக்கறை அவர்களுக்கு இருக்க முடியும்?

நூல் நூற்கும் இயந்திரம்—நீராவி விசை இயந்திரம்—முருக்கேற்றும் இயந்திரம் போன்ற பல நூதனக் கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டு, தொழில் தரத்தையும்—உற்பத்திப் பெருக்கத்தையும் அதிகமாக்கினர்.

இந்த இயந்திரங்களைக் கண்டு பிடித்தவர்கள்—பெரும்பாலும்—ஏழையின் உலகினரே!

இலட்சக் கணக்கில் பணம் செலவிட்டு எந்தச் சீமானும் கண்டுபிடித்ததும் அல்ல!

பாட்டாளியின் உடலிலே கொட்டும் வியர்வை கண்டு கண்ணீர் சொரிந்தவர்கள். 'அவனுடைய சிரமத்தைக் குறைக்கக் கருவிகள் பயன் படாதா' என்ற நல்லெண்ணத்தினாலும், மொத்தத்தில், 'உற்பத்தி பெருகிச் செல்வம் வளர்ந்தால் பாடுபடுபவனுக்கு நலம் கிடைக்கும் என்ற நோக்குடனும், இயந்திரங்களைக் கண்டு பிடித்தனர்; ஆனால் அதனைக் கொண்டு பாட்டாளிகளை மேலும் கசக்கவே முதலாளிகள் முனைந்தனர்!

படிப்பு இல்லை! ஏழைக் குடும்பம்; பதின்மூன்று குழந்தைகள் உள்ள குடும்பம்; அதிலே பிறந்த ரிக்கார்டு ஆக்ரைட் கண்டுபிடித்து தான் நூட்பு இயந்திரம்!

கையால் நூற்பதைவிட, நேர்த்தியாகவும்—அதிக அளவிலும் நூற்கக் கூடிய இயந்திரம்!

கைத் தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பாட்டாளியின் வியர்வையைக் கண்டு, ஆக்ரைட் மனம்

வேதனைப்பட்டது; 'அவர்களின் துயரைக் களைய வேண்டும்' என்ற எண்ணம் உதித்தது; அவனுக்கு ஓர் ஆராய்ச்சிக் கூடம் கிடையாது—அறிவு தரும் ஏடுகள் கிடையாது. அவன் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டதே—அய்ம்பது வயதான பிறகு தானாம்.

அவன் தொழில், தலைமயிர் வாங்குவது—சாயம் போடுவது—அதைத் தலைக்குச் சவுரிகளாக்கி விற்பது—இவைகள் தான்!

வறுமைதான் தோழன்! மனைவியோ — கடிந்துரைப் பாள்! அவன் மனமோ — 'நூற்பவர்களின் கஷ்டத்தைப் போக்கி, உற்பத்தியின் அளவைப் பெருக்கவல்ல ஒரு நூதன முறையைக் கண்டுபிடிக்கவேண்டும்' என்பதிலேயே சென்றது!

விதவிதமான பொம்மை இயந்திரங்கள் செய்வானாம்! வறுமையால் வாடிய மனைவி, இந்த வீண் வேலை செய்யும் கணவனிடம் சண்டையிடுவாளாம்! பொம்மைகளை உடைத்தெறிவாளாம்!

கந்தல் உடை! கண்கள், ஏதோ ஒரு வித பித்தம் அவனுக்கு இருப்பதைக் காட்டிற்று! கடைசியில் அவன் இயந்திரத்தைக் கண்டுபிடித்தான்.

(திராவிட நாடு இதழில் அண்ணா எழுதியது)

# 25. ஐக்கியம் பற்றி அண்ணா

**உ**லக அரங்கில் மிக முக்கியமானதாகவும், பலருடைய மனதை மருட்டக் கூடியதாகவும், தொழிலாளர் பிரச்சினை வளர்ந்துவிட்டது. நீதியையும் நேர்மையையும் சமுதாயத்தில் அமைதியையும் சுபிட்சத்தையும் விரும்பும் எவரும், தொழிலாளர் பிரச்சினைகளை அலட்சியப் படுத்திடவோ அல்லது அடக்கு முறையால் அழித்து விடக் கூடுமென்றோ எண்ண முடியாது. பிரச்சினை நாளுக்கு நாள் வலுத்துக் கொண்டும், புதுப்புது உருவங்களைக்

காட்டிக் கொண்டும் இருக்குமே ஒழிய, தானாக மங்கி விடவும் செய்யாது; தாக்குதலால் தகர்ந்தும் போய் விடாது, பொது அறிவும் சனநாயக உணர்ச்சியும் வளர வளர, பிரச்சினை பலம் பெற்றுக் கொண்டுதான் வரும். எனவே தொழிலாளர் ஸ்தாபனத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டியது பொறுப்புள்ள யாருக்கும் அவசியமானதாகி விட்டது. ஸ்தாபன ரீதியாக பிரச்சினைகளைக் கவனித்து முடிவு செய்யும் எண்ணமும் ஏற்படும் என்பதோடு இப்போது எங்கும் அது பரவி விட்டது. எந்த ஸ்தாபனமும் ஒற்றுமை உணர்வைக் கொண்டதாக இருந்தால் மட்டுமே, வலிவுடன் விளங்கும்; பயன் விளையும். ஆகவே ஸ்தாபன ஐக்கியத்தை கவனித்தாக வேண்டும்.

ஸ்தாபனம்-அதாவது அமைப்பு பலருடைய எண்ணங்களைத் திரட்டி, பலருடைய சக்திகளை ஒருங்கு சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு பொது இடம்—ஒரு பாசறை. பாசறையிலே பலவிதமான போர்க் கருவிகளும் வீரர்களும் தேவை—கருவிகளின் எண்ணிக்கையும் வகையும் வளர்ந்து கொண்டு இருக்க வேண்டும். பாசறையின் உபயோகம் அதிகப்பட வேண்டுமானால் வாளை மட்டும் மலையெனக் குவித்து வைத்துக்கொண்டு, கேடயம் தேடாமல் இருப்பதோ, வில்லினைக் குன்றென குவித்துக் கொண்டு அம்புகள் இல்லாமலிருப்பதோ, துப்பாக்கிகளைக் கிடங்கில் குவித்து வைத்துக்கண்டு வெடி மருந்து போடாமலிருந்து விடுவதோ, இவை யாவும் ஒழுங்காகவும், தேவைக்கேற்ற அளவும் இருந்து, இவைகளைத் திறம் பட உபயோகிக்கும் ஆற்றல் உள்ள வீரர்கள் இல்லாம லிருப்பதோ, வீரர்கள் இருந்தும், இவர்களை நடத்திச் செல்லும் படைத்தலைவன் இல்லாதிருந்தாலோ, பாசறை இருந்து என்ன பயன்? அழகிய சிலை போல் இருக்குமே தவிர பயன் தரும் மனிதனாக இருக்க முடியாது.

ஸ்தாபனம், ஒரு சில குறிப்பிட்ட கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு கட்டப்படுகிறது. ஸ்தாபனம்

கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு கட்டப்படுகின்ற போது, அந்த ஸ்தாபனம் ஆற்றல் பெறுவதைப் பொறுத்தே அதனுடைய வளர்ச்சி இருக்கிறது. கொள்கைகள் ஏற்படுவதே, உள்ள குறைகளை தீர்த்து வைப்பதற்கேற்ப நிலைமைகளை மாற்றியமைப்பதற்கோ, புதியதோர் நலனைக் காண்பதற்கோதான். தொழிலாளர் களின் ஸ்தாபனம் சில அடிப்படைக் கொள்கைகளின் மீது கட்டப்பட்டிருக்கிறது என்றால், தொழிலாளர்களின் சில பல குறைபாடுகளை நீக்கிக் கொள்வதற்குத்தான்.

பதினெட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு, தொழில் முறை மாறிவிட்டது. உலகிலே, அதற்கு முன்பு எந்த நாட்டிலும் குடிசைத் தொழில் முறையும், தேவைக்காக மட்டும் பொருளை உற்பத்தி செய்து கொள்வது மட்டுமே இருந்து வந்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் போது, குடிசைத் தொழில் முறை மாறி, தொழிற்புரட்சி ஏற்பட்டு, இயந்திரத்தொழில் முறையும், ஒரு சிலர் பலரை வேலைக்கமர்த்தித் தொழில் நடத்தி, உற்பத்தியைப் பெருக்கி, பண்டங்களை விற்று, இலாபம் பெறுவதுமான முறை வளர்ந்ததும், இதனால் ஓரிடத்தில் ஏராளமானவர் கூடித் தொழில் செய்வதுமான முறையும், அந்தத் தொழிலில் தங்களுக்குக் கிடைக்கும் கூலி போக மீதமிருக்கும் இலாபப் பகுதி வேறிடம் போவதும், தொழிலாளர்களுக்கு விளங்கலாயிற்று. இந்த விழிப்புணர்ச்சி ஏற்பட்டதும், தொழிலாளர்கள் முதலில் தங்களின் விதி, வினை முதலாளிகளின் புண்ணியம், ஆகியவற்றைப் பற்றி எண்ணி, தங்கள் மனதிற்கு ஆறுதலைத் தேடிக் கொண்டதுடன், தாங்களும் பயபக்தியோடு நடந்து வந்தால், ஆண்டவனின் அருள் கிடைக்கும் என்று நம்பிக் கொண்டிருந்தனர். சிலர் காய்ந்த வயிற்றை வைத்துக் கொண்டு கடமையுணர்ச்சியுடன் பாடுபடுவதையும் எடுத்துக்காட்டி, தொழில் அமைத்தவர்களின் நல்லுணர்ச்சிக்கும், தயாள குணத்திற்கும் மனுப்போட்டு,

அதனால் தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ள முயன்றனர். இந்த முறை நெடுநாட்களுக்குப் பயன் தரவில்லை. சிலருடைய தயாள குணத்தினால், ஒரு பெரிய கூட்டத்தில் வளர்ந்து வரும் தொல்லைகளைப் போக்கிவிட முடியாது. இதனால் தொழிலாளர்களின் வாழ்க்கையிலேயும், குறிப்பிடத்தக்க வளம் உண்டாகவில்லை. வறுமைத்தேள் கொட்டலாயிற்று. அப்போது தொழில் முறை மாறி பண்ட உற்பத்தி அதிகரித்தது. செல்வம் கொழித்ததால் வாழ்க்கை வசதிகள் அதிகமாகி நாகரிகம் மேலோங்கி விட்டது. நாகரிகத்தின் முழுப்பயனை ஒரு சிலர் அடைய, அந்த நாகரிகத்தின் அடிப்படைக்கு அரணாக அமைந்திருந்த பெரும்பாலானவர்கள், அந்த நாகரிகத்தின் பயனை அனுபவிக்காமலிருந்த போது அவர்கள் மனதிலே ஓர் அதிர்ச்சி-ஒரு குமுறல் ஏற்பட்டது.

தங்கள் நிலை மோசமாகிற நேரத்திலே, தங்கள் உழைப்பின் விளைவாக ஏற்பட்ட வாழ்க்கை வசதிகளில் துளியும் தங்களுக்குக் கிடைக்காதது, அவர்கள் மனதிலே ஓர் அணைக்க முடியாத தீயை உண்டாக்கிற்று. சேகரித்த தேனை இழந்துவிடும் வண்டுகளாகத் தமது வாழ்க்கை இருப்பதை அறிந்தனர். குறைபாடுகளைப் பற்றி ஒருவருக்கொருவர் பேசினர். ஒவ்வொரு நாளும் பேசினர்; கூடிக்கூடிப் பேசினர்.

என்னதான் இதற்குப் பரிகாரம்?

பொறுத்திருந்து பார்ப்போம். அவர் மனம் இளகாமலா போகும்?

ஆண்டவன் அருள் கிடைக்க வேண்டும்.

அவர் நம்மைக் கைவிடமாட்டார்.

என்று துவக்கப்பட்ட உரையாடல், கொஞ்ச காலத்தில்,

எத்தனை முறை கேட்பது?

எவ்வளவு கெஞ்சிக் கேட்பது?

ஏழைக்கு இரங்காதவனும் ஒரு மனிதனா?
அவன் மனம் கல்லா இரும்பா?
கொஞ்சமாவது ஈவு இரக்கம் இருக்காதா?

என்று மாறி

இப்போது முடியாதாம்!
இலாபம் இல்லையாம் முன்போல்.

என்று பேச்சு மறுபடியும் மாறி,

நமது உழைப்பினால் கொழுத்தான்;
இலாபம் மலைபோலக் குவிந்திருக்கிறது;
நாம் வாடுகிறோம் வறுமையால்; அவன்
அரச போகத்தில் இருக்கிறான்;
நமது உழைப்பு தரும் இலாபத்தால் தானே
அவனுடைய நிலை கோடீஸ்வரன்
என்று கூறும்படி இருக்கிறது.

என்று பேச்சு கொஞ்சம் முடுக்காகி விட்டது.

கந்தன் கேட்டானாம் கால் ரூபாயாவது அதிகம் தேவை. கூலியைக் கொஞ்சம் உயர்த்துங்கள் என்று; முடியாது என்று சொல்லி விட்டாராம்.

முத்தன் பேசச் சென்றானாம். முகத்தைக் கடுப்பாக வைத்துக் கொண்டு, 'எதுவும் முடியாது போ' என்று சொன்னாராம்.

முனியன் உள்ளே நுழைந்த போது, நாயை அவன் மீது ஏவினார்களாம் என்று உரையாடல் வளர்ந்து கடைசியில் கந்தனும், முத்தனும், முனியனும், காத்தனும், இப்படி நாம் தனித்தனியே, நமது குறைகளை எடுத்துக் கூறிப் பரிகாரம் தேடிப் பயனில்லை; தனித்தனியே போய்ப் பேசியும் பயனில்லை. மொத்தத்திலே பரிகாரம் தேடவேண்டும். அதுதான் சரியான வழி என்று முடிவு செய்தனர்; ஸ்தாபனங்கள் தோன்றின.

இந்த முடிவுக்குத் தொழிலாளர்கள் வந்து சேர ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் பிடித்தது.

ஆகவே, குறைகளை உணர்ந்து, அவைகளுக்குக் காரணம் யாவை என்பது பற்றிய விவாதத்தில் ஈடுபட்டு, உண்மைக் காரணத்தைக் கண்டு பிடித்து, பிறகு அவைகளைப் போக்கிக் கொள்ள, தனித்தனியே முயற்சித்துப் பார்த்து, முடியாது போன பிறகு தொழிலாளர்கள் ஒரு ஸ்தாபன ரீதியாகத் தமது குறைகளை எடுத்துக் கூறித்தான் பரிகாரம் தேடவேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். தங்களின் வாழ்க்கை முறையும், தொழில் முறையும், தங்களுக்குள்ள வாழ்க்கை வசதிக் குறைவுகளும், எல்லாத் தொழிலாளருக்கும் ஒரே விதமாக இருக்கக் கண்டு, அவைகளுக்கும் உள்ளது ஒரே வகையான வியாதி என்று தெரிவதால், அனைவரும் ஒரே வகை மருந்து தேடவேண்டும் என்று முடிவு செய்து, ஸ்தாபனங்களை ஏற்படுத்தினர். இந்தப் பொதுத்தன்மை கெடாதிருக்க ஸ்தாபனம் அவசியமானது என்பது மட்டுமல்ல, பயனுள்ளதுமாகும். எனவே ஸ்தாபன ஐக்கியம் இந்தப் பொது உணர்ச்சி கெடாதபடி பாதுகாத்துக் கொண்டால் தான் முடியும். கந்தன் முருகனுக்கும் சேர்த்துத்தான் நியாயம் கோருகிறான். முத்தன் மூவருக்கும் சேர்த்தே நீதி கேட்கிறான். ஒவ்வொருவரும் மற்ற யாவருக்கும் சேர்த்தே நியாயம் கேட்கிறார்கள். ஸ்தாபனத்தின் முக்கிய இலட்சணம் இதைப் பொறுத்தே இருக்கிறது. ஸ்தாபனத்தின் மூலம் அதைச் சேர்ந்தவர்கள் அனைவருக்கும் நலன் கிடைக்கிறது என்பது விளக்கமானால்தான், ஸ்தாபனத்திலே ஐக்கிய உணர்ச்சி இருக்கமுடியும். கந்தனுக்குத் தெரியாமல் முருகனும், முருகன் அறியா வண்ணம் முத்தனும், தனித்தனியே நடவடிக்கையை எடுத்தால், ஸ்தாபனம் உடைந்து விடும். பொதுத்தன்மை தான் ஸ்தாபனத்துக்கு அரண்.

இந்தப் பொதுத்தன்மை பலமாக இருக்க வேண்டுமானால், ஸ்தாபனம் மிக மிக நியாயமான கொள்கைகளின் மீது கட்டப்பட வேண்டும்.

குடும்பம் முதற்கொண்டு கோலோச்சும் சர்க்கார் வரையிலே, ஸ்தாபனங்கள்தான்—ஒருவகைப் பொதுத் தன்மை—பொதுவாக பணிகள்—அனைவரையும் கட்டுப் படுத்தும் பொதுவான பொறுப்புகள், பலன்கள் இவைகளில் உண்டு. இதிலே ஏது கெடினும் ஸ்தாபனத்தின் ஐக்கியம் நிச்சயம் கெட்டுவிடும்—அண்ணன் அறியாதபடி தம்பி செலவிடும் பத்து ரூபாய்—அண்ணன் தம்பி என்ற பாசத்தால், சில நாட்களுக்குக் குடும்பத்தை எவ்விதத்திலும் பாதிக்காமலிருக்கும்—ஆனால் சில காலத்துக்குத்தான்—எப்போதுமல்ல. தம்பியின் பழக்கமே அண்ணன் அறியா வண்ணம் தன்னலத்துக்காக நடந்து கொள்வது என்றாகி விட்டால், குடும்பக் கட்டுப்பாட்டை நிலை நிறுத்த, எத்தனை விதமான பந்த பாசம் பேசியும், பழைய கதைகளைச் சொல்லியும், இராமனையும் இலட்சுமணனை யும் துணைக்கு அழைத்தும் முடியாததாகி விடும்—குடும்பம் பிளவுறும்; பிரியும்—அண்ணன் தம்பிக்குள்ளாக ஒரு குடும்பத்திலேயே இந்த நிலையென்றால், ஒரு ஸ்தாபனத்தின் தலைவருக்கும் துணைத் தலைவருக்கும், ஸ்தாபனத்தின் மற்ற ஐக்கிய உறுப்பினர்களுக்குமிடையே கடைசி வரையில் பாசம் ஒன்றை மட்டும் கொண்டு, அன்பு உண்டாக்கி ஸ்தாபனத்தை உடையாதபடி பார்த்துக் கொள்ள முடியாது. அமைப்புகளின் ஒற்றுமை அதனைச் சார்ந்தவர் அனைவரும் ஒரே நோக்கம் கொண்டு ஒரே வகையாகக் குறிப்பிட்ட கொள்கைக்காகப் பாடுபடுபவர் என்பதைத்தான் பொறுத்திருக்கிறது. இந்த ஒற்றுமையும், போலியானதாக இருக்கக் கூடாது. இருப்பின், மிக மிக சாதாரணச் சங்கமும் ஸ்தாபனத்துக்குப் பெரியதோர் இடையூறாகி விடும்.

ஸ்தாபனம் ஏற்படச் செய்வதற்குக் கொள்கைகள் தேவை என்பது, கட்டடம் கட்டுவதற்கு அதற்குரிய சாமான்கள் தேவை என்பது போன்றது. கட்டடம் அமைக்கும் கடினமான காரியத்திற்கு, அதற்கான திறமை

வாய்ந்த கட்டடக்காரர் தேவைப்படுவது போலச் சில குறிப்பிட்ட கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு ஸ்தாபனத்தை அமைக்கத் திறமையும் உறுதியும் கொண்ட அமைப்பாளர் தேவை. அந்த அமைப்பாளருக்கு நாம் எந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொள்வது என்று கண்டறியும் திறனும், கட்டுக்கோப்பு முறையிலே ஸ்தாபனம் இருக்க வேண்டும் என்ற நோக்கமும் நிச்சயமாகத் தேவை. வலிவுள்ள இரும்பு கர்டர்களும் வகை வகையான மரச்சாமான்களும், உயர்ந்த ரக சிமிட்டியும், அழகான பித்தளைக் குமிழ்களும், அரைத்தெடுத்த சுண்ணாம்புக் குழையலும் தேவை. ஆனால் இவைகளை எங்கெங்கு, எந்தெந்த முறையில் உபயோகித்தால் கட்டடத்தின் கட்டுக் கோப்பு சிறந்த முறையிலும் இருக்கும் என்பதை அறிந்து அமைக்கும் அமைப்பாளர்கள் தேவை—கட்டுக் கோப்பு கெடாதபடி பார்த்துக் கொள்ளும் திறம் அவர்களுக்கு இருக்க வேண்டும்—அக்கறையும் இருக்க வேண்டும்.

பெரியதோர் மாளிகையில், ஒரு சிறிய ஜன்னல் அவ்வளவு முக்கியமானதல்ல—அந்த ஜன்னல் இல்லாமற் போனாலும், மாளிகை இருக்கத்தான் செய்யும். அடிப் படையும் குறுக்குச் சுவரும், மேல் அமைப்பும் சரியாக இருக்குமட்டும், ஜன்னல் இருந்தாலும், எடுபட்டாலும், கெட்டாலும், மாளிகைக்கு ஒரு சேதமுமில்லை. ஆனாலும் மாளிகையிலே அக்கறை உள்ளவர்கள் அந்தச் சிறு ஜன்னலைக் கூடத்தான் கவனித்துக் கொள்வார்கள்—கெடாதபடி. ஜன்னலை மட்டுமல்ல, அதன் கம்பிகளிலே ஒன்று கெட்டாலும், கவலைப்படுவர். ஏனெனில், ஜன்னலின் கம்பி கெட்டு, பிறகு அது எடுபட்டு, அதன் பலனாக ஜன்னல் கெட்டு, கள்ளனோ காற்று மழையோ உள்ளே புகுந்து, அதன் விளைவாக மாளிகைக்கு கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டு விடக்கூடுமே என்ற யூகம், மாளிகைக் காரருக்கு இருக்கும். எனவே அவர் ஜன்னலின் கம்பி மாளிகையின் அடிப்படை அல்ல என்ற போதிலும்,

அதனையும் அக்கறையுடன் கவனித்துக் கொள்வர். ஸ்தாபனங்களிலும் இது போலத்தான், தொழிற் ஸ்தாபனங்களின் ஐக்கியமும் பலமும் கெடாதிருக்க வேண்டுமானால், ஜன்னல் கம்பியையும் ஜாக்கிரதையுடன் கவனிக்கும் மாளிகைக்காரர் போல, ஸ்தாபனத்தின் சகல உறுப்பினரையும் கவனித்து, கட்டுக்கோப்பு கெடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த முறையைக் கவனியாததால் தொழிலாளர் ஸ்தாபனங்களிலே, ஒற்றுமைக் குறைவு ஏற்பட்டுச் சிதறி விட்டதுண்டு. பெரிய மரங்களை மாளிகை மண்டபத்துக்குத் தூண்களாக அமைத்து விட்டால் மட்டும் போதாது. மிக மிகச் சாதாரண செல், மரத்திலே சிறு துளைகளிலே புகுந்து கொள்ளாதபடியும் பார்த்துக் கொள்ளவேண்டும். செல் அரிக்க ஆரம்பித்தால், செம்மரமும் சரி, எம்மரமும் சரி, கெடும்—அதனுடன் ஸ்தாபனமும் கெடும். தாங்கும் சக்தி, தாக்கும் சக்தி இரண்டும் ஒரு சேர ஸ்தாபனத்துக்குத் தேவை. அதற்கேற்ற வகையிலே அந்த அமைப்பு இருக்க வேண்டும். இருக்க வேண்டுமானால், இருவகை சக்திகளைத் திரட்டவும், திரட்டியதை உபயோகிக்கவும், ஏற்ற தகுதி படைத்தவர்கள் ஸ்தாபனத்திலே இருக்க வேண்டும்; ஒருவர் இருப்பது மற்றவருக்கு வலிவு என்ற எண்ணம் குன்றாது, குறையாது இருக்க வேண்டும். அந்த எண்ணத்தாலே ஸ்தாபனத்தின் ஐக்கியத்தைக் குன்றாது காப்பாற்ற முடியும். கொள்கைகள் நிலைமைகளால் மாற்ற மடையும்போது, ஸ்தாபன ஐக்கியத்துக்கு ஆபத்து நேரிடக் கூடும். அது போலவே ஸ்தாபனத்தில் நடைமுறையில், யார் எதைச் செய்வது, எது எப்படி செய்யப்பட வேண்டும், என்ற பிரச்னைகள் கிளப்பி, அதன் பயனாக ஸ்தாபன ஐக்கியம் கெடுவதுண்டு. ஆனால் அடிப்படை பலமாக இருந்தால் மாளிகைக் கேடாதிருப்பது போல், கொள்கை பலமிருந்தால் ஸ்தாபனம் கெடாது. ஆனால் அதற்காக ஸ்தாபனத்தின் ஐக்கியம் கெட்டுவிடத்தக்க நிலைமைகள்

ஏற்படும்போது அக்கறையற்று இருந்துவிடவும் கூடாது. தொழிலாளர் ஸ்தாபனம், மனக் குறையின் மீதும், அதனால் ஏற்படக்கூடிய ஆத்திரத்தின் மீதும் ஏற்பட்டு விடுவதுண்டு. இவை சரியான அடிப்படை அல்ல; வாழ்வதற்கு உழைக்கிறோம் — ஆனால், வாழ்வு இல்லை. உழைக்காது வாழ்கிறார்கள் — அந்த வாழ்வுக்கு — தங்கு தடை இல்லை — "வாழ்வோம் — அனைவரும் வாழ உழைப்போம். ஒருவர் உழைப்பின் மீது மற்றொருவரின் வாழ்வு அமைக்கப்படும். அநீதியை ஒழிப்போம்" என்ற அடிப்படைகளின் மீது கட்டப்பட்டுள்ள தொழில் ஸ்தாபனங்கள், அந்த உன்னதமான இலட்சியம் ஈடேற வேண்டும், என்ற பெரு நோக்கத்தை உறுதுணையாகக் கொண்டு, ஸ்தாபனத்தின் நடைமுறை வேலையில், உறுப்பினர்களுக்குள் உள்ளக் கொதிப்போ, கசப்போ ஏற்படாத வகையிலும், இன்னார் செய்கின்ற காரியம் இன்னாருக்குச் சரி என்று படவில்லை என்ற நிலை ஏற்படாத வகையிலும், ஸ்தாபனத்தின் வேலைகளில் அவரவர்களுக்கு அவரவர் ஆற்றலுக்கேற்ற, ஆனால் ஸ்தாபனத்தின் மூலக்கொள்கைக்கு ஊறு நேரிடாத முறையில், ஸ்தாபன ஐக்கியம் கெடாது உழைத்தால் பலனும் நிச்சயம் விளையும். ஸ்தாபனத்தின் பலம் வளரும்போது ஏற்படும் அல்லல் அதிகம். ஸ்தாபனம் வளரும் போது இருக்கும் ஸ்தாபன ஐக்கியம், ஸ்தாபனம் நன்றாக வளர்ந்த பிறகு, ஓரளவு ஆபத்துக்குள் சிக்கிவிடக் கூடும்-வளர்ந்துள்ள பலத்தைக் கொண்டு என்ன செய்வது? எவ்விதம் அதைச் செய்வது? யாரைக் கொண்டு அதைச் செய்வது? எப்போது செய்வது? என்ற பிரச்சினைகள் ஸ்தாபனம் வளர்ந்த பிறகு ஏற்படும். ஐக்கியத்துக்கு ஆபத்து எதனால் வரக்கூடும், அந்த நெருக்கடியான நேரத்தி லெல்லாம் ஸ்தாபனத்தின் மூலக் கருத்துக்கே முதலிடம் தரப்பட வேண்டும்; அப்போதுதான் ஸ்தாபனம் சிதையாமல் இருக்கும். ஸ்தாபன ஐக்கியம் ஒருமுறை பாடுபட்டுச் சாதித்துவிட்டு, அதைக் கண்டு சந்தோஷப்

பட்டுக்கொண்டு, இனிக் கவலை இல்லை என்று இருந்து விடக் கூடிய சம்பவமல்ல—எப்போதும் விழிப்போடு இருந்து கொண்டு, அவ்வப்போது பழுது பார்த்துக் கொண்டு எந்தச் சமயத்திலும் மூலக்கருத்து கெடாதபடியும் கவனித்துக்கொண்டு இருந்தால் மட்டுமே காப்பாற்றக் கூடிய ஓர் அற்புத ஜீவசக்தி, ஸ்தாபனத்தின் பலமும் பயனும், அந்த ஐக்கியம்—ஒற்றுமை உணர்ச்சியைப் பொறுத்தே இருக்கிறது. வீணை உயர் தரமானதுதான்; வித்வானும் தேர்ந்தவர்தான். ஆனால் ஒரு நரம்பு மட்டும் ஓரிடத்தில் தளர்ந்து இருக்கிறது என்றால், வீணையின் நாதமும் கெடும்; வித்வானின் இசையும் பாழ்படும். ஸ்தாபனத்தின் ஐக்கியம் சங்கீதத்துக்கு உள்ள சுருதி மானத்தைப் போன்றது—மிகமிக ஜாக்கிரதையாகக் கவனிக்கப்படவேண்டிய விஷயம்.

## 26. நாடு வாழ்ந்திட - பொது நலம் மலர்ந்திடத் தொண்டாற்ற வாரீர்!

நான் முதல்வர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பது, தமிழ்நாட்டில்-வழிவழி வந்த வல்லவர்களும், வித்தகர்களும் நிரம்பிய தமிழ் நாட்டில்—காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை போன்ற ஆறுகளும், அருவிகளும் பண் பாடி வளமளித்திடும் தமிழ் நாட்டில்—ஆயிரம் தொழில்களில் ஈடுபட்டு நாட்டுக்குச் செல்வத்தை ஈட்டித்தரும் பாட்டாளிகள் நிரம்பிய தமிழ் நாட்டில்—பாட்டு மொழியாம் தமிழ் மொழியுடன் இழைந்துள்ள பண்பாடு சிறந்திடும் தமிழ் நாட்டில்—'பாருக்குள்ளே நல்ல நாடு' என்று பாவலர் கொண்டாடிடும் தமிழ் நாட்டில்—அதனை எண்ண எண்ண இனிக்கிறது; ஆனால்...ஆமாம்; அந்தக் கவலை தந்திடும் சொல் வரத்தான் செய்கிறது! 'எத்தனை எத்தனை சிக்கலுள்ள பிரச்சினைகள் மலிந்துள்ள தமிழ்நாடு' என்பதனை எண்ணும் போது கவலை ஏற்படுகிறது!

"இந்தப் பிரச்சினைகளைச் சிந்திக்கவும், சிக்கல் களைத் தீர்க்கவும் போதுமான உறுதியும் திறமையும் துணையும் தோழமையும் தொடர்ந்து கிடைத்திட வேண்டுமே" என்பதனை எண்ணும்போது, 'நீங்கள் உடனிருக்கிறீர்கள்' என்ற நினைவுதான் கவலையை ஓட்டுகிறது—கடமையைச் செய்வோம் என்ற உறுதியைத் தருகிறது!

அரசு நடத்திட ஆயிரமாயிரம் திறமைமிகு அறிவாளர்கள் பணியாற்றினால் மட்டும் போதாது; ஆட்சி, உண்மையில் செம்மையானதாக அமைந்திட வேண்டு மென்றால், வயலில்—தொழிற்சாலையில்—அங்காடியில்—பணிபுரிந்திடும் உற்பத்தியாளர்கள், உழைப்பாளர்கள் அனைவரும், "ஆட்சி நடத்திடுவோர் நாமே" என்ற உணர்வுடன் தத்தமது கடமையினைச் செய்ய வேண்டும்.

கற்றறிவாளர்—எம்மை நல்வழி நடத்திச் செல்ல வேண்டும்; இதழ் நடத்துவோர்—உடனிருந்து முறை கூறிட வேண்டும்; இவர் யாவரும் சேர்ந்து நடத்திடுவதே அரசு—நாங்கள் உங்களால் அமர்த்தப்பட்டவர்கள்.

வயல்களிலே கதிர் குலுங்கிடின்—அரசு அலுவலகங் களில் மகிழ்ச்சி துள்ளும்!

தொழிற்சாலைகளிலே தோழமை மலர்ந்து, நீதியும், நிம்மதியும் கிடைத்து, உற்பத்தி பெருகிடின்—நாட்டு நிலை உயர்ந்திடும்!

அங்காடியிலுள்ளோர், 'கொள்வன—கொடுப்பன என்பவை நேர்மையின் அடிப்படையில் அமைந்திருத்தல் வேண்டும்" என்று இருந்திடின்—அகவிலையும், பதுக்கலும் அழிந்துபடும்! பொதுமக்கள் வாழ்வு சீர்படும்.

"நாட்டின் நிலை உயர்ந்திடப் பணியாற்றிடவே நாம்" என்ற உணர்வுடன் மாணவ மணிகள் கல்விக்கூடங்களில் பயிற்சி பெற்றிடின்—நாடு மேம்பாடு அடையும்.

இவை எல்லாவற்றின் கூட்டே ஆட்சி! சில மண்டபங்களில் மட்டுமே செயல்படுகின்ற காரியமல்ல ஆட்சி!

நாட்டு ஆட்சி வீட்டுக்கு வீடு காணப்படும் பண்பைப் பொறுத்து இருக்கின்றது!

இல்லாமை, பேதமை நீக்கப்பட்டு—வலியோர் எளியோரை வாட்டிடும் கொடுமை ஒழிக்கப்பட்டு—எல்லோருக்கும் ஏற்றம்—இன்பம்—உறுதியளிக்கப்பட்டு—"நாடு பூக்காடாய் திகழ்ந்திட வேண்டும்" என்ற ஆசையால் உந்தப்பட்டு "இந்த நிலை பெறுவதற்கான பணியில் ஒரு சிறு பகுதியையேனும் நாம் செய்து முடிக்க வேண்டும்" என்ற ஆவலுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளேன்.

முன்பு தரிசாகக் கிடந்த இடத்தை விளை நிலமாக்கிட வியர்வை சிந்துவோர்—குறை அளவு இயங்கி வந்த இயந்திரத் தொழிற்சாலையை, முழு அளவு இயங்கிடச் செய்யப் பாடுபடுவோர்—மக்களின் வசதிப் பெருக்கத்துக்காக உற்பத்தி, வினியோகம் ஆகியவற்றில் ஈடுபட்டு—அதனை நேர்மையான முறையில் நடத்திடு வோர்—இவர்களெல்லாம் என் நண்பர்கள்! என் வணக்கத்துக்குரியவர்கள்!

உற்பத்தித் துறைக்கு முட்டுக்கட்டை இடுவோர்—உற் பத்திக்காகப் பாடுபடுவோரின் வயிற்றில் அடிப்போர்—இவர்கள் எனக்கு மட்டுமன்று—சமூகத்துக்கே பகைவர்கள்!

விலையை ஏற்றி விடுவோர்—விளைந்ததைப் பதுக்கிக் கொள்வோர்—நாட்டை நாசமாக்கும் நடமாடும் நோய்கள்!

ஊழல்—ஊதாரித்தனம், இலஞ்ச—லாவண்யம் ஆகிய கேடுகளைச் செய்வோர்—நாட்டின் அவமானச் சின்னங்கள்!

நண்பர்களே! நாட்டின் பகைவர்கள்—சமூக விரோதிகள் ஆகியோரிடமிருந்து நாட்டைக் காத்திட வேண்டிய பொறுப்பும், கடமையும் நமக்கு இருக்கிறது!

கேடு களைத்திட—நாடு வாழ்ந்திட—சுயநலம் மடிந்திட—பொதுநலம் மலர்ந்திட—தொண்டாற்றுவோம் வாரீர்! வாரீர்!" என்று அழைக்கிறேன்.

**(15–3–1968 அன்று வானொலியில் ஆற்றிய உரை)**

# 27. நம் - இந்தியத் தொழிலாளியின் நிலை

உலகில் பல்வேறு நாடுகளில் வாழும் மக்கள். நம்மை விடக் குறைவாகவே உழைக்கின்றார்கள்; ஆனாலும், நம்மைவிட வசதியான நல்வாழ்வைப் பெற்றிருக்கிறார்கள்; ஏன் அப்படி?

இங்கிலாந்தில் உள்ள ஒரு தொழிலாளிக்குக் குடியிருக்க சுகாதாரமான வீடு கிடைக்கிறது; அந்த வீட்டில் ஓய்வாக இருக்கும்போது "உலகம் என்ன சொல்கிறது" என்பதைக் கேட்க ரேடியோவும், படித்து அறிய பத்திரிக்கைகளும் இருக்கின்றன!

இரஷ்யாவில் உள்ள ஒரு தொழிலாளியின் மனைவி கற்பிணியானால், குழந்தை பிரசவிப்பதற்கு மூன்று மாதம் முன்பிருந்தே — பிரசவித்து மூன்று மாதம் வரை — சர்க்கார் செலவிலேயே மருத்துவ வசதிகள் செய்து தரப்படுகின்றன!

இப்படி ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் வாழ்க்கை வசதிகள் கிடைக்கும்போது, நம் நாட்டு மக்களுக்கு இது கிடைக்காது போவானேன்?

'நம் நாட்டு மக்கள்தான் மிகக் கடினமாக உழைப்பவர்கள்' என்று சொன்னேனல்லவா? அப்படி இருந்தும் அவர்களால் நல்வாழ்க்கையைப் பெற முடியவில்லை என்றால், ஏன்?

நாட்டு மக்கள் இத்தனை உழைத்தும், நல்வாழ்வு பெற முடியாமலிருப்பதற்குக் காரணம், நாடு வளமற்றதா என்றால் அதுவும் இல்லை!

நிலக்கரியும், சுண்ணாம்பும் மட்டும் வைத்துக் கொண்டிருக்கின்ற இங்கிலாந்து — திராட்சைக் கொடிகளை மட்டும் வைத்திருக்கின்ற பிரான்சு — பால் பண்ணை நடத்தும் டென்மார்க் — இவை எல்லாம் உலகில் வாழ்கின்றன! மக்கள் செழிப்பான வாழ்வு பெற்றிருக் கின்றனர்!

புகையிலையும், தங்கமும், முத்தும், கரும்பும், இரும்பும், கனியும், நெல்லும் — இதர எல்லா வளமும் உடைய நாம் வாழ முடியாமல் ஏன் தவிக்க வேண்டும்?

தங்கம் இருக்கும் நம் நாட்டில் தரித்திரம் இருப்பா னேன்? முத்துக் கிடக்கின்றது கடலில் — நம் வாழ்வில் சத்து ஏதுமின்றி வாழ்வானேன்?

கரும்பு, விளைந்தும் நமக்கு வாழ்வு கசப்பானேன்?

இரும்பும் இன்ன பிற கனிப் பொருள்களும் கிடைத்தும், இல்லாமையில் நாட்டவர் இடர்படுவானேன்?

இவற்றை அனுபவிக்கின்ற — ஆளுகின்ற உரிமை நம்மிடம் இல்லை என்பதால் தானே!

விருதுநகரில் ஒரு தொழிற்சாலை தொடங்க வேண்டுமானால், டில்லியின் உத்தரவு பெற வேண்டும் என்ற நிலை இருக்கிறதே — சூத்திரக் கயிறு டில்லியிடம் தானே இருக்கிறது?

1947-க்குப் பிறகு ஏற்பட்ட நிலையினால் — பொம்மலாட்டத்தில் வரும் பொம்மைகள் போல் — டில்லி ஆட்டுவிக்கிறபடி எல்லாம் ஆடுகிற பொம்மைகளாகத் தானே நாம் இருக்க வேண்டியுள்ளது?

தாங்களாக — நாட்டவரின் நலம்பேண — ஏதேனும் காரியங்களைச் செய்ய அதிகாரம் படைத்திருக்க வில்லையே, இங்குள்ள மக்கள்.

—(நம்நாடு 2–7–'66)

# 28. அரசியலுக்கு அதிக முக்கியத்துவம் உண்மையிலேயே விரும்பத்தக்கதா?

அரசியலுக்கு இவ்வளவு முக்கியத்துவம் இந்த நாட்டிலே கொடுக்கப்படுவது உண்மையிலேயே விரும்பத் தக்கது கூட அல்ல; இன்றைக்கு மக்கள் கண்முன்னால் யார் தெரிகிறார்கள் என்றால், அரசியல்வாதிகள்தான் தெரிகிறார்கள்; எழுத்தாளர்கள் தெரிவதில்லை — விஞ்ஞானிகள் தெரிவதில்லை — கட்டடக் கலைஞர்கள் தெரிவதில்லை — மருத்துவர்கள் தெரிவதில்லை — பொறியியல் வல்லுனர்கள் தெரிவதில்லை. ஆனால், அரசியலில் இடம் பிடித்துக் கொண்டவர்கள் — இடம் பெற்றவர்கள் யாராக இருந்தாலும் — அவர்கள்தான் மக்கள் கண்முன்னால் தெரிகின்றார்கள்.

பிற நாடுகளிலே விஞ்ஞானிகளைப் பாராட்டுகின்ற அளவுக்கு — பொறியியல் வல்லுனர்களைப் பாராட்டுகின்ற அளவுக்கு நம்முடைய நாட்டிலேயும் பாராட்டப்பட வேண்டுமானால், “அரசியல்தான் முழுக்க முழுக்க மக்கள் கவனத்தை ஈர்க்கின்ற துறை” என்பது நீக்கப்பட்டாக வேண்டும். ஏனென்றால், நம்முடைய நாட்டினுடைய நிரந்தரமான செல்வம், அரசியலில் உள்ளவர்களால் மட்டுமே அளிக்கப்படுவதில்லை.

ஏர் பிடித்து உழுகின்றவன் நிலத்திலிருந்து செல்வத்தை எடுத்துத் தருகின்றான்; ஆசிரியர்கள் அறிவுச் செல்வத்தை அளிக்கின்றார்கள்; நோய் நொடிகளை நீக்குகின்ற வல்லவர்கள் மருத்துவத்துறையில் இருக்கின் றார்கள்; காட்டாற்றைக் கட்டுப்படுத்தி கரம்புகளைக் கழனிகளாக்கத் துணைபுரிகின்ற பொறியியல் வல்லுனர்கள் இருக்கின்றார்கள். இவ்வாறு நிரந்தரச் செல்வத்தைத் தருகின்றவர்கள், மக்கள் முன்னால் அதிகமாகத்

...ரியாமல் — நானும் கருத்திருமனும் மக்கள் முன்னாலே தெரிந்து கொண்டிருப்போமேயானால் அரசியல்வாதிகள் மட்டும் மக்கள் முன்னாலே தெரிந்து கொண்டிருப்போமானால், அரசியலில் வேகம் இருக்கலாம் — அரசியலில் விருப்பு வெறுப்பு காணலாம் — ஆனால், நாட்டு முன்னேற்றத்தில் நிச்சயம் தயக்கம் ஏற்படும்.

ஆகையினால்தான், பஞ்சாயத்துகளிலே — பஞ்சாயத்து யூனியன்களிலே பணியாற்றுகின்ற நீங்கள், வெறும் அரசியல்வாதிகளாக உங்களை ஆக்கிக் கொள்ளாமல் — கருதிக் கொள்ளாமல் — நாட்டுக்கு நிரந்தரச் செல்வத்தைத் தேடிக் கொடுக்கக் கூடியவர்களாக உங்களைக் கருதிக் கொண்டு, அந்த முறையில் பணியாற்றுவீர்களேயானால் — இந்த நாட்டின் முன்னேற்றத்தை வெகு எளிதாகவும், வெகு விரைவாகவும் நாம் பெற்று அளிக்க முடியும்.

**(அறிஞர் அண்ணா: ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மாநாட்டில்: 1969ல்.)**

# 29. போர்குறித்து புகழ்ப்பாட்டு

**கொலு இருக்கும்**
**கோவை அல்ல!**

என்று திட்டவட்டமாகத் தெரிவித்து விடுகிறார். போர் குறித்த புகழ்ப்பாட்டு என்றால், கொலு இருக்கும் மன்னனை பற்றித்தான் மற்றவர்கள் பாடியிருக்கிறார்கள்— இது நாள்வரை. நான் அப்படி அல்ல!

**குடிமகனாய் உள்ளோன்**
**ஊர்சுற்றும் உழைப்பாளி**
**தோள்குத்தும் முட்கள் நிறை**
**மூட்டைதனைச் சுமப்போன்,**
**தாங்கொணாப் பாரந்தனைத்**
**தூக்கித் தத்தளிப்போன்**

களத்தில் பணிபுரிவோன்
உலைக்கூடத்து உழல்வோன்
ஏதோ இசை எழுப்பி அதனால்
இனிமைபெற எண்ணுபவன்
ஏரடிப்போன் !
தூக்கம் தொட்டிழுக்கும்
துயர் கக்கும்
கண்கொண்டான்.

*இவர்களைப் பற்றி நான் பாடுவேன் என்கிறார். இனி மேலா பாடவேண்டும்; இதோ பாடியே விட்டாரே,*

தூக்கம் தொட்டிழுக்கும்
துயர் கக்கும்
கண்கொண்டான்

*என்ற வரிகள் அந்த ஏழையின் நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டிவிடுகிறதே!* **மேஸ்பீல்டுடைய** *இதயந் தன்னில் எவரெவர் இடம்பெற்றுள்ளார் என்பது விளக்க மாகிறதே. இந்தக் கனிவு, மற்றவர்களால் புறக்கணிக்கப் பட்டுப்போன, ஏழை எளியோர்க்காக, உழைத்து உருக்குலைந்தோருக்காக! ஏழையிடம் இந்தக் கனிவு காட்டாத கவிவாணர்களை அலட்சியமாகக் கருதுகிறார்; ஒதுக்கித் தள்ளுகிறார்;*

மற்றவர் பாடட்டும்
மகிழ்ச்சி தரும்
மாடு மது குறித்து !

*என்று இடித்துரைக்கிறார். செல்வவானைப் பற்றி அவனுடைய சிங்கார வாழ்வு பற்றி, அவன் மந்தகாசம் பற்றி, அவன் மாளிகையிலுள்ள மதுவகை பற்றிப் பாடுகிறார்களே அவர்களைக் குறித்து மேல்பீல்டுவுக்கு அத்துணை எரிச்சல். அவர்கள் பாடட்டும் அவை பற்றி என்று. ஒதுக்கித் தள்ளிவிடுகிறார்.*

என் பாடல்
குப்பை கூளம் பற்றி
குப்பன் சுப்பன் குறித்து

*என்று அறிவிக்கிறார். இவர்களைப் பற்றிய கவிதையிலே கவர்ச்சி இருக்காதே, மெருகு இருக்காதே என்று கேட்பவர் உளர் என்பது தெரியுமல்லவா இந்தப் புதுமைக் கவிஞனுக்கு?*

— அண்ணா

# 30. அறிவை வழங்கியது அண்ணாவின் எழுதுகோல்!

## முதலாளி

*முதலாளி எப்படி உற்பத்தியாகிறான்? எதனால் ஒருவன் முதலாளியாகிறான்? — இதற்குச் சுருக்கமான பதில், 'தனிப்பட்ட மனிதன் இலாபத்தால் முதலாளியாகிறான்' என்பது தான்! இன்னும் கொஞ்சம் விளக்கமாக — மார்க்ஸ் கூறுகிறபடி பார்த்தால் — தொழிலாளிகளின் உழைப்பை முதலாளி திருடிக் கொள்கிறான்; ஆகவே அவன் முதலாளியாகிறான்!*

*வாழ்க்கைத் தேவைகள் அனைத்தையும் அனைவராலும் பூர்த்தி செய்துகொள்ள முடிவதில்லை; இல்லாமை அல்ல இதற்குக் காரணம்; செல்வத்தைப் பெருக்கிடும் சாதனம் சிலரிடமே சிக்கிவிட்டதால் ஏற்பட்ட சீரழிவுதான்!*

## பாட்டாளி

*பொதுநலம் — பாட்டாளி ஆட்சியிலேதான் மலர முடியும்! அந்த ஆட்சியின் வெற்றியினால் மட்டுமே உழைப்பு ஊரழிக்கும் காரியமாகாது தடுக்கவும், விஞ்ஞானம் விபரீதத்தைப் பொழியாது நன்மை பயக்கக் கூடியதாக அமையவும் வழி பிறக்கும்!*

வேலை — மனிதத்தன்மையை மயக்காத அளவு இருக்கவேண்டும்; வேலை நேரத்தை மட்டுமல்ல நான் குறிப்பிடுவது; வேலை முறை — தன்மை — வேலை செய்பவனுக்கு வேலை நேரத்தில் வேலைக்குத் தேவையான வசதிகளைத் தருவது — எல்லாவற்றையும் சேர்த்துத்தான் கூறுகிறேன்!

பாட்டாளிகள் — ஆலைத் தொழிலிலே ஈடுபட்டுச் சங்கம் அமைத்துக்கொண்டு — கூலி உயர்வு, குடியிருக்க வீட்டு வசதி, சுகாதார வசதிகள் ஆகியவைகளுக்காகக் கிளர்ச்சிகள் நடத்துபவர்கள் மட்டுமல்ல! பண்ணை வேலை செய்பவன், கல் உடைப்பவன், கட்டை வெட்டுபவன், குப்பை கூட்டுபவன் போன்றவர்களின் சங்கமோ, கிளர்ச்சி செய்யும் உணர்ச்சியைக் கூடப் பெறாமல் சிதறி, வாழ்க்கையைச் சிதைத்துக் கொண்டுள்ள கோடிக்கணக்கான தொழிலாளரையே குறிப்பதாகும்!

“இது என்ன முறை, ஐயா; காலமெல்லாம் உழைக்கும் என்னை வறுமை விரட்டுகிறது; ஊரை மிரட்டி வாழும் உமக்கோ, போக பாக்கியம் ஏராளமாக இருக்கிறது; இது நியாயமா?” என்று ஏழை, சீமானைப் பார்த்துக் கேட்கும் முதல் கேள்விதான், புரட்சியின் ஆரம்ப அத்தியாயம்!

## முதலாளித்துவ முறை இது!

பால் தரும் வரையில் பசு தொழுவத்தில் இருக்கிறது; பால் தருவது தீர்ந்ததும் கிராமத்திற்குத் துரத்தப்படுகிறது!

அதுபோலத்தான், முதலாளித்துவ முறை — இலாபம் கிடைக்கும் வரையில் தொழிலாளருக்கு வேலை தரும்; இலாபம் இல்லையேல், ‘வேலையில்லை’ என்று கூறிவிடும்.

## வறுமை எப்படி ஒழியும்?

பண்ணை முதலாளி உழைக்க வராமலும், கூலி விவசாயி நிலமற்று இருந்தாலும் விவசாயம் செழிக்காது; கிராமப்புறம் வளமாக இராது; வறுமை ஒழியாது!

## பணியினில் வழுவிடான்

*உழவன், செந்நெல் மணியினை அடித்தெடுத்துக் களஞ்சியம்தனில் சேர்த்திடும் வரையிலே, தான் மேற்கொண்ட பணியினின்றும் வழுவிடான்!*

## உழைப்பு — முயற்சி தேவை

*வாழ்க்கைக்கு வளமான பொருள்களைச் சிறிதும் வாட்டமின்றிப் பெற முடியாது; இவற்றைப் பெற ஓயாத உழைப்பும் — சலியாத முயற்சியும் வேண்டும்.*

## வேலை நிறுத்தம் — விம்மலின் எதிரொலி!

*வேலைநிறுத்தம் என்பது, தொழிலாளியின் வீம்புப் போராட்டமல்ல! இரத்தக் கண்ணீர் — அவனுடைய வேதனைப் புயல் — அவனுடைய இல்லத்திலே குமுறியெழும் விம்மலின் எதிரொலி!*

*தொழிலாளர் உலகில் வேலைநிறுத்தம், வெறும் பொழுது போக்கு அல்ல; ஆபத்துக்குத் தாமதமாக அச்சாரம் தரும் துணிவு பிறந்த நிலைமை; அந்தத் துணிவும் எளிதில் ஏற்பட்ட சிறிய சம்பவமல்ல — தாங்க முடியாத வறுமையின் விளைவு!*

## பணக்காரன்

*பொதுவுடைமைவாதிகட்கு, 'முதலாளி யார்?' என்பது புரியவில்லை — தெரியவில்லை; சரிவரப் புரிந்துகொள்ள மனமுமில்லை; 'பணக்காரன்தான் முதலாளி' என்று அவர்கள் தவறாகக் கருதுகின்றனர்; பணக்காரனுக்கும் — முதலாளிக்கும் உள்ள வேறுபாட்டை அவர்கள் அறியவில்லை!*

*பணக்காரன் முதலாளி அல்ல; பணக்காரன்—குளம் குட்டைகளுக்குச் சமமானவன்; முதலாளி—ஆற்றுக்குச் சமமானவன்; மழை பெய்தால்தான் குளம்-குட்டைகளில் நீர் இருக்கும்—இன்றேல் வற்றிவிடும்; ஆனால் ஊற்றோ—*

என்றும் நீர் சுரந்து கொண்டே இருக்கும்; இத்தகைய வேறுபாடு இருக்கிறது, பணக்காரனுக்கும்—முதலாளிக்கும்

**பிரச்சினைக்கு வழி!**

இன்றையதினம் நடைபெறுகின்ற இந்தக் கூட்டம், மத்திய சர்க்காரில் பல்வேறு துறைகளில் பணியாற்றும் ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு, மக்களின் ஆதரவு இருக்கிறது என்பதைக் காட்ட நடத்தப்படுவதாகும்.

உங்கள் அனைவருக்கும் தெரியும்—மிக நல்ல முறையில் நடந்துகொண்டாலும்கூட, சர்க்கார் நம்முடைய பிரச்சினைகளைக் கவனியாது—என்பது!

"மத்திய சர்க்கார் ஊழியர்களின் கூட்டத்தில் இந்த அண்ணாதுரைக்கு என்ன வேலை?" என்று அரசியல் தெரியாத அப்பாவிகள் — பின்னாலே ஒரு நாளைக்குப் பேசக்கூடும்.

இந்தக் கூட்டத்தில் நான் கலந்து கொள்வதால், 'மத்திய சர்க்காரின் அமைப்பை ஆதரிக்கிறேன்' என்று பொருள் அல்ல — மனித இனத்தின் கோரிக்கையை ஆதரிக்கிறேன் என்று பொருள்!

10 ஆண்டுகளுக்கு முன்னால் உங்களை யாராவது 'தொழிலாளி' என்று சொன்னால், உங்கள் முகம் சுளித்து விடும்; 'நாங்கள் ஊழியர்கள் அல்லர்; உத்தியோகஸ்தர்கள் - அதிகாரிகள்' என்று சொல்வீர்கள்; ஆனால், இன்று, 'நாங்களும் ஊழியர்கள்தான்' என்று நீங்கள் கூறுவதைப் பார்த்து நான் பூரிப்படைகிறேன்.

இந்த நல்ல உணர்ச்சி நாட்டுக்கு நல்ல எதிர் காலத்தைக் கொண்டுவரும் என்று திடமாக நம்புகிறேன்.

"தொழில் நடத்துகின்றவர்கள், தங்களுடைய தொழில் செம்மையாக நடைபெறுவதற்குத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் சீர்பெற வேண்டும் என்பது — மனித இனம் ஏற்றுக் கொண்டிருக்கின்ற மாபெரும் நீதியாகும்; அதனை மறுக்கின்றவர்கள் எவ்வளவு உயரத்தில்

இருந்தாலும், எவ்வளவு சீக்கிரமாக உயர்ந்தார்களோ — அதைவிட வேகமாகக் கீழே இறங்கி விடுவார்கள்!

'மக்கள் குரல்தான் மகேசன் குரல்' என்பது, ஜூலியஸ் சீசர் காலந்தொட்டு இன்று வரை இருக்கும் நியதியாகும்.

எனவே, மக்களிடத்தில் உங்களுடைய குறைகளை வைப்பதற்கு இந்தக் கூட்டம் முதல்படியாக இருக்க வேண்டுமென்று கருதுகிறேன்.

நீங்கள் எல்லாத் தந்திரங்களும் தெரிந்த ஒரு பெரிய சர்க்காரை எதிர்த்துப் போராடப் போகிறீர்கள்; மொரார்ஜி தேசாய்க்கு ஒரே ஒரு மொழியில் சொன்னால்தான் புரியும் — அதுதான், 'பலாத்கார மொழி!' இதை நாம் பம்பாய், ஆமதாபாத் போன்ற இடங்களில் பார்த்திருக்கிறோம்!

ஆகவே, உங்கள் போராட்டத்திற்கு எங்கள் ஆதரவு உண்டு; அதைப்போல, எல்லா அரசியல் கட்சிகளும் கட்டாயம் ஆதரிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

**— மத்திய அரசு ஊழியர் 'கோரிக்கை நாள்' பொதுக் கூட்டத்தில் (25–5–60) அண்ணா ஆற்றிய உரை.**

## தொழிலாளி வாழ்வில் மறுமலர்ச்சி

ஒரு சிலர் ஓயாது உழைத்து — சலிப்பு, கோபம், வெறுப்பு, பகை என்னும் உணர்ச்சிகளுக்குப் பலியாகி விடாமல் புன்னகையும் பெருமூச்சும் கலந்த நிலையில் பணிபுரிந்து — பட்ட மரம் துளிர் விடும் வகையில் பாடுபட்டு — வெற்றி கண்டு — மறுமலர்ச்சியை உண்டாக்கி வைக்கிறார்கள்!

தொழிலாளி வெறும் உழைப்பாளியாக மட்டுமே இருக்கும் நிலை மாறி, தொழிற்சாலைகளிலே அவன் பங்காளியுமாக்கப்பட்டால், விஞ்ஞானத்தைத் தன் கூட்டாளி என்று உறவு கொண்டாட முடியும்.

பொதுநலம் — பாட்டாளி ஆட்சியிலேதான் மலர முடியும்! அந்த ஆட்சியின் வெற்றியினால் மட்டுமே, உழைப்பு — ஊரழிக்கும் காரியமாகாது தடுக்கவும், விஞ்ஞானம் — விபரீதத்தைப் பொழியாது நன்மைகள் பயக்கக்கூடியதாக அமையும் வழி பிறக்கும்!

பொருளாதார ஏற்றத் தாழ்வையொட்டித் தொழிலாளியின் வாழ்வு இருக்கிறது; அதைப்போல், அரசியலையொட்டியும் தொழிலாளி இருக்கிறான்!

அரசியலை நீக்கித் தொழிற்சங்கத்தைப் பார்க்க முடியாது; தொழிற் சங்கத்தை நீக்கி அரசியலைப் பார்க்க முடியாது!

உலக அரங்கில் மிக முக்கியமானதாகவும் — பலருடைய மனதை மருட்டக் கூடியதாகவும் தொழிலாளர் பிரச்சினை வளர்ந்துவிட்டது! நீதியை — நேர்மையை — சமுதாயத்தில் அமைதியை — சுபிட்சத்தை விரும்பும் எவரும், தொழிலாளர் பிரச்சினையை அலட்சிப் படுத்தியோ அல்லது அடக்கு முறைகளால் அழித்துவிடக் கூடுமென்றோ எண்ண முடியாது!

## உழைப்பாளர் கூட்டம் ஏங்கும் நிலை ஏன் ?

இங்கே வந்திருக்கும் தாய்மார்களையும் — அவர்கள் பெற்றெடுத்த செல்வங்களையும் உற்றுப் பார்க்கிறேன்; அந்தத் தாய்மார்களின் உடலில் சிறு குண்டுமணி அளவுக்குக்கூடத் தங்கம் இல்லை! அந்தக் குழந்தைகள் சிரிக்கும்போது, தெரியும் பல் வரிசைதான் அவர்களுக்கு முத்தாரம்! இந்த அளவிலே, நம்முடைய தாய்மார்கள் இருக்கிறார்கள்!

நமக்கு இருக்க இடம் இல்லை; இரண்டுவேளை வயிறாரச் சாப்பிடுவதற்கு உணவு இல்லை; இந்த நிலையில் இருப்பதற்கு, 'இவர்கள், யாருக்கு என்ன கெடுதல் செய்தார்கள்? இவர்கள் எந்தத் தெய்வத்தைக் கும்பிடாமல் இருந்தார்கள்? சுவரில் சினிமாப் படம் ஒட்டியிருந்

தால்கூட, அதையும், 'கடவுள்' என்று நம்பிக் கன்னத்தில் போட்டுக் கொள்ளுபவர்கள் — இந்த 1960-லும் இருக்கிறார்கள்!

இருந்தும், உழைக்காமல் இருக்கிறார்களா என்றால், இல்லையே! இப்படிப்பட்ட உழைப்பாளர் கூட்டம் நம்முடைய நாட்டிலே ஒரு வேளைச் சோற்றுக்கு திண்டாடிக் கொண்டிருக்கிறது!

**—14—4—60–ல் நடைபெற்ற கழகக் கூட்டத்தில் அண்ணா ஆற்றிய உரை**

## மனத் திருப்தி

எத்தொழிலில் ஈடுபட்டவர்களுக்கும் மனத் திருப்தி இருக்கவேண்டும்; அது இப்பொழுது நமது நாட்டிலுள்ள அலுவலகங்களில் பணியாற்றுபவர்களுக்கு இல்லை; குறிப்பாக, ரெவினியூ இலாகாவை எடுத்துக் கொண்டால், அங்கு ஒரு தாசில்தார் இருப்பார்; அவரைப் பார்ப்பதற்கு ஒரு கிராம முன்சீப் வருவார்; ஆனால், அவருக்கு உட்காருவதற்குக்கூட நாற்காலி கொடுக்காமல்—அவரைப் பேசவும் விடாமல்—சற்றுக் கோபமாகவே பேசித் திருப்பி அனுப்பிவிடுவார்! இது போன்ற நிலைமை, இந்த சனநாயக ஆட்சியில் இருக்கிறது!

நான் அதிகாரிகளைக் குறை சொல்லுகிறேன் என்று எண்ணவேண்டாம்; அவர்கள் மனத் திருப்தியில்லாமல் வேலை செய்கிறார்கள்; 'மக்களுக்காக நாம் பணியாற்று கிறோம் என்ற எண்ணம் அவர்களிடத்தில் இல்லை! ஆகவேதான், அவர்கள் அப்படி நடந்துகொள்கிறார்கள்!"

**— அஞ்சல் ஊழியர் கூட்டத்தில்; அண்ணா 15–3–60.**

## படித்தவர்கள் பட்டாளம்!

"பாட்டாளி மக்கள் — தொழிலாளத் தோழர்கள் — உழைத்துப் பிழைக்கின்றவர்கள் — அன்றாடங் காய்ச்சிகள் — அன்னப்பாலை அமுதென உண்கிறவர்கள் மட்டும்தான் கழகத்தின் பக்கம்" என்று சொல்லிக் கொண்டிருப்பவர்கள்

கோவைக்கு வந்திருந்தால், படித்தவர்கள் பட்டாளம் — பண்பாளர் திருக்கூட்டம் — கழகத்தின் பக்கத்தில் அணிதிரண்டு நிற்கும் காட்சியைக் கண்டிருக்கலாம்."

—கோவை வழக்கறிஞர்கள் சங்கத்தில்
ஆற்றிய ஆங்கில உரையில்

## மனமிருந்தால் மார்க்கம் ஏற்படாதா ?

"ஏழை எளிய பாட்டாளிகள், வேலை செய்யும் இடங்களிலேயே குடியிருந்தால்தான் வசதியாக இருக்கும்; கோடம்பாக்கத்தில் குடியிருந்து கொண்டு, கொத்தவால் சாவடியில் மூட்டை தூக்கியோ — வண்டி இழுத்தோ, ஒரு ரூபாய் — எட்டணா கூலி பெறும் ஏழை எப்படி வீட்டுக்கும் — வேலை செய்யும் இடத்துக்கும் போய்வர முடியும்?

தொழிலாளர்களுக்கு அவர்கள் தொழில் செய்யுமிடங்களிலேயே பல அடுக்குக் கட்டடங்கள் கட்டி அளிக்கலாம்; இப்படிப்பட்ட குடியிருப்பு விடுதிகளைக் கட்ட அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட அளவு பணமும் — தொழிலதிபர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு பணமும் போடலாம்.

தொழிலதிபர்கள் பணம் போடுவதால் அவர்களுக்கு நஷ்டம் ஒன்றுமில்லை; தொழிலாளர் நிம்மதியாக வாழ்ந்தால், தொழிலும் இலாபகரமாக நடைபெறும்.

தொழில் நல்ல முறையில் நடக்கிறது என்றால், தொழிலதிபர்கள் பணம் போடுவதில் தடை என்ன இருக்க முடியும்?

பம்பாய்—கல்கத்தா போன்ற பெரிய நகரங்களில், மாடிக் கட்டடங்களில் தொழிலாளர்கள் வசிக்கின்றனர்; 'வீடு கட்ட நிலமில்லை — இடமில்லை' என்று சொல்லுவதில் பொருளில்லை.

வானத்தில் எட்டியமட்டும் சொந்தமிருக்கிறது; எனவே, இருக்கின்ற நிலத்தில் வானமளாவிய மாடிக்

*கட்டிடங்கள் கட்டலாம்; மனமிருந்தால் மார்க்கம் ஏற்படாதா?* —குடிசை வாழ்வோர் மாநாட்டில்; 14–5–61.

**முதலாளித்துவம் சாய்ந்திட..... !**

*முதலாளித்துவம்—ஒரு மதம் பிடித்த யானை; அந்த யானையைப் பிடித்து—வாழை நாரினால் அதன் துதிக்கையைப் பிணைத்து—ஒரு வாழை மரத்தில் கட்டி விட்டு, 'பார், பார்; நான் முதலாளித்துவத்தைக் கட்டிப் போட்டு விட்டேன்' என்று கூறினால் சரியாகாது!*

*"யானை ஓர் இழுப்பு இழுத்தால், அதன் கட்டு அறுந்து விடும்; அதுமட்டுமா? விடுபட்ட யானை, தான் கட்டப்பட்டிருந்த வாழை மரத்தையேகூட வாயில் போட்டுக் கொள்ளும்!*

*"ஆகவே, வெறும் நாரினால்—வாழை மரத்தில் யானையைக் கட்டுவதில் பயன் இல்லை!"*

—அறிஞர் அண்ணா

# 31. உழைக்கும் கரங்கள்

**கள்ளக் கையெழுத்துப் போடாத கரங்கள்!**
**திருட்டுக் கணக்கு எழுதாத கரங்கள்!**
**மறந்தும் மற்றவர்கள் மடியில் கை**
**வைக்காத கரங்கள்!**
**அத்தனையும் உழைக்கும் கரங்கள்!** — அண்ணா

**பாட்டாளிகளுடைய கடமை சமுதாயத்திற்கு**
**நன்மை செய்வதிலே இருக்கிறது.** — அண்ணா

*"அன்னக்காவடிகள் தரும் ஆதரவு பணக்காரர்கள் தரும் 'செக்'கை விட, ஜமீன்தாரர்கள் தரும் பணமுடிப்பு களைவிட விலை உயர்ந்தவை, வலுவுடையவை!"*

— பேரறிஞர் அண்ணா

*தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்கிறார்கள் என்றால் தங்கள் மாளிகையிலே உள்ள மூன்றாவது*

மாடிக்குப் பளிங்குக்கல் அமைக்கப் பணம் கேட்கவில்லை. குடிசையில் படுத்துறங்கும் போது பசியால் சிறுகுடலைப் பெருங்குடல் தின்று விடாதபடி தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவே கூலி கொஞ்சம் கூட்டிக் கொடுக்கும்படி கேட்கிறார்கள்.

"உலகம் மாயை இல்லை; உழைப்பவன் வாழ்வும் மாயமன்று; ஆனால் உழையாதவன் உல்லாசத்தில்தான் மாயம் இருக்கிறது" — **பேரறிஞர் அண்ணா.**

## ஓடப்பர் தரும் பகட்டுகள்

"முழு வயிறு காணாதோர்
முதுகெலும்பு முறியப் பாடுபடுவோர்
வாழ்வின் சுவை காணார்,
வலியோரின் பகடைக் காய்கள்,
ஓடப்பர் – ஆகிய இவரெல்லாம்
தருகின்ற வரிப்பணமே
கோட்டைகளாய்,
கொடி மரமாய்,
பாதையாய்,
பகட்டுகளாய்,
அமுல் நடத்தும் அதிகாரிகளால்
அறிவு பெற அமையும்
கூடங்களாய்த் திகழ்கின்றன. — **அண்ணா.**

## சந்தா செலுத்துவது அவசியம்

ஒரு தொழிற்சங்கம் போதுமான நிதி வசதி இல்லாமல் — தன் சொந்தப் பலத்தை நம்பி நிற்கவோ அன்றி சுதந்தரமான அமைப்பாகச் செயல்படவோ, எதிர்பார்க்கும் பணிகளைத் தொழிலாளர்களுக்குச் செய்யவோ முடியாது.

தொழிற்சங்கத்தின் நிதிவசதி போதுமானதாக — தொடர்ச்சியானதாக — தனது உறுப்பினர்களிடம் இருந்து

மட்டுமே திரட்டப்பட்ட நிதி வசதிகளாக இருத்தல் வேண்டும்.

தொழிற்சங்க வருவாய்க்கு மற்ற வழிகளில் நிதி திரட்டுவது, தொழிற்சங்க சுதந்திரத்தின் ஆணிவேரை வெட்டுவதாக அமையும்.

## பலவீனத்திற்குக் காரணம்

தொழிற் சங்கங்களின் பலவீனத்திற்குப் போதுமான நிதிவசதி இன்மையே அடிப்படைக் காரணமாகும்.

நமது நாட்டில் சந்தாத்தொகை மிகவும் குறைந்த அளவாக உள்ளது. உறுப்பினர்கள் அதையும் ஒழுங்காகச் செலுத்துவதில்லை. அதன் காரணமாகவே, முறையான அலுவலகங்களையோ முழுநேர ஊழியர்களையோ வைத்துக் கொள்ள வழியின்றி, ஆற்ற வேண்டிய பணிகளை முறையாகச் செய்ய முடியாமற் போய் விடுகிறது.

## அந்த நாடுகளில்

தொழில்வளம் பெருகிய நாடுகளை சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பியபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்த நாட்டிற்கும் — நம் நாட்டிற்கும் உள்ள வேறுபாட்டினை அவருக்கேயுள்ள பாணியில்:

—"......... அந்த நாடுகளில், 'நேரம் போதவில்லை' என்கிறார்கள்; ஆனால் இங்கோ, 'நேரம் போகவில்லை' என்கின்ற நிலை உள்ளது. நாமும் 'உழைப்பதற்கு நேரமே போதவில்லை' என்று ஆயாசப்படும் நிலையில், உழைப்பாளி மக்கள் அனைவரின் உழைப்புச் சக்தியும் ஒரு சேரப் பயன்படுத்தப்படுமானால், நாட்டுப் பொருளாதாரம் — நிச்சயம் — எதிர்பார்க்கின்றபடியே பெருகும் என்பதில் சந்தேகமில்லை.

"அனைவரும் முழுவேலைவாய்ப்பும் பெற்று — அதன் மூலம் சுய வளர்ச்சி பெற்று — நாட்டுப்

பொருளாதார வளர்ச்சியில் ஒவ்வொருவரையும் பங்கு பெறுமாறு செய்வது மிக மிக அவசியமானதாகும்."

### உழைப்பவனின் உதிரம்

உழைப்போனின் உதிரத்தை உண்டு உருசி கண்டவனும், ஒரு கணம் உள்ளமதில் உண்மைக்கு இடமளித்து, 'பெற்றோம் நாம் பெருஞ்செல்வம், மற்றெதனால் — அவர் உழைப்பதனால்; உழைத்தோர் உருக்குலைந்தார் — உண்ட நாம் பெருத்து விட்டோம்; என்றும் இந்நிலைதான்' என்று இறுமாந்து இருந்திடுதல் இனியும் நடவாது; குன்றெடுக்கும் நெடுந்தோள்கள் குலுக்குவது கண்டிட்டோம்; ஆட்காட்டி விரலுக்கு அடங்கினார், 'ஏன்' என்று அழுத்தமும், திருத்தமும் அழகு பெறக் கேட்டெழுந்தார்; ஆர்த்தெழுந்து — அவர் உரிமைக் காக ஆணையிட்டுக் காட்டு முன்னம், அவா அடக்கி 'அவரவர் உழைப்புக்கு அவரவரே உரிமையாளர் என்றுள்ள அறநெறிக்கு அடிபணிவோம் — பிணியாகோம்' என்று தனக்குத்தானே தத்துவம் கூறிக்கொள்ளும் புத்தறிவு பூத்திட மெத்தவும் உதவும் மேலான நாள்!

பேரறிஞர் அண்ணா —1957 'திராவிட நாடு'
பொங்கல் மலரில்.

## 32. தொழிற் சங்கத்தில் அண்ணா

ஒரு சமயம் அண்ணா அவர்கள் சென்னை இணைப்புப் பெட்டித் தொழிலகத்தில் நடந்த பொங்கல் விழாவிற்கு வருகை தந்திருந்தார்; அதுபோது அவர் பேருரையாற்றுகையில்,

"தொழிலாளர்களால் நடத்தப்படும் இத்தமிழர் விழாவில், தொழிலாளியாகப் பங்கு கொள்கிறேன்."

எனத் தொடங்கி மேலை நாடுகளில் 'தொழிலாளி' என்று தம்மை சொல்லிக் கொள்ள ஒவ்வொருவரும்

எவ்வளவு பெருமைப்படுகிறார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாக ஒன்றைச் சொன்னார்கள்:-

நம் இந்திய நாட்டில், பெயருக்குக் கீழே - டாக்டர், வக்கீல், எஞ்சினீயர் எனக் குறிப்பிடுவதைப் போன்று, மேலை நாடுகளில் தொழில்களை இயக்கும் தொழிலாளர்கள், தங்கள் தொழிலின் பெயரை - அதாவது 'ஃபிட்டர்' என்றும், 'வெல்டர்' என்றும் 'கார்பெண்டர்' என்றும் அழகாக குறிப்பிட்டுள்ளனர். எனச் சுட்டி காட்டினார்; அவர் மேலும் கூறியதாவது:-

அங்கு தொழில்களுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. தொழில் முக்கியத்துவம் பெறுவதால் - அதனைச் செய்யும் தொழிலாளர்கள் மதிக்கப்படுகின்றனர்; தொழிலாளர்கள் மதிக்கப்படுவதால் தொழிற்சாலை சுமூகமாக இயங்குகிறது. தொழிற்சாலை சுமூகமாக இயங்குவதால் - தொழில் அமைதியும் தரமான பொருட்களும் உற்பத்தியாகின்றன. தரமான பொருட்கள் உற்பத்தியாவதால் - பொருள்களுக்கு நல்ல உயர்வும், மதிப்பும் ஏற்படுகிறது; பொருட்கள் விற்பனையால் - பொருளாதாரம் பெருகுகிறது; பொருளாதாரம் உயருவதால் - அந்நாடு ஏற்றம் பெறுகிறது!

அதுபோல் நம் இந்திய நாடும் - தமிழ் நாடும் ஏற்றம் பெற தொழிலாளர்கள் அனைவரும் 'கடமையைச் செய்து, உரிமையைப் பெறுவோம்' எனும் கொள்கைப்படி - தாங்கள் செய்யும் தொழிலைச் செம்மையாகச் செய்வதுடன், அதில் நாட்டுப் பற்றும் - பாசமும் கொண்டு செய்திடல் வேண்டும்; அதுபோல் தொழிலதிபர்கள், தொழிலாளர்களை நன்கு உணர்ந்து மதிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும்.

51427



தொகுப்பாசிரியர்

முனைவர் ஆ. கோ. குலோத்துங்கன்

மணிவாசகர் பதிப்பகம்